
සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 142 மார்ச் 12 - மார்ச் 25, 1998 விலை ரூபா 10.00



கிளிநொச்சியையாவது பிடித்துவிட்டதர்வது என்று அறிக்கை விட்டது அரசாங்கம். சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டத்தின் போது புலிகளிடம் பறிபோன கிளிநொச்சியை அது பறிபோகவே இல்லையென்று சாதித்தவுடன் மீண்டும் அதைப் பிடித்தபோது கிளிநொச்சி என்று எழுதப்பட்ட பெயர்ப்பலகையைத் தொலைக் காட்சிகளில் காண்பித்து அது எப்போதுமே தமது கட்டுப்பாட்டில் தான் இருந்தது என்று அறிக்கை விட்டது. ஆனால், தாம் பிடித்த பகுதிகளில் எடுத்த புகைப்படங்களை இப்போது வெளி யிட்டுள்ளார்கள் புலிகள். மேலேயுள்ள படம் அதிலொன்று, மேலதிக படங்கள் பக்கம் 17 ல்.

## வெலிக்கடை :

## சித்திரவதைக் குள்ளாகும் பெண் கைதிகள் !



# மருதானை குண்டு வெடிப்பு அப்பாவிகளா இலக்கு ?

## வவுனியா : டயரில் எரிந்த சடலங்கள் ?

## தமிழக அரசியல் : மாறும் காட்சிகள்

## பெண்ணியம் : சுனிலா அபேசேகரவின் நேர்முகம்

# யாழ்ப்பாணச் செய்திகள்

## கடைசிப் புகலிடம்!

யாழ் மாவட்டத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ்க்கட்சியொன்றின் சார்பில் கரவெட்டி பிரதேச சபைக்குப் போட்டியிட்ட ஒருவர் தற்போது தனது பெயர் உள்ள பட்டியலைத் தருமாறு அரசாங்க அதிகாரிகள் சிலரிடம் இரகசியமாகத் தொடர்பு கொண்டுள்ளாராம். காரணம் இந்தத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் பட்டியலைக் காட்டி புலிகள் தன்னைத் தேடுகிறார்கள் எனக்கூறி வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் கோரப் போகிறாராம்.

## மோதலில் முடிந்த கதை!

நடந்து முடிந்த யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இவரது பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதற்கு அப்பகுதி கிராம சேவகர் ஒருவர் தான் காரணம் எனக்கூறி குறிப்பிட்ட கிராம சேவகர் வீதியால் வந்து கொண்டிருக்கும் போது கிராமசேவகரை வழிமறித்து தாக்கினார் வேட்பாளர். உடனே கிராம சேவகரும் அவருடன் வந்த மற்றொரு கிராம சேவகரும் சேர்ந்து வேட்பாளரைத் தாக்கத் தொடங்கினர். பின்னர் மக்கள் விலக்குப்பிடித்து அனுப்பிய வைத்தனர்.

## தற்கொலை முயற்சி!

நடந்து முடிந்த யாழ் மாவட்ட உள்ளூராட்சிச் சபைத்தேர்தலில் புளொட்டின் சார்பில் நெல்லியடி பிரதேச சபைக்குப் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஜெயக்குமார் (கடாபி) என்பவர் அண்மையில் தற்கொலை முயற்சியிலீடுபட்டுத் தப்பியுள்ளதாகத் தெரியவருகிறது. இவரை இராஜினாமா செய்யச்சொல்லி புளொட் வற்புறுத்தியதையடுத்து தற்கொலை முயற்சியிலீடுபட்ட இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட பின் குணமடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

## அரச மொழியில் சமாதானம்!

கடந்த மார்ச் 02 அன்று துரையப்பா விளையாட்டு மைதானத் திறப்பு விழா நடைபெற்றது. இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய நாக விகாரை பிக்கு யாழ் மக்களுக்குத்தேவை சமாதானமே, யுத்தம் அல்ல என்றார். யுத்தத்தை விரைவாக முடிப்பதற்கு இந்த மைதானத்திலிருந்து நான் பிரார்த்திக்கின்றேன் என்றார். அத்துடன் அன்று இருந்த இராணுவம் அல்ல இப்போது இருக்கும் இராணுவம் என்றார். விழாமுடிவில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தேசியகீதம் என்ன மொழியில் இசைக்கப்பட்டது என்று கேட்கிறீர்களா உத்தியோக பூர்வ மொழியில் தான்.

## கண்டனம்

கடந்த 12.02.1998 அன்று இக்பால் அத்தாஸ் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைப்பயமுறுத்தலைக் கண்டித்து வட இலங்கைப்பத்திரிகையாளர் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் 'இனி மேலும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்கும் பொருட்டு இன, மத, மொழி பேதங்களை மறந்து பத்திரிகையாளர்களாகிய நாம் ஒன்று பட்டுச் செயற்படுவோம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் சேவைக்கு வாகனம் தேவை!

கடந்த பெப். 28ம் திகதியன்று ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனமான ஜி.டி.இஸட் நிறுவனத்தினர் யாழ் மாநகர மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனைச் சந்தித்து உரையாடினர். மேயர் 15 நிமிடம் தாமதமாகவே கூட்டத்தில் கலந்து கொண்டார். அப்போது அங்கு வந்திருந்த ஜேர்மனிய அதிகாரி மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டார். உடனே அம்மையார் நான் வருவதற்கு வாகனம் இல்லை. அதனால் தான் தாமதமாக விந்தேன் என்றார். இது வரை காலமும் யாழ் மாநகர ஆணையாளர் அரசாங்கம் வழங்கிய பிக் அப்பிலா ஓடித் திரிந்தார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கூறும் இவர்களின் சேவை இப்படித் தான் இருக்கப் போகிறது போலிருக்கிறது. நாட்டின் தலைவரே மணித்தியாலக் கணக்கில் தாமதமாக வரும் போது யாழ் நகர மேயர் 15 நிமிடம் தாமதமாக வந்தாலென்னவோ?

## காலைக்கதிரும் சூரியகாந்தியும்!

காலைக்கதிர் என்ற பெயரில் யாழ்ப்பாணத்திலிருந்து வாரப்பத்திரிகை ஒன்று வெளிவந்துள்ளது. ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய உறுப்பினராகவும், ஈழநாதம் உதவி ஆசிரியராகவும் செயல்பட்ட பால நடராஜன் (சின்னபாலா, ஐயர் பாலா, இளையவன் என்ற பெயர்களில் அழைக்கப்படுபவர்) இந்தப்பத்திரிகையைத் தொடங்கியுள்ளார். தற்போது இவர் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் கோப்பாய் பிரதேச உறுப்பினரும் கூட.

இலக்கிய சங்கதிகளுக்கு உதயன் முக்கியத்துவம் அளிக்கவில்லை. அதனால் தனது பத்திரிகை, இலக்கியத்துக்கு கூடுதல் முக்கியத்துவமளிக்கும் என ஆசிரியரான பாலநடராஜன் கூறியுள்ளார்.

பெப். 2முதல் யாழ்ப்பாணத்திலிருந்து சூரியகாந்தி என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளிவந்தது. இப் பத்திரிகை பங்காளர்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்குக் காரணமாக நின்றுவிட்டது.

## உங்களிடம் இருக்கிறதா?

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு அருகிலுள்ள காவலரணில் நிற்கும் இராணுவச் சிப்பாய் ஒருவர் மோட்டார் சைக்கிளில் போகிறவர்களிடம் மோட்டார் சைக்கிள் கேட்கிறாராம். யாராவது கொடுக்க மறுத்தால் அவர்களை கடுமையாக மிரட்டுகிறாராம். இது யாழ்ப்பாணத்தில் சாதாரண நிகழ்ச்சி. அத்துடன் இந்தச் சிப்பாய் கமெரா போன்ற பொருட்கள் இருக்கிறதா எனவும் போவோர் வருவோரை விசாரித்து மிரட்டுகிறாராம்.

## சோதனைச் சாவடியுள் சோதனை!

அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள பெண்களுக்கான இராணுவ சோதனைச்சாவடியொன்றினுள் இரு ஆசிரியைகள் நுழைந்தனர். அப்போது அந்தச் சோதனைச் சாவடிக்குள் இருந்து ஆண் சிப்பாய் ஒருவர் வேர்க்க விறுவிறுக்க வெளியே வந்தார். ஆசிரியைகள் இருவரையும் 'யன்ட', 'யன்ட' என்றார் அந்த இராணுவச் சிப்பாய். ஆசிரியைகள் தம்மைத் தான் விரைவாகப் போகச் சொல்கிறார் என நினைத்து விழுந்தடித்துக் கொண்டு சோதனைச் சாவடிக்குள் நுழைந்தனர். அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திடுக்குறச் செய்தது. அங்கே பெண் இராணுவச் சிப்பாய் ஒருவர் பிராவுடன் காணப்பட்டாராம்.

## கிட்டு பூங்கா விற்பனைக்கு?

கிட்டு பூங்கா கோடிக்கணக்கான ரூபா செலவில் வடிவமைக்கப்பட்டது. இப்பூங்கா உலகின் தலைசிறந்த சிறுவர் பூங்காக்களில் ஒன்று என இதனை பார்வையிட்ட வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் கூறியிருந்தார். இப்போது கிட்டு பூங்கா பொருட்கள் சீற், பலகைகள், கொங்கிறீற் கட்டிகள் என்பன விஷமிகள் சிலரால் உடைத்தெடுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

## வாழ்க விளம்பரம்!

யாழ்ப்பாணத்தில் இப்போது விளம்பரக் கலாசாரம் தோன்றியுள்ளது. எதற்கெடுத்தாலும் விளம்பரம்தான். இதனால் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைக்கும் வருமானம் பரவாயில்லை. நினைவஞ்சலி, பிறந்தநாள் வாழ்த்து விளம்பரங்கள் வழமையானவை. இவற்றை விட பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர, சாதாரணதர பரீட்சைகளில் திறமைச்சித்தி பெறும் மாணவர்களுக்கு வாழ்த்து விளம்பரம், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தும் மாணவர்களுக்கு வாழ்த்து விளம்பரம், ஜே.பி.பட்டம் பெறுவோர்க்கு வாழ்த்து விளம்பரம், ஒரு வருட கால சேவையைப்பூர்த்தி செய்த துணைவேந்தருக்கு வாழ்த்து விளம்பரம், சேவையிலிருந்து ஒய்வு பெறுவோருக்கான வாழ்த்து விளம்பரம், இப்படியாக யாழ்ப்பாணம் வாழ்ந்து விளம்பரக்கலாசாரத்திலேயே சென்று கொண்டிருக்கிறது.

விஷ்வன்

## பாதுகாப்பும் அச்சுறுத்தலும்!

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் உதயன் பத்திரிகையின் அதிரடி அரங்குப் பகுதியில் ரெலோ இயக்கத்தினர் யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவரிடம் பணம் கேட்டதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து ரெலோ இயக்கத்தினர் பழைய பாணியில் வானில் உதயன் அலுவலகத்திற்குச் சென்று ஆசிரியரைச் சந்திக்க வேண்டும் என்றனராம். அதற்கு உதயன் பணிமனையிலிருந்து ஊழியர்கள், ஆசிரியர் இல்லையென்று கூறியதும் திரும்பிச் சென்ற இவர்கள் மூன்றாம் முறை வந்து மேற்படி செய்தி பிழையென வாதாடியுள்ளனர்.

ஆனால் உதயன் ஆசிரியபீடத்தினர் ஆதாரங்களைக் காட்டியதும் திரும்பிச்சென்ற இவர்கள் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளரை ஏன் உதயனுக்குச் செய்தி வழங்கினாய் என மிரட்டியுள்ளனராம்.

அவர், தான் உதயனுக்குச்செய்தி வழங்கவில்லையெனவும், தான்தனது நண்பர்கள் யாருடனோ கதைத்ததை அவர்கள் போய்ச்சொல்லி விட்டனர் என்றாராம். இச்சம்பவத்தையடுத்து இராணுவத்தினர் ரெலோ இயக்கத்தினரைக் கூப்பிட்டு இது போன்ற சம்பவங்கள் இனிமேல் இடம்பெறக் கூடாது எனக் கூறியுள்ளனர். ஆக மொத்தத்தில் யாழ்ப்பாண மக்கள் இராணுவத்தினரின் பாதுகாப்பின் கீழ் இயக்கங்களின் அச்சுறுத்தலின்றி வாழ்கின்றார்கள்!

## மணலாறிலிருந்து ஒரு கடிதம்!

தற்போது தம் வீடுவாசல்களை இழந்து வெவ்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வாழும், மணலாறு பிரதேசத்தின் தமிழ்க்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது நிலைமைகளை விளக்கி ஐ.நா. சபையின் செயலாளர் கொபி அனானுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். மணலாறு மக்கள் நலன்காப்பு ஒன்றியம் என்ற தமது அமைப்பினூடாக அவர்கள் இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

இங்கு நிலவும் யுத்த சூழ்நிலைக்கு எவ்வித பொருத்தமுமற்ற சிறு குடிசை வீடுகளிலேயே நாம் வாழ்கிறோம். எமக்கு போதியளவு உணவுப் பொருட்கள் அரசாங்கத்தினாலோ அல்லது அரசாங்க சார்பற்ற நிறுவனங்களினாலோ வழங்கப்படுவது மில்லை. இலங்கை அரசாங்கத்தின் மருந்துப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு காரணமாக எமக்கு மருந்துப் பொருட்கள் விநியோகம் எதுவும் நடைபெறவில்லை. நாம் சொல்லொண்ணாத்துன்பத்துக்கு முகங்கொடுத்து வருகிறோம்'' என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மணலாறில் 42 தமிழ்க் கிராமங்கள் இருந்ததாகவும், அவற்றில் 13,208 குடும்பங்கள் இருந்ததாகவும் இப்போது அவர்கள் அனைவரும் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டு விட்டரெனவும் தமது தாயக வாழிடம் மறுக்கப்பட்டதாகவும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோசடிகளில் ஒரு வகை!

இதுவரை அமைத்து முடிக்கப்படாத கொழும்புத் துறைமுகத்தின் எலிசபெத் இறங்குதுறையை அவுஸ்திரேலியாவின் பி.அன்ட். ஓ நிறுவனத்துக்குக் கையளிக்கும் ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எல்.டபிள்யூ.டி என்ற வெளிநாட்டு நிறுவனத்துக்கு அந் நடவடிக்கைக்காக இது வரை 25மில்லியன் ரூபாய்கள் மட்டில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

எல்.டபிள்யூ.டி. என்ற இச்சட்ட நிறுவனம் இற்றைக்கு ஒரு வருட காலத்துக்கும் மேலாக கொழும்புத் துறைமுகத்தைப் பி.அன்ட் ஓ நிறுவனத்துக்கு கையளிப்பது தொடர்பான ஒப்பந்தத்தைத் தயாரித்து வருகிறது.

இதுவரை முடிவுறாத இவ் ஒப்பந்தத்தில் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் அந் நிறுவனத்துக்குப் பணம் செலுத்தத்தயாரிப்புகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அத் தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.

## பெயர் மாற்றம்!

இனஅழிப்பிற்கான போர், சமாதானத்திற்கான போர் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதேபோல் தமிழர் நிலத்தை ஆக்கிரமித்தல் என்ற பேரினவாத இலட்சியம் தமிழ் மக்களை விடுவித்தல் என வார்த்தை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


புதிய வருடம் தமிழரின் தன்னாட்சிக்கு வலுச்சேர்க்கும் ஆண்டாகவே திகழப் போகிறது. புதிய நூற்றாண்டின் ஆரம்பம் ஈழத்தமிழரின் விடிவிற்கான ஆரம்பம். 1ம் நூற்றாண்டில் எம்முன்னோர் இழந்ததை 21ம் நூற்றாண்டில் நாம் மீண்டும் பெறுவோம் என தமிழ் மக்களாகிய நாம் உறுதி எடுப்போம். ஈழத்தமிழருக்குத் தான் வெற்றி நிச்சயம் சிங்களப்பேரினவாதத்திற்கு அல்ல. இவ்வாறு தை மாத விடுதலைப் புலிகள் இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3500 படையினரும் 1400புலிகளும் பலி!

1997ம் ஆண்டு 3500ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். 8000 படையினர் காயமடைந்துள்ளனர். 1400 புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர். 1000க்கும் மேற்பட்ட புலிகள் காயமடைந்துள்ளனர். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் தை மாத இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெலிக்கடை தமிழ் பெண் சிறைக் கைதிகள் :

# மனைவிகளுக்குக் கூனல் விழச் செய்து விடும் துயரம் !



சுடர் விழி - சிட்டுக்குருவி

கம்பன் விழாவிலே சீதையை இராவணன் கவர்ந்து சென்று சிறை வைத்த கதை கேட்டு கண்ணீர் விடுகிறோம்.

பாரதத்திலே பாஞ்சாலியின் துகில் உரிந்த கதை கேட்டு நெக்குருகி, நெஞ்சம் நைந்து பேர்கிறோம்.

இங்கே எந்தக் குற்றமும் செய்யாத சீதைகள் சிறைகளில் வதை படுகிறார்கள். எந்தக் குற்றமும் செய்யாத பாஞ்சாலிகள் துகிலுரியப் படுகிறார்கள்.பஞ்சபாண்டவர்கள் கைகட்டி நின்று பார்த்தது போல, தமிழ் இயக்கங்கள் கைகட்டி வாய் பொத்தி நிற்கிறார்கள். அப்படி யாருமே சிறை வைக்கப்படவில்லை, துகிலுரியப்படவில்லை என்பதாய் கதை யளக்க சகுனிகளும் இங்கில்லாமலில்லை. இந்தப் பெண்களைக் காப்பாற்ற எந்தக் கண்ணனும் வரவில்லை.

சிறைகளில், சித்திரவதைகளுள் தொடர்கிறது வாழ்வு.

''இன்று வல்லரசுகளாக இருக்கும் பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைப்பதற்கு முன்பே எமது நாட்டுப் பெண்கள் வாக்குரிமையைப் பெற்று விட்டனர். இதனால் எமது பெண்கள் பெருமை பெற்றவர்களா குகிறார்கள்'' என்கிறார் சர்வதேச பெண்கள் தின மாநாட்டில் ஜனாதிபதி.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்பில் இயங்கும் பெண்கள் அமைப்புக்களோ பெண்கள் தினத்திற்கு தத்தம் பங்கிற்கு கலாசார விழாக்களை நடாத்தி அவற்றை வீடியோக் கமெராக்களுக்குள் சுருட்டிக் கொண்டதோடு தம் பணியை முடித்துக் கொண்டு விட்டன.

''இன்னுமோர் சர்வதேச மகளிர் தினம் அண்மித்திருக்கிறது. இந்நாளில் பெண்கள் பற்றிய பலவும் பேசப்படும். எழுதப்படும். கண்காட்சிகள் நடாத்தப்படும். ஆனால் இவற்றின் மத்தியில் உண்மையான பெண்களின் பிரச்சினைகள் மூடி மறைக்கப்படும்'' என்று கூறி அவ்வாறு நடக்காமல் இருப்பதற்காக ஜே.வி.பி.யின் பெண்கள் அணியான சோஷலிச மகளிர் சங்கத்தினர் நடாத்திய கண்காட்சியிலும் அவர்கள் மறக்கடிக்கப்பட்டே இருக்கிறார்கள். மறக்கடிக்கப்பட்ட அந்தப் பெண்கள் பற்றி யாரும் வாய் திறக்கவேயில்லை.

அவர்கள் இருக்கும் மூடுண்ட சிறைகளுள் நடக்கின்ற சங்கதிகளை வெளியுலகத்தோர் யாரறிவார்? கவிஞர் சிவசேகரம் சொல்வதைப் போல் 'கண்டு அலுத்த கற்சுவர்களும் மௌனித்திருக்கும்' காலமல்லவா? அவர் சொல்கிறார்; ''பகுத்தறிவு ஆளுகின்ற/ புதிய யுகம்/ அற்புதங்கள்/ ஒருக்காலே நடந்தாலோ/ ஒப்பார்கள் என்பதனால்/ இருகால் நடந்தேறும் / கண்டு அலுத்த / கற்சுவரோ மௌனிக்கும்.''

ஒருக்கால் அல்ல. இருகாலுமல்ல. அதற்கும் மேல் அது வழமையாகிப் போனதால் கற்சுவர்கள் கண்டு அலுத்திருக்கின்றன. ஆனால் நாம் காண மறுத்துக் கொண்டிருக்கிறோம். கடைசியாகக் களுத்துறைச் சிறையுள் நடந்தது. மூன்று பேர் கொல்லப்பட்டார்கள். வழமை போல இப்போது ஜனாதிபதி ஆணைக்குழு முன் விசாரணை நடக்கிறது. தமிழ் மக்களுடைய வாழும் உரிமை வெறும் கமிஷன் அறிக்கைகளுக்குள் சுருண்டு கொள்கிறது.

சிறைகளுக்குள் ஆண்கைதிகளின் நிலையே இதுவென்றால் பெண்கைதிகளின் நிலை என்னவாயிருக்கும்?

நான் உங்களை அழைத்துச் செல்கிறேன் அங்கு. வாருங்கள். வந்து அவர்களின் கதைகளைக் கேளுங்கள்.

மதியம் ஒரு மணியிருக்கும். சிறைவாயிலின் பெரும் கதவுகளைத் தாண்டி நான் உள்ளே போகிறேன். எந்த வெளியுலகத் தொடர்புமற்ற வேறு உலகம் அது . நான் பார்வையிட விரும்புகிற நபருடைய பெயரைக் கொடுத்து அனுமதிக்காகக் காத்திருந்து நான் அவளைச் சந்திக்கிறேன். அவள் வெலிக்கடைச் சிறையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறாள். மன்னாரைச் சேர்ந்தவள், 20 வயதிருக்கும். அவள் பெயரைச் சொல்கிறாள். அவளது பெயரை நான் உங்களுக்குச் சொல்லப் போவதில்லை. அதற்காகவே பின்னர் அவள் சித்திரை வதப்பட நேரும். இதனால் நான் இங்கு சந்திக்கும் யாருடைய பெயரையும் சொல்லப் போவதில்லை. அவள் தனது கதையை ஆரம்பிக்கிறாள். ''நான் கடந்த வருடம் ஜூலைமாதம் 21ம் திகதி மன்னாரில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டேன். இரண்டு நாட்களாக என்னைத் தள்ளாடி முகாமில் வைத்து விசாரணை செய்தார்கள். அதை விசாரணை என்று கூடச் சொல்ல முடியாது. சித்திரவதை தான். அந்த விசாரணைக்கு எஸ்- லோன் பைப்புக்களைப் பயன்படுத்தினார்கள். அவர்களுக்கு விருப்பமான, அவர்கள் எதிர்பார்க்கிற பதில் கிடைக்கவில்லை. பிறகென்ன, சப்பாத்துக் கால்கள் அடி வயிற்றில் பாய்ந்தன. சுவருடன் சாய்ந்து விழும் போதெல்லாம் முகம், உடம்பெல்லாம் அதே சப்பாத்துக் கால்களால் உழக்குவார்கள். 'ரெயினிங் எடுத்து விட்டு இயக்கத்தை விட்டு விட்டு வந்தவள் என்று சொல்லு' எனத்தான் இவ்வளவும் செய்தார்கள். அவர்களின் முயற்சி தோல்வி கதிரையில் இருக்கவைத்து விட்டு பக்கத்திலிருந்த மேசையில் கால்கள் இரண்டையும் வைக்கச் சொன்னார்கள். கால்களை இரும்புக் கம்பிகளால் தாக்கினர். கால்களை எடுத்து விடாதபடி ஒருவனும், நான் சரிந்து விழாதபடி இன்னொருவனும் இறுக்கிப் பிடித்துக் கொண்டனர். கால்கள் வலியெடுக்கும் . இரத்தம் கசியும். இந்தச் சித்திரவதை இரண்டு நாட்களுக்கு நடந்தது. இந்தச் சித்திரவதையில் இரண்டு பெண் பொலிசாரும் பங்குபற்றினர். அவர்களும் தம் பங்கிற்குத் தாக்கினர். என்னால் கால்களை நிலத்தில் வைக்க முடியவில்லை.

இரண்டு நாட்களின் பின்னர் என்னை வுவுனியா முகாமுக்கு மாற்றினார்கள். அங்கும் சித்திரவதை தொடர்ந்தது. என்னை நிலத்தில் இருத்தி இரண்டு கைகளையும் சேர்த்து விலங்கு போட்டு விட்டு ஒரு ஆமிக்காரன் எனது தொடைகளின் மேல் தனது சப்பாத்துக் கால்களுடன் ஏறி நின்றான். பெண் படையினர் இருவர் தலைமுடியைப் பிடித்து இழுத்துப் பந்தாடினர். அன்று மாலை இராணுவப் பொலிசாரிடம் என்னை ஒப்படைத்தனர்.

தமது இடத்துக்கு என்னைஅழைத்துச் சென்ற இராணுவப் பொலிசார் எனது கண்களைக் கட்டி விட்டு, மேசை மேல்கிடத்தி இரு கைகளையும் மேசைக்குக் கீழ் வைத்து விலங்கு போட்டனர். கால்களையும் மேசையுடன் சேர்த்துக் கட்டினர். அதன் பின் தாக்கத் தொடங்கினர்.

ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்தின் பின்னர் பெற்றோல் பா;க்கை (bag) முகத்தில் போட்டு இரண்டு மூன்று நிமிடங்கள் வைத்திருந்தனர். இவ்வாறு நான்கோ ஐந்து பா;க்குகள் போடப்பட்டன. ஏறத்தாழ மூச்சே நின்று விடுமாப் போலநெஞ்செல்லாம் வலித்தது. தலை சுற்றியது. அதற்கு மேல் என்னால் தாங்க முடியவில்லை. நான் ஒப்புக் கொண்டேன் எனக் கூறிய அவள் அழத் தொடங்கினாள். அழாதே என்று சொல்வதற்கு என்னிடம் வார்த்தைகள் இருக்கவில்லை.

நான் இரண்டாவதாகச் சந்தித்தது 22 வயதுடைய ...........எனும் இளம் பெண் ஒருத்தியை. அவளுடைய தாய் தந்தையர் சிறுவயதிலேயே இறந்து விட்டனர். அவள் பெரியம்மா பெரியப்பாவுடனேயே வளர்ந்து வந்தாள். அவர்கள் பார்த்த ஒருவரையே திருமணம் செய்தாள். மணம் முடித்த சில நாட்களிலேயே கணவர் தொழில் நிமித்தம் ஓமான் போய் விட்டார். கணவர் அனுப்பிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அவருடன் தொலைபேசியில் பேசுவதற்காகவும் கொழும்புக்கு வந்தாள். இனி அவளே சொல்வதைக் கேளுங்கள்:

''96ம் ஆண்டு நவம்பர் 17ம் திகதி காலை கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலுக்குக் கும்பிடப் போனேன். திடீரெனக் கோவிலைச் சுற்றி வளைத்துச் சோதனையிட்ட பொலிசார் என்னைக் கைது செய்தனர். பின்னர் அவர்கள் என்னை சி.டி.பியில் ஒப்படைத்தனர். அங்கு விசாரணை என்ற பெயரில் சித்திரவதை தான் நடந்தது என்று சொல்கிற போதே அவள் அழ ஆரம்பித்து விட்டாள்.

'அவர்கள் உங்களை என்ன செய்தனர்?'

'அவன் தும்புக் கட்டையாலும் சப்பாத்துக் காலாலும் அடித்தான்.'

'யார்?'

'நிலாப்டீன்'

'நிலாப்டீன் என்றால்...?'

'என்னை விசாரித்த அதிகாரி'

'ஏன்?'

'ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பமிடச் சொல்லி. நான் மறுத்தேன். கம்பியைச் சூடு காட்டி உடம்பில் சுட்டனர்.' -நெற்றி மயிர்க் கற்றைகளை நீக்கி தழும்பைக் காட்டுகிறாள்.

'பிறகு...'

மூன்று நாட்கள் சித்திரவதை தொடர்ந்தது. நான் கையொப்பமிட மறுத்தேன். அவன் சேலையைக் கழற்றுமாறு கூறினான். நான் கைகளை மார்புடன் கட்டிக் கொண்டேன். என்னுடைய செய்கையால் ஆத்திரப்பட்ட அவன் தும்புத்தடி முறியும் வரை அடித்தான். சேலையைப் பிடித்து இழுத்தான். சேலை அவனுடைய கையில்...' என்று சொன்ன அவள் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள். அதன் பிறகு என்ன நடந்ததென்று நான் அவளைக் கேட்கவில்லை. கேட்க வேண்டிய தேவையிருக்கவில்லை. அவள் கையெழுத்து வைத்துக் கொடுத்திருக்கிறாள்.

இதற்குப் பிறகு நான் சந்தித்தது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளம் பெண் ஒருவரை. அவளது பெயர்......... பார்ப்பதற்கு மிக அழகானவள். துடிதுடிப்பானவளாகவும் இருந்தாள். இவளுக்கும் தாய் தந்தையர் இல்லை. பெரியம்மா, சித்தி என்று ஒவ்வொருவரிடமும் மாறி மாறி இருந்து வளர்ந்தாள்.

95 ஜூலை 25ம் திகதி அன்று அக்கரைப்பற்றிலிருந்து திருமலையிலுள்ள தனது பெரியப்பா வீட்டுக்குச் செல்லும் போது வெலிக்கந்தையிலுள்ள தடை முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டாள். 5 மாதங்களாக சி.டி.பியில் தனக்கு நடந்த சித்திரவதைகளைக் கூறினாள். அவள் சொல்கிறாள்; ''சி.டி.பியில் என்னை விசாரித்த அதிகாரி ' உனக்குப் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பு உண்டென்று ஒப்புக் கொள். உன்னை விட்டு விடுகிறோம்' என்றான். ஒரு தொடர்புமில்லாத நான் செய்யாத குற்றத்தை ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும்? அவன் மிரட்டினான். அடித்தான், உதைத்தான். உடைகளைக் களையுமாறு சொன்னான். மறுக்கவே மீளவும் அடி, உதை. இறுதியாகப் பலாத்காரமாக உடைகளைக் கழற்றி எறிந்தான். நான் உள்ளாடைகளுடன் கூனிக் குறுகி நின்றேன். அதையும் கழற்றுமாறு கூறினான். அந்தக் கணமே செத்து விடலாம் போலத் தோன்றியது. அந்த மிருகத்தின் முன்னால் நான் என்ன செய்ய முடியும். நான் இணங்கிப் போக வேண்டியதாயிற்று. எனக்குக் கையெழுத்துப் போடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. 95 நவம்பர் 27இல் கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்குக் கொண்டு சென்றார்கள். இப்போது இங்கே இருக்கிறேன்.''

வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்ட பெண்ணான.......... சொல்கிறார்; ''97 ஒக்டோபர் 31 அன்று என்னையும் எனது கணவரையும் வவுனியாவில் வைத்து எனது ஒன்றரை வயது மகளுடன் கைது செய்தனர். அப்போது நான் இரண்டு மாதக் கர்ப்பிணி. கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்களின் பின்னர் என்னை வெலிக்கடைக்கும் . கணவரை களுத்துறைக்கும் மாற்றினர் நான் இப்போது ஏழு மாதக் கர்ப்பிணி. இரவில் ஆறுதலாக உடம்பைச் சாய்த்துப் படுக்கக் கூட ஒரு இடமில்லை. இரவில் படுத்து காலையில் எழும்பும் வரை ஒரே பக்கமாகத் தான் படுத்து எழும்ப வேண்டியிருக்கிறது. திரும்பிப் படுக்க இடம் இல்லை. காலையில் எழும்பும் போது ஒரு பகுதி விறைத்துக் கால் வீங்கி இருக்கும் வைத்தியசாலைக்கு அழைத்துப் போகச் சொல்லிக் கெஞ்சிக் கேட்டுக் கேட்டுப் பல நாட்களின் பின் ஒருநாள் அழைத்துப்

→7

# மருதானை குண்டு : நிச்சியமற்ற வாழ்விற்கான முன்னுரை ?

மருதானையில் நடைபெற்ற குண்டு வெடிப்பு ஏற்படுத்திய அதிர்ச்சி முன்னெப்போதும் இல்லாத விதத்தில் பொது மக்களின் பாதுகாப்புக்கெதிரான பெரும் அச்சுறுத்தலை முன்னறிவித்துள்ளது. வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டுச் செல்லும் ஒருவர், பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள், நடைபாதை வியாபாரிகள் என்று யாருமே தாம் பாதுகாப்பாக தமது இல்லங்களுக்குத் திரும்புவோமா என்ற நிச்சயமற்ற ஒரு நிலையில் தமது பயணங்களையோ தொழிலையோ செய்ய வேண்டிய ஒரு அச்சந்தரும் நிலையை இது ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு வகையில், வடக்கு கிழக்கில் தூங்கப் போபவர்கள் கூரையிலேயே செல் விழுந்து செத்துப் போகாமல் உயிருடன் த்ப்பி காலையில் விழித்தெழுவோமா என்ற அச்சத்துடன் உறங்கப் போவதற்குச் சமமான ஒரு நிலை கொழும்பிலும் இன்று உருவாகி விட்டுள்ளது.

முன்பெல்லாம் யுத்த பிரதேசத்திற்குப் போகும் படையினருக்கும் அவர்தம் குடும்பங்கட்கும், அப்பகுதியில் வாழும் மக்களுக்கும் மட்டுமே சொந்தமாக இருந்த இந்த அச்சம் இன்று எல்லோருடைய அச்சமாகவும் மாறிவிட்டது.

எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகள் வலுப்பெற்று வந்த காலத்தில் - இது வடக்கு கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த அனைத்து மக்களதும் அச்சமாக இருந்தது. "யாருக்கும் எதுவும் நடக்கலாம்" என்பதே அன்று அந்த மக்களின் நிலையாக இருந்தது. இந்த அச்சத்துடனான வாழ்விலிருந்து தம்மைப் பாதுத்துக் கொள்ளவென்று அந்த மக்களிடையிலிருந்து ஒரு பிரிவினர் தாம் வாழும் பிரதேசங்களை விட்டு, நாட்டை விட்டு குடிபெயரத் தொடங்கினர். இவ்வாறு போக வசதியும் வாய்ப்புமற்றவர்கள், அச்சத்தைத் தூக்கி வீசிவிட்டு துன்பத்தை எதிர்கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்று கருதியவர்கள் தம்முடைய இருப்பை பாதுகாத்துக் கொள்ள முயன்றனர். "மரணத்துள் வாழ்வோம்" என்பது அவர்களது கோட்பாடாக அமைந்தது. ஆயதந் தாங்கிய இளைஞர்களது போராட்டங்கள் அவர்களது "மரணத்துள் வாழ்வதற்கான" உணர்வின் வெளிப்பாடுகளாக வடிகால்களாக இருந்தன.

வாழ்தல் குறித்த அச்சம் அவர்களிடையே அதுவரை காலம் இல்லாதிருந்த ஒரு அரசியல் ஒருங்கிணைப்புடன், தாம் அனைவரும் ஒரே எதிரியின் எதிரிகள் என்ற எண்ணக் கருவின் முற்றுமுழுதான ஆதிக்கத்துள் ஒருங்கிணைய வைத்தது. இது வடக்கு கிழக்கில் நடந்து முடிந்த கதை.

அந்த வரலாற்றைக் கவனமாக அவதானித்தவர்கள் இன்று அதே மாதிரியான ஒரு அச்சத்துக்கு கொழும்பு வாழ் மக்கள் தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

புலிகளுடனான அரசாங்கத்தின் யுத்தம் நடக்கும் வரை" இத்தகைய நிகழ்வுகள் தவிர்க்க முடியாதவைகளே" என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தையே அறிவித்து விட்டார். என்றான பின் பாதுகாப்புப் பற்றி அச்சம் கொள்வதை எப்படித் தான் தவிர்க்க முடியும்?

யுத்தம் நடக்கும் வரை தம்முடன் யுத்தத்தை நடாத்தும் மையத்தை நோக்கியும், அதை ஆட்டங்காணச் செய்யும் நோக்குடனும் புலிகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடவே செய்வர் என்பது ஒன்றும் புரிந்து கொள்ள முடியாத விடயமல்ல. பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பு புலிகளால் கொழும்பில் நடாத்தப்பட்ட அனைத்துத் தாக்குதல்களும் அரசாங்கத்தை நோக்கியதாக அல்லது அதன் பொருளாதார நிலைகளை சேதப்படுத்துவதாகவே அமைந்திருந்தன. பொது மக்கள் மத்தியில் குண்டுகளை வைத்து அவர்களை பெருமளவுக்கு கொல்வதன் மூலம் அரசாங்கத்துக்கு அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கான தாக்கத்தை ஏற்படுத்தலாம், அல்லது அதை தம்முடன் சமரசம் செய்ய வைக்கலாம் என்ற நோக்குடனேயே புலிகள் இத்தகைய தாக்குதல்களை நடாத்துவதாக பேசப்பட்ட பேச்சுக்கள் இப்போது அப்படியாக வலுவானதாக எடுபடுவதில்லை. மாறாக, புலிகளின் அண்மைக்கால தாக்குதல்களில் பொதுமக்களின் சேதம் பக்க விளைவுகளாக வந்திருக்கின்றனவே அன்றி அனுராதபுரத் தாக்குதல்கள் போல அவைகளே இலக்குகளாக இருப்பதில்லை என்பதே உறுதியாகி வருகிறது.


கொழும்பு மத்திய வங்கித் தாக்குதலுக்குப் பிறகு நடந்த பல்வேறு தாக்குதல்களில் கடந்த 5ஆம் திகதிய மருதானைக் குண்டுவெடிப்பு தாக்குதல் தான் பெரியளவில் உயிர்ச் சேதத்தையும் உடற் காயங்களையும் ஏற்படுத்திய தாக்குதல் என்று சொல்லலாம். ஆயினும் பெப்ரவரி 6ஆம் திகதி நடந்த கொம்பனி வீதி தற்கொலைக் கொலையாளியின் குண்டுவெடிப்பும் சரி, இப்போது நடந்த மருதானைக் குண்டுவெடிப்பும் சரி இலக்கு தவறிய குண்டு வெடிப்புக்களே என்று காரணகாரிய நிலைமைகள் வெளிப்படுத்துகின்றன. ஆகவே இந்தத் தாக்குதல்கள் கூட பொது மக்களை இலக்காக வைத்துச் செய்யப்பட்ட தாக்குதல்களாகக் கொள்ள முடியாது. ஆனால் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் புலிகளது குண்டுத் தாக்குதல்களை அடுத்து கொழும்பு முழுவதும் பலப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு சோதனைகள் காரணமாக புலிகளின் தாக்குதல் இலக்குகள் தவறிப் போய்விடும் நிலைகள் தோன்றியுள்ளன. இதனால் தவிர்க்க முடியாமல் பெருமளவில் பொது மக்கள் பாதிக்கப்படுவதற்கான நிலைமை உருவாகிவிட்டுள்ளது.

இந்த நிலைமை தான் மருதானைக் குண்டுவெடிப்புடன் உருவாகியுள்ள அச்ச அலைக்கு அடிப்படைக் காரணமாகும். ஆனால் இந்த நிலைமையிலுள்ள விசித்திரமான விடயம் என்னவென்றால், இவ்வாறான அச்ச நிலைமையிலிருந்து பொது மக்களை விடுவிப்பதற்காக எடுக்கப்படும் எல்லா விதமான நடவடிக்கைகளும் இந்த அச்சத்தை மேலும் மேலும் அதிகரிக்கும் அளவில் அச்சத்தினை வளர்க்கும் நிலைமைகளையே தோற்றுவித்து வருகின்றன என்பதாகும்.

தற்கொலைக்குத் தயாராகி வரும் ஒரு தற்கொலைக் கொலையாளியின் தாக்குதல் இலக்கு தவறும் பட்சத்தில் அத் தற்கொலைக் கொலையாளி தான் முடிந்தளவுக்கு எதிர்காலத்தில் தம் போன்றவர்கள் மீதான சோதனைகளைத் தவிர்க்க வேண்டுமென்னும் இலக்குடன் செயற்படத் தயாராகிறார். கொம்பனி வீதியில் தம்மை சோதிக்க அமைத்த படையினரை முடிந்தளவு அருகாக நெருங்கி அவர் குண்டை வெடிக்க வைத்ததாக கூறப்படுவது. இதனை உறுதிப்படுத்துகிறது. படையினர் தற்கொலைக் கொலையாளிகளை பரிசோதனைக்கு உள்ளாக்குவது என்பது அவர்களது தனிப்பட்ட உயிர்ப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நடவடிக்கையே என்பதில் சந்தேகமில்லை. தூரநின்று துப்பாக்கியால் சுடும் யுத்தத்தில் ஈடுபடுவதை விட இது கடினமானதாகும். கிட்ட நெருங்கிய ஒருவரை பாதைஓர சோதனைச்சாவடியில் நிற்கும் ஒரு படையாளியால் துப்பாக்கி கொண்டு சுடமுடியாது. சுடுவது கூட பயனற்றுப் போகலாம். சிலவேளைகளில் சுடப்பட்டவர் ஒரு அப்பாவியாகவும் இருக்கலாம் என்பது பாதையோர சோதனைச் சாவடியிலுள்ள படையினரின் பிரதான பிரச்சினையாகும். இது படையினர் சோதனைகளை சரிவரச் செய்ய முடியாமல் போவதற்கு ஒரு அடிப்படையாக அமைந்துவிடுகிறது. உண்மையில் இந்த நிலமை தான் ஒரு தற்கொலையாளி எதிர்பார்க்கும் நிலைமையும் ஆகும்.

ஆக, சோதனைச் சாவடிகளின் அதிகரிப்பும், கடுமையான சோதனைகளுக்கான உத்தரவுகளும் பாதுகாப்பை அதிகரித்து விடும் என சொல்வதற்கில்லை. பதிலாக அவை புலிகளது தாக்குதல் இலக்குகள் தவறிவிடுவதற்குரிய வாய்ப்புக்களை அதிகரிக்கவே செய்யும்.

ஆனால், இதிலுள்ள துரதிர்ஷ்டம் என்னவென்றால் இதன்மூலம் பெருமளவில் அப்பாவிப் பொது மக்கள் நேரடியான பாதிப்புக்கு உள்ளாகும் புதிய ஒரு நிலை உருவாகிறது. வடக்குக் கிழக்கிலும் இத்தகைய ஒரு நிலை எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்தது. வீதி ரோந்தில் வரும் இராணுவ தொடர் வண்டிகட்காக நிலக் கண்ணிகளை விடுதலை இயக்கங்கள் புதைத்துக் காத்திருந்த காலம் அது. அப்போதெல்லாம் அதை அண்டிய பிரதேசத்து பொதுமக்கள் மீது குண்டு வெடிப்பின் பின் பல சரமாரியான தாக்குதல்கள் இராணுவத்தினரால் நடத்தப்பட்டிருக்கின்றன. இயக்கங்கள் நிலக்கண்ணி வைப்பதை மக்கள் "எங்கள் பகுதியில் வைக்காதே" என்று எதிர்த்ததுண்டு என்ற போதும், அந்த நிலக்கண்ணி தாக்குதல்கட்கு முற்றுமுழுதாக அவர்கள் எதிராக இருந்தார்கள் எனச் சொல்லிவிட முடியாது. ஏனென்றால், அவர்களுக்கு அரசாங்கமும் அதன் படைகளும் பல தசாப்த கால பகைவர்களாக இருப்பவர்கள். முடிந்தால் அவர்கள் தாம் நிலக்கண்ணி வெடி வைக்கப்பட்ட பிரதேசத்தை விட்டு பாதுகாப்புக்காக தற்காலிமாக நகர்ந்தார்களே ஒழிய படையினருக்கு தகவல் கொடுக்கப் போகவில்லை. தகவல் எடுக்க முனைந்த படையினர் ஒரு அந்நிய ஆக்கிரப்பு படையாளரின் உணர்வுடன் மக்களைத் தாக்கினர். விளைவு மரணத்துள் வாழ்வது அவர்களது தவிர்க்க முடியாத நிலையாகியது. இயக்கங்கள் அவர்களது வெறுப்புணர்வின் வெளிப்பாடாகின.



கிட்டத்தட்ட அந் நிலை இன்று இங்கும் பரவலாகி விட்டது. ஒவ்வொரு குண்டு வெடிப்பும் இங்குள்ள படையினரின் பொறுப்பீனத்தைப் பற்றி பேச வைக்கிறது. அரசாங்கத்தின் பாதுகாப்பு நடவடிக்கை பற்றி கேள்வி எழுப்ப வைக்கிறது. அதே வேளை புலிகளுடனான யுத்தத்திற்கு முடிவு வேண்டும் என்ற கோஷத்தை வலுப்பட வைக்கிறது.

ஆனால் யுத்தத்தை எப்படி முடிவுக்கு கொண்டு வருவது என்பதில் தேசம் பிளவுபட்டுக் கிடக்கிறது. புலிகளை முற்றாக செயலற்றதாக்கி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற முழக்கம் இனவாத சக்திகளால் பலமாக உச்சரிக்கப்படுகிறது. இவர்களது தத்துவத்தை நேரடியாக ஏற்றுக் கொண்டதாக காட்டிக் கொள்ளாவிட்டாலும் அரசாங்கம் அந்த தத்துவத்தின் நடைமுறைகளையே கடைப்பிடித்து வருகிறது.

தமிழ் மக்களின் மீதான அரசாங்கத்தினதும் அதன் படைகளினதும் சந்தேகம் மேலும் மேலும் ஒவ்வொரு குண்டு வெடிப்பினாலும் வலுப்பெறுகிறது. இது தவிர்க்க முடியாமல் அரசாங்கத்தின் மீதான தமது வெறுப்புணர்வின் வடிகாலாக இந்த நடவடிக்கைகளை நோக்கும் நிலைக்கு அவர்களை தள்ளிவிடுகிறது.

ஆக யுத்தம் தொடரத் தொடர நிலை மேலும் மேலும் மோசமாகி, அச்சம் நிறைந்த துயர்மிகு நிலை கொழும்பில் மட்டுமல்ல நாடு பூராவும் தொடர்ந்து பரவுகின்றது.

இந்த நடவடிக்கைகட்காக புலிகளைத் தாக்கிப் பேசுவது, கண்டனம் தெரிவிப்பது எல்லாம் ஏட்டளவிலான 'நல்லியல்புத் தத்துவங்களாக' நின்று போக, யதார்த்த நிலையோ இவை குறித்த ஆச்சரிய உணர்வையும், வெறுப்புறும் தமிழ் மக்களது உணர்வுக்கு வடிகாலாக அமைவதையுமே ஏற்படுத்துவதாக உள்ளது.

ஆக புலிகளை மக்களைக் கொல்லும் பயங்கரவாதிகளாக நிரூபிக்கும் ஆதாரங்களாக இந்த நடவடிக்கைகளைப் பட்டியல் போடுவதால் புதிய பயன் எதுவும் ஏற்பட்ப் போவதில்லை என்பது தெளிவாகிறது. இது கொழும்பின் அச்ச நிலைக்கு மாற்று மருந்தாக அமைவதற்குப் பதில் புலிவெறுப்புக்கு ஒரு வடிகாலாக மட்டுமே அமைய முடியும்.

ஆனால் தேவை இவையல்ல.

தேவை அமைதியும் நிம்மதியும் நிறைந்த சுதந்திர வாழ்வை இந்த நாடு முழுவதும் அனுபவிக்க வேண்டும் என்பதே.

அதற்கு மருந்து துப்பாக்கிகளுக்குள் நிரப்பப்படும் வெடிமருந்துகள் அல்ல. இனங்களினிடையே சமத்துவத்தை கொண்டுவரும் அரசியல் தீர்வுதான் அது.

இதைச் செய்யும் ஆற்றலும், தகுதியும், ஏன் கடமையும் இருப்பது அரசாங்கத்திடமும் அதன் தலைவி ஜனாதிபதியிடமும் தான்.

ஆனால், இங்கே அதற்கான முயற்சிகளை பூதக் கண்ணாடி கொண்டு தேடவேண்டிய நிலை நிலவுவது தான் எமது துரதிர்ஷ்டம்!

## எழுப்பப்படாத கேள்விகளும் அளிக்கப்படாத பதில்களும்

# பத்து வருடங்களில் முஸ்லிம் காங்கிரஸ் சாதித்தது என்ன?



1988 பெப்ரவரி 11ம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சியாக அங்கீகாரம் பெற்றதிலிருந்தது கடந்த பத்தாண்டுகளாக அரசியலில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக நிலைபெற்றுள்ளது. இந்த நூற்றாண்டில் முஸ்லிம் அரசியல் எதிர்கொண்ட மிகக் கடினமானதும், சிக்கல் நிறைந்ததுமான பத்தாண்டுகள் அவை.

இந்தப்பத்தாண்டுகளின் தான் எண்ணற்ற அப்பாவி முஸ்லிம்களது உயிர்கள் காவு கொள்ளப்பட்டது. இனச்சுத்திகரிப்புக்கும், சொத்துப் பறிமுதல்களுக்கும் அவர்கள் ஆளாக நேர்ந்தது. அதனது இருப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது; வடபுலத்தில் பாரம்பரியமாக வசித்து வந்த ஏறத்தாழ ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் தமது தாயகத்தில் இருந்து துரத்தப்பட்டனர்.

முஸ்லிம்களுக்கு தங்களது அரசியல் வங்குரோத்துத்தனம் மிகக் கடுமையாக உறைத்த நாட்கள் அவை. முஸ்லிம் அரசியலில், நிரப்பப்படாத பெரும் வெற்றிடம் நிலவிய இந்தச் சூழல்தான், முஸ்லிம் காங்கிரசின் வேகமான வளர்ச்சிக்கும் முஸ்லிம் சமூகத்தில் பரவலாக அதற்குக் கிடைத்த ஆதரவுக்கும் முதன்மையான காரணம் எனலாம்.

முஸ்லிம் காங்கிரசின் அரசியல் பிரவேசம் மிகுந்த காலப் பொருத்தமுடையதாகவும், அப்போது நிலவிய அரசியல் சூழ்நிலையில் தவிர்க்க முடியாத தேவையாகவும் இருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் தன்னை ஒரு போராட்ட வீறுள்ள சக்தியாக இனங்காட்டியே தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்தது. தாம் இதுகால வரை ஆதரவளித்து வந்த பேரினவாத அரசியல் கட்சிகள் தமக்கு பெரிதாக எதுவும் செய்வதற்குச் சக்தியற்றவை என்பதை வடகிழக்கு முஸ்லிம்கள் அனுபவ ரீதியாக உணர்ந்தனர். முஸ்லிம் காங்கிரஸ் போன்ற ஒரு தனிக்கட்சிதான் தமக்கு விடியலைக் கொண்டு வரும் என அவர்கள் மானசீகமாக உணரத்தலைப்பட்டனர்.

ஸ்ரீ.ல.மு.காங்கிரசினரின் மேடைப் பேச்சுக்கள் ஒவ்வொரு முஸ்லிமினதும் தன்மானத்தையும் ஆழ்மன உணர்வுகளையும் மிகக்கடுமையாகப் பாதித்தன. முஸ்லிம் காங்கிரசின் அரசியல் பிரவேசம் தீர்க்கமான நோக்கங்களோடும், கொள்கைத் தெளிவோடுமே நிகழ்ந்துள்ளதென அப்போது உறுதியாக நம்பப்பட்டது. முஸ்லிம்களது பிரச்சினைகளை ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியே தீர்த்து வைக்க முடியும் என்று நீண்ட நெடுங்காலமாகப்பேசப்பட்டு வந்த கருத்துக்கு முஸ்லிம் காங்கிரசே செயலுருக் கொடுக்க முனைந்தது.

ஆயினும் ஒட்டுமொத்தமாக ஒரு சமூகத்தில் பிரதிநிதியாக தன்னை இனங்காட்டிய முஸ்லிம் காங்கிரஸ் தனது நோக்கத்தை அடைவதற்கு எந்தளவு தூரம் நேர்மையாகச் செயற்பட்டது என்பதை ஆராய்ந்தால் வெட்கங்களும், வேதனைகளுமே மிஞ்சும்.

அதனது ஆரம்ப காலங்களில் அபரிமிதமான செல்வாக்குப் பெற்றிருந்த ஒரு கட்சி ஏன் படிப்படியாக செல்வாக்கிழந்து மக்களிடமிருந்து அந்நியப்பட்டது? எந்தவொரு சமூக, அரசியல் இயக்கமும் ஒரு தசாப்த காலம் மட்டுமே மக்களிடையே மிகுந்த செல்வாக்கைப்பெற்றிருக்கும் என்று சொல்லப்படும் கருத்துக்கு முஸ்லிம் காங்கிரசும் உட்பட்டு விட்டதா?

மரபுவழி அரசியல் கட்சிகளுக்கு தான் எந்த வகையிலும் மாறுபட்ட ஒரு சக்தியல்ல என்பதை முஸ்லிம் காங்கிரசின் அரசியல் செயற்பாடுகள் நமக்கு மிகத்தெளிவாக உணர்த்தி விட்டன.

முஸ்லிம் காங்கிரசின் அரசியல் ஆழ்ந்த சமூகப்பொறுப்புணர்ச்சியோடு முன்னெடுக்கப்படவில்லை. மாறாக, அஷ்ரஃப் என்ற தனிமனிதரைச் சுற்றியே அது நிகழ்ந்தது. எங்கு ஒட்டு மொத்தமான சமூகத்தை விடவும் தனி மனிதர்களுக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கப்படுகின்றதோ, அங்கு விடுதலைக்கான குரல்களை எதிர்பார்ப்பது நமது முட்டாள் தனமாகவே இருக்க முடியும்.

அதீதமான தலைமை வழிபாடும், தலைமைக்கு இருந்த கேள்விக்குட்படுத்தமுடியாத வரன்முறையற்ற நிறைவேற்று அதிகாரமும் முஸ்லிம் காங்கிரசின் இயங்கு திசையை மிகத்தவறான இலக்குகளை நோக்கி நகர்த்தி விட்டது. ''அஷ்ரஃப்தான் முஸ்லிம் காங்கிரஸ் - முஸ்லிம் காங்கிரஸ்தான் அஷ்ரஃப்'' என்று கருதுமளவுக்கு மு.கா ஒரு வகைத் தனிநபர் கட்சியாகவே (நடைமுறை அர்த்தத்தில்) இயங்கி வருகிறது.

இன்றும் கூட அஷ்ரஃப் வந்து பேசினால் மக்களிடமுள்ள அதிருப்தியையும், பிரச்சினைகளையும் தீர்த்து விடலாம் என்றே கட்சியிலுள்ள பெரும்பாலானோர் நம்புகின்றனர். அவர்களைப்பொறுத்தவரை கட்சியை விட அஷ்ரஃப்தான் முக்கியமானவர்.

எப்போதுமே முஸ்லிம் காங்கிரஸ் விமர்சனங்களை அவை ஆரோக்கியமாக இருந்தபோதிலும் - அலட்சிய மனோபாவத்துடனேயே எடுத்து வந்திருக்கிறது. தவறுகளை அவற்றினது ஆரம்பத்திலேயே இனங்கண்டு திருத்துவது பற்றிய அக்கறையீன்ம் கட்சியின் வளர்ச்சியை மிகக்கடுமையாகப் பாதித்துள்ளது. இன்று முஸ்லிம் காங்கிரஸ் தன்னை முழுமையாக சுயவிமர்சன்ம் செய்ய வேண்டும் என்று பேசுவோர் கூட அக்கட்சி அவ்வாறு செய்யுமாயிருந்தாலும் அது பயனுள்ளதாக அமையுமா என்பதில் ஐயப்பாடுடையவர்களாகவே இருக்கின்றனர்.

பல்வேறுபட்ட அபிப்பிராய பேதங்களும், கருத்துப்பரிமாறல்களுமே ஒரு தாபனத்தின் 'பொதுப் பார்வையை' உருவாக்க முடியும். இந்தப் 'பார்வை

கருத்தியலின் உருவாக்கம் குறித்து முஸ்லிம்' காங்கிரஸ் மிக சீரியசாக இயங்கவில்லை போலவே தெரிகிறது.

அதனது மேலெழுந்தவாரியான அணுகுமுறையும், ஆரவார அரசியலும் ஒரு பலமான கருத்தியல் வெற்றிடமொன்று கட்சியுள் நிலவுவதை நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் ஒரு தேர்தற்கால அரசியல் கட்சியாகவே இயங்குகிறது. முஸ்லிம் சமூகத்தின் அரசியல் செல் நெறியைத் தீர்மானிக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை தனது தோள்களில் சுமந்து கொண்டிருக்க வேண்டிய அக்கட்சி, 10 வருடங்களாகியும் கூட இது பற்றிய குழப்பத்திலும், தெளிவீனத்திலுமே இயங்கி வருகிறது. முஸ்லிம் சமூகத்தை கௌரவமான அரசியல் அதிகாரமுடைய சமூகமாக மாற்றுவதற்கு வெளிக்கிட்டவர்கள் இன்று அரைகுறைத் தீர்வுகளை முன்வைப்பதன் மூலம் நமக்கு எரிச்சலூட்டுகின்றனர். தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் வகிக்க வேண்டிய பாத்திரம் குறித்தும், அதிகாரப் பகிர்வில் முஸ்லிம்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்தும் ஏன் முஸ்லிம் காங்கிரசிற்கு உறுதியான நிலைப்பாடு இல்லை? அடிக்கடி நிலைப்பாட்டை மாற்ற வேண்டிய் தேவை அதற்கு ஏன் வருகிறது?

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பற்றிய ஆரம்ப அறிவு இல்லாதவர்கள் கூட அங்கம் வகிக்கும் கட்சியின் அரசியல் அதியுயர் பீடத்தை எப்படி சமூக விடுதலைக்கான பாதையைத் தீர்மானிப்பதாகவோ அல்லது ஆழ்ந்த அரசியல் தீர்க்கதரிசனத்தோடு இயங்குவதாகவோ கொள்ள முடியும்?

முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க வந்ததாக மார்தட்டிப் பேசிய இவர்களுக்கு குறைந்த பட்சம் தீகவாபி விவகாரத்திலும், ஹஜ் பெருநாள் விடுமுறை விவகாரத்திலுமாவது நேர்மையாக நடக்க முடியாமல் போனமை மிகுந்த வெட்கக்கேடு. ஆளும் கட்சியில் குளிர்காய்ந்து சலுகைகளை அனுபவிக்கும் இவர்கள் தான், 'நாங்கள் சலுகைக்காகப் போராடுபவர்களல்ல, உரிமைகளுக்காகப் போராடுபவர்கள்'' என்று அடிக்கடி கூறிக்கொள்பவர்கள்.

இது ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமல்ல. அரசியல் என்பது இன்று மிகச்சிறந்த வியாபாரமாக மாறி விட்டது. அதற்கு முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்?

முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் பற்றி தலைவர் அடிக்கடி மனமுருகிப் பேசுவாரே, அந்தப் போராளிகள் இன்று மிகச்சிறந்த கொந்தறாத்துக்காரர்களாக பஜிறோக் கனவுகளோடு வலம் வருகின்றனர். ஒரு சமூகத்தின் விடுதலைப் போராட்டம் பாலம் கட்டுவதாகவும் றோட்டு போடுவதாகவும் மாறிவிட்ட அவலத்தை யாரிடம் சொல்லி அழ?

அம்பாறை மாவட்டத்துக்கு வெளியேயுள்ள முஸ்லிம்களது எந்தக் கலந்தாலோசனையுமின்றி தென்கிழக்குப் பிராந்தியசபை பற்றி முஸ்லிம் காங்கிரஸ் பேசுகிறது. அம்ப்றைக்கு வெளியேயுள்ள முஸ்லிம்களை இரவோடிரவாக அரசியல் அநாதைகளாக மாற்ற முஸ்லிம் காங்கிரஸ் விரும்புகிறதா? அம்மக்கள் உங்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பியது, குறைந்த பட்சம் அவர்களிடம் ஒரு வார்த்தையாவது கேட்காமல் உங்களுக்கு சௌகரியமான தீர்வுகளைத் திணிப்பதற்கா? முஸ்லிம் காங்கிரசினுள் ஆதிக்கம் செலுத்தும் அம்பாறை மையச் சிந்தனையானது முஸ்லிம் காங்கிரசினுள் நிலவும் பிரதேசவாதப் புற்றுநோய் எவ்வளவு வலுவானது என்பதை நமக்கு உணர்த்துகிறது.

முஸ்லிம் காங்கிரசுக்குக் கிடைத்த மிகப்பெரும் மக்கள் ஆதரவு ஆளும் கட்சிக்கு வால் பிடிப்பதற்காகவோ, அல்லது ஒரு சமூகத்தின் விடுதலைப் போராட்டத்தை அடகு வைப்பதற்காகவோ கிடைத்ததல்ல. அந்த மக்களது கண்களில் தேங்கிக்கிடப்பது நியாயமான உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு மக்கள் திரளின் எதிர்காலம் பற்றிய மிகப்பெரும் கனவும் நம்பிக்கையுமாகும். அந்த நம்பிக்கைகள் இவ்வளவு விரைவாகப் பொய்த்துப் போகுமென்று அந்த மக்களே நம்பியிருக்கவில்லை.

முழு முஸ்லிம் சமூகத்தையும் அரசியல் மயப்படுத்தி, விழிப்புணர்ச்சியூட்ட வேண்டிய முஸ்லிம் காங்கிரஸ் குறைந்தபட்சம் தனது அங்கத்தவர்கள் மத்தியிலேனும் அப்பணியை முன்னெடுக்கவில்லை.

திராவிடக் கட்சிகளது அரசியலை ஒத்த ஒரு வகை மலினத்துவ அரசியலையே முஸ்லிம் காங்கிரஸ் நம்மீது திணிக்க முனைகிறது.

ஒரு தனி முஸ்லிம் கட்சிக்கான தேவைகள் இன்னமும் இருக்கின்றன. ஆயினும், அது முஸ்லிம் காங்கிரசூல் ஈடுசெய்யப்படுவதற்கான சாத்தியங்கள் வெகு சொற்பமே. இன்றைய சூழலில் முஸ்லிம்களுக்கு முஸ்லிம் காங்கிரசைத்தவிர வேறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் சக்தி இல்லையென்பது உண்மைதான். நாம் விரும்பியோ விரும்பாமலோ முஸ்லிம் அரசியலில் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு முக்கியப்பாத்திரத்தை வகிக்கப் போகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற வீரியமிழந்த அரசியல் கட்சி நமது எதிர்கால அரசியலை முன்னெடுக்கப்போவது பற்றி நாம் ஓர் தீர்மானத்திற்கு வர வேண்டும். அது நமது நம்பிக்கைகளையும், கனவுகளையும் சிதறடித்து விட்டது. எனவே, ஒரு பலமான மாற்று சக்தியைக் கட்டியெழுப்புவதே நம் முன்னேயுள்ள் மிகக் கடினமான பணியாகும்.


*''ஆமாம்*
*கண்ணீரைக் கடந்துள்ளோம்*
*வியப்புகளை மீறியுள்ளோம்*
*உணர்ச்சிச் சுழிப்புகளை*
*உதறியுள்ளோம்*
*நிசத்தை நோக்கி நிமிர்ந்து*
*நிற்கிறோம்''*

**சண்முகம் சிவலிங்கம்**


**ஸிராஜ் மஷ்ஹூர்**






## குடும்ப வன்முறைகள் :



## “அவன் பைபிளைக் காட்டி என்னை சமாதானப் படுத்தினான்”

குடும்பம் என்ற சம்பிரதாயபூர்வமான அமைப்பில் பெண்களுக்கெதிரான உளவியல், உடலியல் வன்முறை அதிகம் பேசப்படாததொரு விடயமாகும். பெண்களது உரிமைகள், அசமத்துவம் போன்றவை பேசப்படும் அளவிற்கு இக்குடும்ப வன்முறைகள் (Domestic Violence) பேசப்படுவதில்லை. ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த வகையிலேயே இவை உரையாடல்களுக் குட்படுகின்றன எனலாம். பொதுவாகப் பெண்களுக்கு பாதுகாப்பளிக்கக் கூடிய அமைப்பாக குடும்ப அமைப்பைக் கருதுகின்றமை, அவ்வாறான அமைப்பில் நிகழக் கூடிய நன்மை, தீமைகள் என்பனவற்றை தமக்கு விதிக்கப்பட்டவை என அநேக பெண்கள் ஏற்றுக்கொள்கின்றமை போன்ற காரணங்கள் இவ்விடயத்தில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன எனலாம்.

இந்த வகையில் கடந்த ஜனவரி 18ம்திகதி, தேசிய நூலக சேவை மன்றத்தில் (National Library Service Board) காண்பிக்கப்பட்ட குடும்ப வன்முறைகள் குறித்த விவரணப் படமான Voices Heard, Sistres unseen முக்கியமானதொன்றாகும். இவ்விரணப்படம் ஐக்கிய அமெரிக்க நாட்டின் பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைகளைக் குறித்து நிற்கின்றது. வெகுகாலமாக ஐக்கிய அமெரிக்க நாட்டில், குடும்ப வன்முறைகளுக்கெதிரான அமைப்பொன்றில் சேவையாற்றிய கிறேஸ் பூல் (Grace Poole) அவர்கள் இவ்விவரணப்படத்தை இயக்கியுள்ளார். தற்போது இலங்கையில் சிறுவர்களுக்கெதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விவரணப்படமொன்றை இயக்குவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ள இவர், ஐக்கிய அமெரிக்க நாட்டில் அதிகளவு பெண்கள் குடும்ப வன்முறைகள் காரணமாக மிகுந்த பாதிப்புற்றுள்ளனரென்பதை தொண்டர் ஸ்தாபன ஊழியர்கள், அரச ஊழியர்கள் பாதிப்புற்றோர் ஆகியோர்களின் மூலம் இவ்விவரணப்படத்தினூடே கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இவ்விவரணப்படத்தை தாம் இயக்க உந்துசக்தியாகவிருந்த காரணத்தை தெரிவிக்க அவர் மறக்கவில்லை. “குடும்ப வன்முறைகள் எனும்போது நாம் கணவன்மார், தம் துணைவியரை ஆயுதம் கொண்டு தாக்குவது, அடிப்பது, உடலியல் ரீதியான தாக்கங்களை ஏற்படுத்துவது போன்றவை தாம். இவை உளவியல் ரீதியானவை. அதே போல் இதன் தாக்கமும் மிகப் பயங்கரமானவை. அத்துடன் இவ் உளவியல் வன்முறைகள் அதிகம் சமூகத்தினால் கவனிக்கப்படாதவையும் கூட. எனவே இவ்வாறான வீட்டுச் சூழல், குடும்பச்சூழல் வன்முறைகளில் வாடும் பெண்கள் தமக்கு எனக்கருதுகின்றோம். எனினும், ஒரு கணவன் தன் துணைவியை பட்டினி போடுவதும், அவளது பலவீனங்களை வேண்டத்தகாத விதத்தில் வலியுறுத்துவதும், அவளை தமது நடவடிக்கைகளின் மூலம் கூனிக் குறுகச் செய்வதும் கூட வன்முறைகள் முகமூடிகளை (Mask) அணிந்து கொள்கின்றனர். இம்முகமூடிகளுக்குள் இருக்கும் யதார்த்தத்தை எ்டுத்துச் சொல்வதே என் நோக்கம்” என்றார். தாம் ஐக்கிய அமெ்ரிக்காவில் சேவை செய்த ஸ்தாபனத்தில் தமக்கேற்பட்ட அனுபவம் ஒன்றையும் அவர் கூறினார். இது உளவியல் ரீதியான வன்முறைக்கு ஒரு சிறந்த உதாரணமாகும். தமது ஸ்தாபனத்திடம் உதவி கோரி வந்த ஒரு கறுப்பின கால்களை இழந்த பெண் பின்வருமாறு கூறத் தொடங்கினாராம்... “கடவுளே... என்னைக் காப்பாற்ற எவரும் இல்லை. நான் கால்களை இழந்து சக்கர நாற்காலியில் சுழன்று கொண்டிருக்கிறேன். எனது அறை (Apartnment) 20வது மாடியில் உள்ளது. என் கணவனின் கொடுமைகளில் இருந்து மீள முடியாத வகையில் என்னை அவன் அடைத்து வைத்துள்ளான். நான் சாப்பிட்டு பல நாட்கள். என்னால் எட்டி எடுக்க முடியாத தூரத்தில் உள்ள இறாக்கைகளில் அவன் உணவை வைத்துள்ளான். எனக்குரியது, என்னால் எட்டி எடுக்கக்கூடிய வகையில் உள்ள இரண்டு றொட்டித் துண்டுகள் மட்டுமே” என்றாராம் அப்பெண்.

இவ்விவரணப்படத்தில் கிறேஸ் அவர்கள் வீட்டு வன்முறைகளுகளுக்காளாகும் பெண்களை ஆறுவகைகளில் உள்ளடக்கியுள்ளார்.

1. விபச்சாரம் புரிவோர், 2. எய்ட்ஸ் காவிகள், 3. கணவனால் பாலியல் வன்முறைகளுக்காளானோர், 4. லெஸ்பியன்கள், 5. அங்கவீனர்கள், 6. சட்டவிரோதக் குடியேற்றவாசிகள். என்போர் இவ்வாறான வகைக்ளில் அடங்குகின்றனர். இவர்கள் முகம் கொடுக்கும் பல்வேறு வகையான வீட்டு வன்முறைகளை திரையில் விபரிக்கின்றார். அவர்களது குரல்கள் மட்டுமே ஒலிக்கின்றன, இருளில் முகங்கள் மறைந்துள்ளன. அத்துடன் வீட்டு வன்முறைகளுக்கெதிராக செயற்படும் தொண்டர்கள், நபர்கள் ஆகியோரது குரல்களும் ஒலிக்கின்றன. விபச்சாரம் புரிவோர் குடும்ப அங்கத்தவர்களிடையே எதிர்நோக்கும் வன்முறைகள், எய்ட்ஸை வழங்கி தம்மை காவிகளாக்கிய பெண்களின் கணவன்மார்களுக்கெதிரான ஆக்ரோஷங்கள், கணவனால் பாலியல் வன்முறைகளுக்காளாகி எதிர் கொள்ளும் துன்பங்களை விளக்கும் பெண்கள், சக லெஸ்பியனினால் சித்திரவதைகளுக்குள்ளாகும் பெண்களின் விபரிப்புகள். (ஆண் பெண் உறவில் இருக்கும் அசமத்துவ நிலைக்கு மாற்றாக ஒரு பால் உறவை லெஸ்பியனிசத்தை- முன்நிறுத்துபவர்கள் சிந்திக்க வேண்டிய விடயம் இது). தமது பிரச்சினைகளை சமூகத்தினரிடையே சென்று கூற முடியாத அங்கவீனர்கள், சட்டவிரோத குடியேற்றவாசிகளான சூழ்நிலை காரணமாக அவஸ்தைப்படும் பெண்களின் அவலங்கள் என்பன வெளிப்படுகின்றன. பிரச்சினைகளின் தீர்வுக்கும், சலுகைகளுக்கும் அரசு என்ற அமைப்பை அச்சமூகம் எதிர்பார்க்காத தன்மைகள் தொண்டர்களின் கூற்றுக்களிலிருந்து வெளிப்பட்டன. இது சிவில் சமூகத்தின் வளர்ச்சிக்கான சூழலைக் கோடி காட்டியது.

குறிப்பாக அங்கவீனப்பெண்கள் அதிக வீட்டு வன்முறைகளுக்குட்படுகின்றமையை குறிப்பிட்டுச் சொல்கின்றது இவ் விவரணத் திரைப்படம். சக்கர நாற்காலிகளின் மூலமாக தம்மால் நடமாடக்கூடிய சந்தர்ப்பங்கள், பொலிஸ் நிலையங்களிலோ, நீதிமன்றங்களிலோ இன்மை என்ற தன்மைகள் சுட்டிக் காட்டப்பட்டன. இதனால் தாம் உளவியல் ரீதியாக அதிக பாதிப்படைவதாகவும் கூறினர்.

→17

## மலையகப் பட்டதாரிகளும் கொஞ்சக் கேள்விகளும் !

### -ஒரு விவாதத்திற்கான சில குறிப்புகள்

பொ. பிரபாகரன்

பெப். முதலாம் திகதி அட்டன் நகர மண்டபத்தில் நடைபெற்ற மலையக பட்டதாரிகள் ஒன்றியத்தின் சிறப்புப்பொதுக்கூட்டத்தின் பின்னர், ஆழமாக சிந்தித்தபோது ஒரு கலந்துரையாடல் காத்திரமான வகையில் தொடரப்படவேண்டியதன் அவசியம் உணரப்பட்டதனால் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

மலையக மக்கள் தொகையில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான பட்டதாரிகளின் சமூகக் கடப்பாடு என்ன? அவர்கள் அணிதிரட்டப்படவேண்டிய அல்லது அணி திரளவேண்டிய அரசியல், சித்தாந்த அடித்தளம் என்ன? மலையக பட்டதாரிகள் என்ற வரையறையில் யார் யார் உள்ளடக்கப்படலாம்? மலையகத்தில் வாழும் பிறமாவட்டத் தமிழ் பட்டதாரிகள் இவ்வரையறையில் உள்ளடக்கப்படலாமா? இல்லாவிட்டால் எந்த அடிப்படையில், மலையகப் பட்டதாரிகளுக்கு பிரத்தியேகமான அமைப்பு அவசியமானது? மலையக சூழலில் பட்டதாரிகளை அணிதிரட்டக்கூடிய குறைந்தபட்சக் கோரிக்கைகள் என்ன? நிகழ்ச்சித்திட்டம் என்ன? பிரத்தியேகமான கல்வி, தொழில், வர்க்க, அரசியல், அபிலாஷைகளை கொண்ட சக்திகள் என்ற வகையில் ஒரு அமைப்பின் கீழ் திரள்வது சாத்தியமானது தானா. எந்த அடிப்படையில் அது சாத்தியப்படுத்தப்படலாம். மலையக பட்டதாரிகளுக்கு இருக்கின்ற/ சமூகப்பிரக்ஞையை வெளிப்படுத்த அவர்களை அணிதிரட்டும் அமைப்பொன்று கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச சித்தாந்த அரசியல் பின்தளம் என்ன? இவ்வாறான அடிப்படையொன்று அவசியமானதா? ஆம் எனில், அதன் வரையறைகள் என்ன? அவசியமில்லையெனில் அதன் குறிகோள்கள், இலக்குகளை நோக்கி நகர முடியுமா? பட்டதாரிகள் மட்டுமே அவ்வாறான அமைப்பில் இடம்பெற வேண்டுமா? பட்டதாரி அல்லாதோர் சேர்க்கப்படலாமா? அவ்வாறு சேர்க்கப்படுவதற்கான அடிப்படைகளும், வரையறைகளும் யாவை? மலையக சமூகத்திற்கு சேவை செய்தவர்கள் என்ற வகையில் தொழிற்சங்க, தொண்டர் ஸ்தாபன, அரசியல் சக்திகள் இடம்பெற அனுமதிக்கலாமா? ஆம் எனில், எந்த அடிப்படைகளில், வரையறைக்ளில் அனுமதிக்கப்படலாம்? இல்லையெனில், அவர்களிடையே இருக்கின்ற தீர்க்கமான அறிவுத்துறை பாத்திரம் வகித்தவர்களை உள்ளெடுக்கலாமா? அவ்வாறான போது அதன் வரையறைகள் என்ன? (உதாரணம்; எஸ். நடேசன், எல். சாந்திகுமார், பி.ஏ.காதர், பெ.முத்துலிங்கம்.... போன்றவர்கள்.)

ஒரு அமைப்பில் இருப்பவர்கள் அமைப்பிற்கென்றும், தனக்கென்றும் பிரத்தியேகமான கொள்கைகளைக் கொண்டிருக்க முடியுமா? இன்றைய சூழலில் பட்டதாரிகள் அரசியல் சார்பற்ற அமைப்பாக அல்லது அரச சார்பற்ற அமைப்பாக தொழிற்படுவது பொருத்தமானதா? அவ்வாறெனில், அது சமூகத்தின் பிரதான பிரச்சினைகளை மழுங்கடித்து, கூர்மங்கச்செய்வதாக அமையமாட்டாதா? பிற்போக்கு சக்திகளின் பின் அணிதிரளவும் சந்தர்ப்பவாத நெருக்கடிகளின் போதும் அமைப்பை பயன் படுத்திக் கொள்ளவும், வழிவகுக்கமாட்டாதா? என்ற அடிப்படை வினாக்களை ஒட்டிய பகிரங்க கருத்தாடல் அவசியமானதா என்பதும், பட்டம் பெற்றவர்கள் அறிவுஜீவிகளாக அல்லது சாதாரண மக்களிடமிருந்து அந்நியப்பட்டவர்களாக பிரத்தியேகமானவர்களாக இனம்காண்பது எந்தளவு பொருத்தப்பாடுடையது என்ற வினாக்களும் சேர்த்து எழுப்பப்படவேண்டும்.

✦ இப்போதைய நிலையில் மலையகப் பட்டதாரிகள் ஒன்றியமானது தனக்கு எவ்வித அரசியல் சித்தாந்த அடிப்படைகளும் கிடையாதெனவும், அவ்வாறானதொரு அடிப்படையை முன்வைப்பதினூடாக தம் அங்கத்தவர்களை சிதறி சின்னாபின்னமாக்க முடியாதெனவும் வெளிப்படையாகவே கூறுகின்றது.

✦ மலையக பட்டதாரிகள் தமக்கென தனியான அரசியல் நடவடிக்கைகளையும் கொண்டிருக்க முடியும் எனவும் ஆனால் அமைப்பின் பெயரைப் பயன்படுத்தாமல் இருந்தால் சரியெனவும் கூறுகின்றது.

✦ பட்டதாரிகள் ஒன்றியத்தில் இல்லாதவர்கள் கூட்டங்களில் பங்குபற்றாதவர்கள் ஏதாவது உருப்படியாக செய்து கொண்டிருக்கக்கூடும் எனவும் கூறப்படுகிறது.

அட்டனில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பங்கு பற்றியவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பாடசாலை அதிபர்களும், கல்வி அதிகாரிகளும் ஆவர். எஞ்சியோரில் மூன்று சட்டத்தரணிகள் போக ஏனையோர் பாடசாலை ஆசிரியர்கள் ஆவர். கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு மலையகப் பட்டதாரிகள் இயங்குவதனால் கூட அவர்கள் தம் கடமையை நேர்மையுடனும், இதய சுத்தியுடனும் மக்களின் வரிப்பணத்தில் வாழ்கிறோம் என்ற பொறுப்புணர்வுடன் செய்வார்களேயானால் அதுவே போதுமானது. ஆனால் மாணவர்களின் கல்வியை பாழடித்து கடமை தவறி, தம் சுயநல சுகபோகங்களுக்காக மக்களது வரிப்பணத்தை விரயமாக்கி, உயர் கல்வியைப் பெற்ற பிரிவினர் தமது சுய வாழ்வுக்கான ஏணிப்படியாக கல்வித் துறையை பயன்படுத்தும் பிரிவியினர், ஒரு உள்ளடக்கமோ, தூரநோக்கோ, மானிடத்தின் தேவைப் பாட்டை பூர்த்தியாக்குவதையோ, முன்னிலைப்படுத்தாத காலனித்துவக் கல்வியின் மூலம் பெற்ற வெற்றுப்பட்டங்களை மட்டும் மூலதனமாகக் கொண்ட ஒரு முகிழ்தலையை இந்த மண்ணில் கொண்டு வர முடியுமா?. ஆனால் கூட்டத்தில் கலந்து கொண்ட பொ. பிரபாகரன், மலையக பட்டதாரிகள் தமக்கென அரசியலையும் சித்தாந்த அடிப்படையையும் கொண்டிருக்க வேண்டும். அப்படியல்லாத போது, பிற்போக்கு சக்திகளின் பின்னால் அணிதிரள அல்லது அறிவு துறையினரின் அயைய நேரிடும் என சுட்டிக்காட்டினார்.

இராஜேந்திரன், (சிறிபாத கல்லூரி விரிவுரையாளர்) குறைந்தபட்சம் மலையக கல்வியகங்களில் தகமையுடையோருக்கு பதவிகளை பெற்றுத் தரவாவது முயல வேண்டுமெனக் கூறினார்.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளர் லெனின் மதிவானம், குறைந்த பட்ச இதய சுத்தியுடன், நேர்மையுடன் எடுக்கின்ற சில முன்னெடுப்புக்களையாவது செய்ய வேண்டும் என்றார்.

விரிவுரையாளர் சிறிதரன், 'கம் உதாவ' போன்று சீசனுக்கு சீசன் கூட்டம் கூடி கலையும் ஒரு அமைப்பாக இருக்கக்கூடாது என இடித்துரைத்தார்.

லோரன்ஸ் (மலையக மக்கள் முன்னணி), விஜயகுமார் போன்றோர் குறைந்தபட்ச அரசியல் அபிலாசை என்ன என வினா எழுப்பினர்.

அதிபர்கள் தரப்பில் பேசிய சந்திரசேகரன் அவர்கள், பிந்திவந்தவர்களாதலால்கூட்ட உள்ளடக்கத்தை புரிந்துகொள்ள வில்லையெனவும், இவ்வாறு தவறாக வழிநடத்த முயல்பவர்களை வெளியேற்ற யாப்பில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்றார். இவருக்கு பிரபாகரன், லெனின் போன்றோர் காட்டமாக பதிலளித்தபோது அவர் மன்னிப்புக் கோரினார்.

எதை புரிந்து கொள்ள வேண்டும்? மலையகத்தின் பிற்போக்கு தலைமைகளுக்கு முட்டுக் கொடுத்து நலிவுறும் போதெல்லாம் அறிக்கை வெளியிடும் புத்திஜீவிகள் என்ற சமூகவிரோத சக்திகளையா?

இ.தொ.காவின் கைக்கூலியாக மலையக கல்வித்துறை சீரழிவுக்கு துணை போன மாரிமுத்து போன்றவர்கள்

→17

# ஐ.தே.க.வின் தீர்வுத் திட்டம்:



# சாதகங்களும் பாதகங்களும்!

*சார்ள்ஸ் அபேசேகரா*

அரசியலமைப்புத் திருத்தம் கடந்த இரண்டு வருடமாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துரையாடப் பட்டு வருகிறது. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள அனைத்து அரசியற் கட்சிகளதும் பிரதிநிதித்துவத்துடனும் அமைக்கப்பட்ட இத்தெரிவுக்குழுவினால், இக்காலத்தினுள் நிச்சயமான தீர்மானங்களுக்கு வர முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்., ஆனாலும் இப்பிரச்சினை தொடர்பாகக் கட்சிக் கோணத்திலிருந்து பார்ப்பதற்கும் பிரச்சினையிலுள்ள தேசிய முக்கியத்துவத்தை இனங்காணாமைக்கும் அனைத்து அரசியல் கட்சிகளுமே பொறுப்பேற்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயமாகும்.

இறுதியாகத் தெரிவுக்குழுவினுள் உடன்பாடொன்றுக்கு வர அவகாசம் போதாது என்ற முடிவுக்கு வந்து; தெரிவுக்குழுவின் தலைவர் ஜீ.எல். பீரிஸ் அரசியலமைப்பு சீர்த்திருத்தத்துக்காக அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தைப் பாராளுமன்றத்துக்குக் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் சமர்ப்பித்தார். இந்நகலில் ஏனைய கட்சிகளால் தெரிவுக்குழுவில் முன்வைக்கப்பட்ட சில திருத்தங்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்துக்குப் பதிலாக ஐ.தே.க.ட்சியினால் சில திருத்தங்கள் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இப்போது முன்வைக்கப்பட்டுள்ளவை அரசியலமைப்பின் சில பந்திகள் பற்றிய யோசனைகள் மட்டுமே எனவும், ஏனைய திருத்தங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் எனவும் ஐ.தே.க. கூறியுள்ளது.

இப்போது ஐ.தே.கவினால் வெளியிடப்பட்டுள்ள தீர்வுத்திட்டத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அதில் முதலாவது; **புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை நோக்கி...** எனப்பெயரிடப்பட்டுள்ளது. அதன் நோக்கம் அரசின் சில முக்கிய நிறுவனங்களைக் கட்சி அரசியலின் பிடியிலிருந்து விடுவிப்பது எனக்குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்காக ஐ.தே.க. அந்நிறுவனங்களைச் சுயாதீன நிறுவனங்களாக மாற்றுவதற்கு யோசனை தெரிவித்துள்ளது. இதற்காக அவர்கள் தெரிவு செய்துள்ளவை அரச சேவை, பொலிஸ், தேர்தல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களாகும்.

சுயாதீனமாக செயற்படக்கூடிய ஆணைக் குழுக்களுக்கு இவ்விடயங்கள் தொடர்பாக அதிகாரங்கள் கையளிக்கப்படும். கட்சி அரசியலிலிருந்து அவ் ஆணைக்குழுக்களை விடுவிப்பதற்காக அவ் ஆணைக் குழுக்களின் உறுப்பினர்கள்,; அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்படும் அரசியலமைப்புச் சபையொன்றினால் பெயரிடப்படும் பட்டியலொன்றினால் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆணைக்குழுக்களின் அதிகாரங்களும், செயற்பாடுகளும் அரசியலமைப்பினுள் உள்ளடக்கப்படுவதால் காலத்துக் காலம் பதவியேற்கும் அரசாங்கக் கட்சிகளின் தலையீட்டிலிருந்து அவற்றைத் தனிமைப்படுத்த முடியுமென்பதும் யோசனைகளின் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுக்களின் அதிகாரம், செயற்பாடுகள் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் தோன்றக்கூடும். ஐ.தே.க. தீர்வுத்திட்டத்தில் தெரிவிக்கும் சில விடயங்கள் பற்றி எமக்கும் பிரச்சினைகள் உள்ளன. அவ்விபரங்கள் எவ்வாறெனினும், இவ்யோசனைகளுக்குப் பின்னணியிலுள்ள சிந்தனை நல்லதே. நாமும் பல காலமாக இக்கருத்துக்களை முன்வைத்துள்ளோம். அமைச்சா பீரிஸ் சமர்பித்த அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்திலும் கூட. இச்சிந்தனை உள்ளடக்கப்பட்டு இருந்தது. ஆனாலும் எனக்குத் தெரிந்தளவில் ஐ.தே.கவின் தீர்வுத்திட்டம் இச்சிந்தனை மேலும் முன்னோக்கிக் கொண்டு சென்றுள்ளது.

ஐ.தே.கவினால் சமர்பிக்கப்பட்ட இரண்டாவது யோசனை; மத்திய அரசும் அதன் நிறுவனங்களினுள் சிறுபான்மை தேசிய இனங்களும் ஏனைய சிறுபான்மையினரும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தயாரிக்கப் பட்டுள்ளது.

உதவி ஜனாதிபதி பதவிகள் இரண்டு உருவாக்கப்படுவதும், அப்பதவிகளைச் சிறுபான்மை இனங்கள் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக உபயோகிப்பதும் போன்ற யோசனைகள் இதில் உள்ளன. ஆனால் இதன் பிரதான இலட்சணமாவது பதில் உறுப்பினர் சபையாகும்.

சிறுபான்மை இனங்களின் - விஷேடமாகத் தமிழ்ப் பிரஜைகளின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்களின் பிரதிநிதித்துவத்தை இரு விதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டுமென நாம் பல காலமாக சொல்லி வந்தோம். முதலில் அவர்கள் பிரதானமாக வாழும் பிரதேசங்களில் அவர்களுக்கு சுயாட்சி சபையொன்றை வழங்குவதாகும். இது தமிழ் அரசியல் கட்சிகளினால் பல காலமாகவே முன்வைக்கப்பட்டு வரும் கோரிக்கையாகும். இரண்டாவதாக மத்திய அரசினுள்ளும் சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகள் பிரதிநிதித்துவப் படுத்தப்பட வேண்டும். மத்திய அரசின் கொள்கைகளை அமைப்பதில் அவர்களும் பங்குபற்ற வேண்டும்.

அரசொன்றின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க இம்முறைகள் இரண்டுமே அவசியமானதாகும். ஒரு புறம் பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அதேவேளை பிராந்தியங்களை மீண்டும் மத்திய அரசுக்கு இழுத்துக் கொள்வதும் அவசியமானதாகும்.

எம்மால் குறிப்பிடப்பட்ட முதலாவது பணி அரசாங்கத்தின் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் கோட்பாட்டினூடாகச் செயற்படுத்தப்படும். அதனூடாக தமிழ்ப் பிரஜைகளுக்கு அவர்கள் வாழும் பிரதேசங்களின் ஆட்சி அதிகாரம் உரித்தாகும். ஆனாலும் அமைச்சர் பீரிஸின் தீர்வுத்திட்டத்தின் பிரதானமான குறைபாடாக நாம் கண்டதும், பல புத்திஜீவிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதும் என்னவென்றால்; இரண்டாவது பணியை நிறைவேற்றுவதற்காக எதுவித இயந்திரமொன்றும். அங்கு இல்லாதிருப்பதாகும்.

இவ்விராண்டாவது பணியை நிறைவேற்றுவதற்காகப் பல அரசியலமைப்பு ரீதியான ஒதுக்கீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் முக்கியமானதும், சிறந்ததுமான இயந்திரம் பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுதியான அதிகாரங்களைக் கொண்ட மேற்சபையொன்றாகும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கோட்பாட்டை எமது அரசியலமைப்பிலும் அரசியல் வியூகத்திலும் ஒன்று சேர்ப்பதற்கு யோசனை தெரிவிப்பது மிகவும் பெறுமதியுள்ள நடவடிக்கையாக நான் உணர்கிறேன்.

கோட்பாடு நல்லதாய் இருந்தாலும் ஐ.தே.கவினால் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ள மேற்சபை பற்றி எமக்கு அநேக கேள்விகள் உள்ளன. பிராந்தியங்களுக்குக் கிடைக்கும் ஆசனங்களின் எண்ணிக்கையை அப் பிராந்தியங்களின் சனத்தொகையின்படி தீர்மானிக்கப்பட்டால் மேற்சபையிலும் பெரும்பான்மையின் ஆதிக்கம் கட்டாயமாகக் காணப்படும். மேற்சபையினால் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு அது பெரும் தடையாக இருக்கக்கூடும். அதிகாரத்தைப் பகிர்வது, மனித மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகிய தலைப்புக்கள்பற்றி நிச்சயமான சில அதிகாரங்கள் மேற்சபைக்கு இருக்க வேண்டும். மேற்சபையின் அனுமதியில்லாது அவ்வாறான விடயங்கள் தொடர்பாகச் சட்டம் இயற்றும் அதிகாரம் வரையறுக்கப்படவேண்டும்.

இதுபோன்ற விடயங்கள் தொடர்பாகக் குறைபாடுகள் இருந்தாலும் மேற்சபையொன்றை நிறுவுவதற்காகச் செய்யப்பட்டுள்ள யோசனை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே.

ஐ.தே.கவினால் முன்வைக்கபட்டுள்ள யோசனைகளினூடாகப் பிரதான கட்சிகள் இரண்டுக்கிடையில் கலந்துரையாடலொன்றைத் திரும்ப ஆரம்பிக்கவும் இரு கட்சிகளும் உடன்படக்கூடிய அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைத் தயாரிப்பதற்கான முயற்சியொன்றை மேற்கொள்ளவும் ஒரு வாய்ப்பு உருவாகியுள்ளதாகத் தெரிகிறது. அவ்வாறான முயற்சியொன்று சாத்தியப்படுமானால் அதனால் மட்டற்ற இலாபங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறைப் படுத்தப்படுவதும் இலகுவாகும்; தமிழ் மக்களின் உடன்பாட்டை வென்றெடுக்கும் ஆற்றல் அதிகமாகும். இனங்கள் இரண்டினதும் தீவிரவாத சக்திகள் பலவீனப்படும்.

**தமிழில்: சி.செ.ராஜா**

**நன்றி : யுக்திய**

---

# வெலிக்கடை...

போவார்கள். அங்கே புலியைப் பிடித்து வந்தது போல என்னைப் பார்க்க என்னைச் சுற்றி ஒரு கூட்டமிருக்கும். பசிக்கும் போது சாப்பிட உணவிருக்காது. சாப்பாடு கொடுக்கும் போது முன்னுக்குப் போய் நின்றால் சிங்களப் பெண் கைதிகள் தள்ளி விழுத்தி விடுவார்கள். தண்ணீருக்கும் இதே நிலை தான். சிறைச்சாலை ஊழியர்களிடம் இது தொடர்பாகக் கூறி இருக்கிறேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழ்க் கைதிகள் தாக்கப்பட காரணமானவர்களான இவர்கள் எப்படி உதவி செய்வார்கள்? பதிலுக்கு என்னை முறைத்துப் பார்ப்பார்கள். ஏப்ரல் நடுப்பகுதியில் குழந்தை கிடைக்கும் என்று டொக்ரர் கூறியிருக்கிறார். இதனை விடக் கொஞ்சம் வசதியான இடத்துக்கு மாற்றி விடச் சொல்லிவிட மாட்டீர்களா?'' என்று என்னிடம் கெஞ்சினாள் அந்தப் பெண்மணி.ஐந்து கிராமங்களல்ல, ஐந்து வீடுகளுமல்ல ஒதுங்க ஒரு தாழ்வாரம் கேட்கிறாள் அந்தப் பெண்மணி. உங்களைப் பார்க்க அனுமதி கேட்ட போதே என்னைப் பார்த்து அவன் முறைத்தான் என்று நான் அவளிடம் எப்படிக் கூறக் கூடும்?

இவளுடன் கூட இருந்த இன்னொரு பெண் மலையகத்தைச் சேர்ந்தவள். அவள் கூறுகிறாள்; ''எனது குழந்தைக்குச் சருமவியாதி.'' அவள் குழந்தையைத் தூக்கிக் காண்பித்தாள். ''டொக்டரிடம் காட்ட அனுமதி கேட்டேன். பெண்ணுருவில் நடமாடும் பேய் என்று என்னை அடித்து விரட்டி விட்டார்கள். உங்களுக்குத் தெரியுமோ தெரியாது. கடந்த வாரம் வெலிக்கடைச் சிறையிலிருந்த பெண்கள் பகுதி தண்ணீர்த் தாங்கி இடிந்து விழுந்து நான்கு சிங்களப் பெண்கைதிகள் கொல்லப்பட்டு விட்டனர். பலர் காயமடைந்தார்கள். தமிழ்க் கைதிகள் கொல்லப்படவோ காயப்படவோ இல்லை. இது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கக் கூடும். தமிழ்க் கைதிகளை குளிக்கவோ தண்ணீர் பிடிக்கவோ அனுமதிப்பதில்லை. ஆனால் நடந்தது என்ன தெரியுமா? இச்சம்பவம் நடப்பதற்கு முதல்வாரம் குடிக்கத் தண்ணீர் கேட்டு தமிழ்ப் பெண் கைதிகள் போராட்டம் நடாத்தினார்கள். அதற்குத் தலைமை தாங்கிய பெண்ணைப் பிடித்து உன்னால் தான் தண்ணீர் தாங்கி இடிந்து விழுந்து எமது சிங்களப் பெண்கள் மரணமானார்கள் என்று கூறி சிங்களப் பெண் கைதிகள் தாக்கி இருக்கிறார்கள். இதனால் துயருற்ற அத்தமிழ்ப் பெண்மணி தற்கொலைக்கு முயற்சித்திருக்கிறார்... அவர் கூறிக் கொண்டே போகிறார். இதற்கு மேல் நான் சந்தித்தவர்களின் கதையைக் கூறப் போவதில்லை. அங்கிருக்கும் பெண்கைதிகள் ஒவ்வொருவருக்கும் பின்னால் ஒரு துயர் மிகு கதையிருக்கும். இவர்களில் யாரும் பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புள்ளவர்கள் என்று நீதிமன்றில் நிரூபிக்கப்படாதவர்கள். வெறும் சந்தேக நபர்கள். எந்தக் குற்றமும் இழைக்காதவர்கள். இவர்களுடைய துயரங்கள் உங்களுக்குக் கேட்கின்றனவா?

*''இத்தகைய துயரம் மலைகளுக்குக் கூனல்*
*விழச் செய்து விடும்*
*ஆறுகளின் போக்கைத் திருப்பி விடும்?*
*ஆனால் மனித வேதனை மண்டிக் கிடக்கும்*
*இந்தச் சிறைக் கூண்டுகளை நாம் எட்ட*
*விடாமல் தடுக்கும்*
*இந்தக் கனமான தாழ்ப்பாள்களை*
*அதனால் உடைக்க முடியாது*
*சிலருக்குத் தென்றல் இதமாய் வீசும்*
*சிலருக்கோ கதிரொளி சுலபமாய் மங்கி*
*மறையும்*
*ஆனால் பீதியால் பிணைக்கப்பட்டுள்ள நம்*
*காதில் விழுவதோ*
*பூட்டுக்களைத் திறக்கும் சாவிகளின் நாரசம்*
*காவலர்களின் கனத்த காலணிகள் எழுப்பும்*
*மிதியோசை*
*அதிகாலைப் பூசைக்குச் செல்பவர் போல்*
*நாங்கள் எழுந்து*
*ஒவ்வொரு நாளும் இப் பாழ் வெளியில்*
*நடந்தோம்*
*மௌனத் தெருக்களிலும் சதுப்புக்களிலும்*
*களைப்புடன் நடந்து*
*நடைப்பிணங்களாய் ஒன்று கூடினோம்*
*சாய்ந்தது சூரியன், மங்கலாயிற்று நேவா நதி*
*எப்போதும் தொலைவிலிருந்தே கீதமிசைத்தது*
*நம்பிக்கை*
*இங்கு யாருக்கு இன்று தண்டனை?... அந்த*
*ஓலம்*
*திடீரென்று பெருக்கெடுத்த அந்தப்*
*பெண்ணின் கண்ணீர்*
*அவளைப் பிறரிடமிருந்து பிரித்துக் காட்டியது*
*அவர்கள் அவளை அடித்துத் தரையில் தள்ளி*
*அவளது மார்பிலிருந்து இதயத்தைப்*
*பிய்த்தெடுத்து...''*

***(அனா அக்மதேவாவின் சமர்ப்பணம் என்ற கவிதையிலிருந்து)***

# மாற்றங்களுக்கு உள்ளாகும் தமிழக அரசியல் !



இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் பெருமளவு முடிவடைந்து விட்டது. மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சி (BJP) அணி அறுதிப் பெரும்பான்மையைப் பெறாவிட்டாலும் அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இது எதிர்பார்த்த ஒன்று தான். ஆச்சரியப்படுமளவுக்கு அங்கு பெரிதாக எதுவும் இல்லை.

ஆனால், எல்லோரையும் ஆச்சரியமடைய வைத்த விடயம் தமிழக தேர்தல் முடிவுகள் தான். அங்கு எவருமே எதிர்பார்த்திராத வகையில் கருத்துக் கணிப்புகள் எல்லாம் தூக்கி வீசப்பட்ட நிலையில் அ.தி.மு.க. அணி பாரிய வெற்றியை ஈட்டியுள்ளது. அதுவும் செல்வாக்கு குறைந்த கட்சிகள் எனக் கருதப்பட்ட பாரதீய ஜனதா தமிழக ராஜீவ் காங்கிரஸ், ம.தி.மு.க. வேட்பாளர்களே முதல் மூன்று அதிகூடிய வாக்குகள்ளைப் பெற்றவர்களாகவும் விளங்குகின்றனர்.

இத் தேர்தல் முடிவுகள் தமிழகத்தில் பல மாற்றங்களை எதிர்காலத்தில் உருவாக்கும் என்று எதிர்பார்க்கலாம். கட்சிகளின் கூட்டுக்களிலும் வியூகங்களிலும் கூட மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. கவனத்தில் எடுக்கப்படாத சிறிய கட்சிகள் சாதிய அமைப்புகள் என்பதையும் இனிமேல் தாக்கம் செலுத்துபவையாகவும் மாறும்.

## தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்திய உண்மைகள்

அ.தி.மு.க அணியின் வெற்றிக்கு நிலையான ஆட்சி என்ற கோசமும், கோவை குண்டு வெடிப்புமே பிரதான காரணங்கள் என தி.மு.க. அணியினால் கூறப்படுகின்றது. இவற்றில் முதலாவது காரணத்தில் பெருமளவு உண்மை இருக்கலாம். தமிழக மக்கள் மாநில தேர்தல்களில் தாம் விரும்பிய கட்சிக்கு வாக்களிக்கின்ற அதே வேளை, மத்தியில் நிலையான ஆட்சியை அமைக்கக் கூடியவர்களுக்கே வாக்களிப்பது வரலாறாக உள்ளது. 1996 தேர்தல் மட்டும் இதற்கு புறநடை. இதன் காரணமாக மத்தியில் காங்கிரஸ் மிகவும் பலவீனமுற்ற நிலையில் அவர்கள் (BJP)யை தேர்ந்தெடுத்திருக்கலாம்.

இத் தேர்தலில் கூட சட்டசபைக்கு இடைத்தேர்தல் நடைபெற்ற குன்னூர் சட்டப் பேரவைத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் ரங்கநாதன் 47,850 வாக்குகளைப் பெற்றுள்ள அதேவேளை மக்களவைக்கு போட்டியிட்ட தி.மு.க. அணி வேட்பாளர் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் 41,901 வாக்குகளையே பெற்றிருந்தார். இது மத்திக்கும் மாநிலத்திற்கும் மக்கள் வெவ்வேறு தீர்ப்புகள் வழங்கியள்ளதையே வலியுறுத்துகின்றது.

இரண்டாவது காரணமாகிய கோவை குண்டு வெடிப்பு பாரிய தாக்கத்தினை செலுத்தியுள்ளது எனக் கூற முடியாது. எனினும் கோயம்புத்தூர் தொகுதியிலும் அதற்கு அருகிலுள்ள தொகுதிகளிலும் தி.மு.க. அணிக்கு வாக்குச் சரிவை உண்டு பண்ணியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

இவ்விரண்டுக்கும் மேலாக வெற்றியைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகித்தது அ.தி.மு.க. அணியின் கூட்டுகளேயாகும். அ.தி.மு.க. கூட்டணி மிகவும் பலமான கூட்டணியாக இருந்தது. அதிலுள்ள தொண்டர்கள் மிகவும் விசுவாசத்துடனும், ஐக்கியத்துடனும் வெற்றிக்காக கூட்டாக உழைத்தனர். இத்தகைய தன்மை தி.மு.க. அணியில் தொண்டர்களுக்கடையே காணப்படவில்லை. கடந்தகாலம் தொடர்பாக பல மனக்கசப்புகள் இருந்தன. இதனால் அவர்கள் தீவிரமாக உழைக்கவில்லை. இதைவிட த.மா.க. வாக்குகளில் பல சோனியாவின் பிரச்சாரத்தினால் காங்கிரசுக்கு சென்றன. மேலும் சில உயர் சாது வாக்குகள் BJP-அ.தி.மு.க. அணிக்கும் சென்றுள்ளன.

தி.மு.க. அணிக்கெதிரான வாக்குகள் சிதறக் கூடாது என்பதில் ஜெயலலிதா கவனமாக இருந்தளவுக்கு கருணாநிதியும் மூப்பனாரும் கவனமாக இருக்கவில்லை. இதனால் தங்களை தேடிவந்த மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி, எம்.ஜி.ஆர் அ.தி.மு.க., புதிய தமிழகம் என்பவற்றை இவர்கள் அரவணைக்கவில்லை. இருவரும் தங்கள் கட்சி வேட்பாளர்களில் இருந்து ஓரிரு ஆசனங்களையாவது விட்டுக் கொடுக்கவிரும்பாமையே இதற்குக் காரணமாகும். அரவணைப்பு நிகழ்ந்திருக்குமானால் பல தொகுதிகளை இவ்வணி பெற்றிருக்கும். குறிப்பாக மதுரை தொகுதியில் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினாலும், புதுக்கோட்டைத் தொகுதியில் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வினாலும் திருநெல்வேலி, தென்காசி தொகுதிகளில் புதிய தமிழகத்தினாலும் திமு.க. அணி வெற்றி வாய்ப்பை இழந்திருந்தமையை தவிர்த்திருக்க முடியும். இதில் "புதிய தமிழகம்" தேவேந்திர வேளாள சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாகும்.

## எதிர்கால கூட்டுக்கள் எவ்வாறு அமையும்?

எதிர்காலத்தில் இரு அணிகளும் தத்தமது கூட்டுக்களை பலப்படுத்தவே மேலும் மேலும் முயற்சிக்கும். தி.மு.க. அணி, அநேகமாக காங்கிரஸ் கட்சியைத் தனது கூட்டுடன் இணைத்துக்கொள்ளம் அதற்கான அறிகுறிகள் இப்போதே தென்படத் தொடங்கியுள்ளன. ராஜிவ் கொலைத் தீர்ப்பிற்குப் பின்னர் காங்கிரசிற்கு இருந்த தி.மு.க.வின் மீதான சந்தேகம் நீங்கி விட்டது. என்ற கருணாநிதியின் அறிக்கையும் தி.மு.க.வினை எம்முடன் இணைத்துக் கொள்வதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்ற காங்கிரஸின் தலைவர்களில் ஒருவரான சரத்பவாரின் அறிக்கையும் இதனையே வெளிப்படுத்துகின்றன.

தி.மு.க.வினைப் பொறுத்தவரை தற்போதுள்ள பிரச்சினை மத்திய அரசில் பங்கு பெறுவதோ, தன்னுடைய தன்மானப் பிரச்சினை பற்றி கேள்வி எழுப்புவதொ அல்ல. மாறாக உள்ளூர் முதலைக் காப்பாற்றிக் கொள்வதே ஆகும்.

இத் தேர்தலில் அ.தி.மு.க. அணி 47.23 வீத வாக்குகளையும், தி.மு.க. அணி 42.74 வீத வாக்குகளையும் பெற்றிருந்தன. இதிலுள்ள இடை வித்தியாச வாக்குகள் 4.49 வீதத்தினையும் எவ்வாறாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே தி.மு.க.வின் இலக்கு காங்கிரஸ் கட்சி இத்தேர்தலில் 5.13 வீத வாக்குகளைப் பெற்றிருந்தது. எனவே காங்கிரஸ் கட்சியை இணைப்பதன் மூலம் அதனைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்பதே தி.மு.க.வின் தற்போதைய நோக்காக உள்ளது. தொகுதி அடிப்படையில் வாக்குகளைப் பாாக்கும் போது இத்தேர்தலில் கூட காங்கிரஸ் தி.மு.க. அணியுடன் சேர்ந்திருந்தால் எட்டு தொகுதிகளை தி.மு.க. அணி மேலதிகமாக கைப்பற்றியிருக்க முடியும்.

அரசியலில் நிரந்தர நன்பனும் கிடையாது. நிரந்தர எதிரியும் கிடையாது என்ற புகழ்பெற்ற வாசகத்தின் தந்தையும் கருணாநிதியே! எனவே இவ் இலக்குகளை அடைவது அவருக்கு பெரியளவுக்கு கஸ்டமாகவே இருக்காது.

இவற்றை விட சிறிய கட்சிகளான மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, எம்.ஜி.ஆர் அ.தி.மு.க., புதிய தமிழகம் போன்றவற்றைச் சேர்ப்பதில் இரு அணிகளும் பாரிய முயற்சிகளை மேற்கொள்ளும். இவற்றில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கொள்கை ரீதியாக BJP கட்சியுள்ள அ.தி.மு.க. அணியுடன் கூட்டுக்சேருவதற்கே வாய்ப்புண்டு இத்தேர்தலில் கூட அது தனது தேசியத் தலைமையின வற்புறுத்தலுக்கு ஏற்ப தான் போட்டியிடாத இடங்களில் தி.மு.க. அணியினையே ஆதரித்திருந்தது.

மற்றைய இரு கட்சிகளுக்கும் கொள்கைப் பிரச்சினைகள் பெரிதாக இல்லை. தமக்கு எவ் அணி கூடுதலான ஆசனங்களை ஒதுக்குகின்றதோ அவ் அணியில் சேருவதற்கான வாய்ப்புகளே அதிகமுண்டு. இத்தேர்தலில் இக்கட்சிகள் முறையே 1.09 வீதம், 1.73 வீத வாக்குகளைப் பெற்றுள்ளன.

இம் மூன்று கட்சிகளும் காங்கிரசும் தி.மு.க. அணியில் இணைந்திருந்தால் இத்தேர்தலில் தி.மு.க. அணியின் வெற்றியை அ.தி.மு.க. அணி அசைத்திருக்கவே முடியாது.

எனவே இவற்றை இணைப்பதை நோக்கியே தி.மு.க. அணி செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

காங்கிரஸ் தி.மு.க. அணியுடன் இணையுமானால் அது ஜெயலலிதாவிற்கு பல சங்கடங்களை உருவாக்கலாம் அதன் சாயல் அவர் மத்தியில் இப்போதே தெரியத் தொடங்கியுள்ளது. தேர்தலுக்கு முன்னர் BJP அமைச்சரவையில் அங்கம் வகிப்பதில் ஆட்சேபனையில்லை எனக் கூறிய அவர் காங்கிரஸிற்கு கருணாநிதி சைகை காட்டிய பின்னர் தற்போது சற்றுப் பின்வாங்கி வெளியில் நின்று ஆதரவளிப்போம் எனக் கூறி வருகின்றார். தில்லிக்கு வரும்படி அழைத்த போதும் செல்வதற்கு தயக்கம் காட்டி வருகின்றார். BJPயுடன் நெருக்கமாக இணைவதை விட சற்று வெளியில் இருப்பதன் மூலம் எதிர்காலத்தில் சூழ்நிலைக்கேற்ப காங்கரசுடனும் கூட்டுக்களை ஏற்படுத்திக்கொள்ளலாம் என அவர் கருதுகின்றார். காங்கிரசுடனும் கூட்டுச் சேர்வதன் மூலம் காலப் போக்கில் த.மா.க.வையும் இணைத்துக்கொள்ளலாம் என்பதே அவரது கணிப்பு. சோனியாவின் வருகைக்குப் பின்னர் காங்கிரஸ் த.மா.க. இணையும் போக்கு அதிகரித்து வருகின்றது.

அ.தி.மு.க. அணியுடன் காங்கிரஸ், த.மா.க. இணையுமானால் எதிர்காலத்தில் தி.மு.க. மாநிலத்தில் ஆட்சி அமைப்பதை நினைத்தே பார்க்க முடியாது. எம்.ஜி.ஆர் காலம் முழுவதும் எதிர்க்கட்சியாக இருந்தது போல எதிர்காலத்திலும் எதிர்க் கட்சியாக இருப்பதைத் தவிர தி.மு.க.விற்கு வேறு வழியே இல்லை.

## சாதிய கட்சிகள்

சாதிய கட்சிகள் புதிதாக தோன்றுவதற்கும் தமிழக அரசியலில் அவை எதிர்காலத்தில் பாரிய செல்வாக்குகளைச் செலுத்துவதற்கும் எதிர்காலத்தில் நிறையவே வாய்ப்புக்கள் உள்ளன. ஏற்கெனவே வன்னியர் சமூகத்தை பெரும்பான்மையாகக் கொண்ட பாட்டாளி மக்கள் கட்சி செல்வாக்கு பெற்ற கட்சியாக வந்துள்ளது. மாநிலத்தில் மட்டுமல்ல மத்திய அளவில் கூட அதன் செல்வாக்கு வளர்ந்துள்ளது. தேவேந்திர வேளாள சமூகத்தினை பெரும்பான்மையாகக் கொண்ட புதிய தமிழகமும் பல தொகுதிகளில் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் சக்தியாக வளர்ந்து வருகின்றது. இவ் வளர்ச்சிகள் ஏனைய சமூகப் பிரிவினர்களுக்கும் தனியான கட்சி அமைப்பதை நோக்கிய ஊக்குவிப்புகளை வழங்கலாம். பிரதான கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவதை விட தமக்கெனக் கட்சிகளை உருவரக்கி அதன் பலத்தில் நின்று பேரம் பேசும் போதே பிரதான கட்சிகளிடமிருந்து தமது அபிலாஷைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என தற்போது அவை கருதத் தொடங்கியுள்ளன.

| கட்சிகள் | மதுரை | புதுக்கோட்டை | திருநெல்வேலி | தென்காசி |
|---|---|---|---|---|
| மார்க்சிஸ்ட் க.க. | 1,10,862 | - | - | - |
| எம்.ஜி.ஆர்-அ.தி.மு.க. | - | 2,26,416 | - | - |
| புதிய தமிழகம் | - | - | 86,185 | 123,588 |
| வெற்றி பெற்றவர் | | | | |
| பெரும்பான்மை | 20,897 | 30,520 | 5,983 | 97,271 |

தமிழக தேர்தல் தொகுதிகளில் செங்கல்பட்டு, வந்தவாசி, திண்டிவனம், சிதம்பரம், கடலூர், தர்மபுரி, சேலம் ஆகிய தொகுதிகளில் வன்னியர் சமூகமும் ஆதி திராவிடர்களும் பெரும்பான்மையாக உள்ளனர். பொதுவாக 25 வீதமும் சில தொகுதிகளில் 30 வீதம் வரையும் உள்ளனர். இத் தேர்தலில் அ.தி.மு.க. அணியே வென்றுள்ளது.

ராசிபுரம், திருச்செங்கோடு, நீலகிரி, கோபிசெட்டிப் பாளையம், கோயம்புத்தூர் பழனி, கரூர் போன்ற தொகுதிகளில் கவுண்டர் சமூகம் 25 வீதம் வரை உள்ளன. கொங்கு வேளாளர் சமூகம் 10 வீதம் வரையும், அருந்ததியர் சமூகம் 2 வீதம் வரையும் உள்ளன. இவர்களின் ஆதரவு இருந்தமையினால் அனைத்துத் தொகுதிகளிலும் அ.தி.மு.க. அணியே வெற்றியடைந்தது. எதிர் காலத்தில் கவுண்டர் சமூகம் தனிக்கட்சி அமைக்கலாம்.

தென்காசி திருநெல்வேலி, சிவகாசி, பெரிய குளம், சிவகங்கை ஆகிய தொகுதிகளில் தேவேந்திர வேளாளர் சமூகம் 25 வீதம் வரை உள்ளது. இத் தொகுதிகளில் இச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய தமிழகக் கட்சி தனது செல்வாக்கைக் காட்டியுள்ளது. இக்கட்சியின் சார்பில் சிவகாசித் தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட எஸ்.சத்தியமூர்த்தி 1,06,726 வாக்குகளையும், பெரிய குளத்தில் போட்டியிட்ட சி.மூக்கையன் 20,219 வாக்குகளையும் தென் காசியில் போட்டியிட்ட இதன் தலைவர் கிருஸ்ணசாமி 1,23,588 வாக்குகளையும், திருநெல்வேலியில் போட்டியிட்ட செல்வசுரேஸ் 86,185 வாக்குகளையும் பெற்றனர்.

தேவர் சமூகத்தில் திண்டுக்கல் இராமநாதபுரம் சிவகாசி, பெரியகுளம், சிவகங்கை தொகுதிகளில் சுமார் 25 வீதம் வரை உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இத் தேர்தலில் அ.தி.மு.க.விற்கே வாக்களித்துள்ளனர். இவர்களுக்கென தேவர் பேரவை என ஒரு அமைப்பும் உள்ளது. எதிர்காலத்தில் இவர்களும் தனிக்கட்சி அமைக்க முற்படலாம்.

இவர்களை விட நாடார் சமூகத்தினர் திருநெல்வேலி, தென்காசி, திருச்செந்தூர், நாகர்கோயில் ஆகிய தொகுதிகளில் சுமார் 25 வீதம் வரை உள்ளனர். இங்கும் அவர்களை மையப் படுத்திய கட்சி தோற்றம் பெறலாம்.

## எதிர்கால அரசுகள்

எதிர்கால அரசாங்கள் அது மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரி, கூட்டரசாங்கங்களாகவே இருக்கப் போகின்ற அரசாங்கங்கள் BJPயை சுற்றி அமைக்கப்பட்ட கூட்டணியாலும் காங்கிரசைச் சுற்றி அமைக்கப்பட்ட கூட்டணியாலும் உருவாக்கப்படப் போகின்றது. தற்போது மத்திய அளவில் இயங்கும் மூன்றாவது அணி பிளவுபட்டு அவற்றில் உள்ள அமைப்புகள் BJPயுடனனும் காங்கிரசுடனும் சேருவதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளன. தமிழகமளவிலும் கூட்டணிகள் தி.மு.க.வைச் சுற்றியும், அ.தி.மு.க.வைச் சுற்றியுமே அமைக்கப்படப் போகின்றன. இதனால் தமிழக அரசும் எதிர்காலத்தில் கூட்டரசாகவே இருக்கப் போகின்றது. சிறிய கட்சிகள் வெளியில் இருந்து ஆதரவினைக் கொடுப்பதை விட ஆட்சியில் பங்கு பெறுவதையே இனிமேல் விரும்பி ஏற்கக் கூடிய நிலை இருக்கும் இதன் மூலமே, தாம் சார்ந்துள்ள சமூக சக்திகளின் அபிலாஷைகளை அவர்களால் பூர்த்தி செய்யக் கூடியதாயிருக்கும்.

இத்தகைய கூட்டரசாங்கமுறை தேசிய அரசியலிலும், தமிழக அரசியலிலும் ஒற்றைப்பரிமாணத் தன்மையை இல்லாமல் செய்து ஒரு பன்முகத்தன்மையை உருவாக்கும். இதனால் கட்சிகள் தனிப்பட்ட ரீதியில் என்ன கொள்கையைக் கொண்டிருந்தாலும் பொதுவான கொள்கைத் திட்டத்தின் கீழ் கூட்டணிகளை உருவாக்கும். உருவாக்கப்படும் அரசாங்கங்களும் தேசிய அளவிலம் மாநில அளவிலும் பல்வேறு சமூக சக்திகளின் கருத்துக்களையும் நலன்களையம் ,பிரதிபலிப்பதாக அமையும்.

இந்த வகையில் இந்திய அரசியலில் ஒரு முன்மாதிரியான ஜனநாயக முறை முன்னெடுக்கப்படப் போகின்றது. கூட்டணி அரசுகள் தமது பதவிக்காலம் முழுவதும் ஆட்சியில் இருக்க மாட்டாது என்ற மரபு நிலைச் சிந்தனைகள் மாற்றமடைந்து அவைகளினாலும் ஒரு நிலையான ஆட்சியை நிறுவ முடியும் என்பதும் நிருபிக்கப்படப் போகின்றது. இந் நிலை இலங்கையில் ஏற்கெனவே தொடங்கிவிட்டது. இங்கு ஆட்சியில் இருக்கும் பொது ஜன முன்னணி கூட்டணி அரசாங்கமாக இருந்த போதும் நான்கு வருடங்களாக அது ஆட்சியில் உள்ளது.

சி.அ.யோதிலிங்கம்

# 1978 அரசியலமைப்பு: 6வது திருத்தச் சட்டத்தின் அநீதி !

-செம்பாட்டான்

சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் யாப்புகளில் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பானது எழுச்சியடைந்து வந்த தமிழர் போராட்டத்தினை நசுக்குவதை இலக்காகக் கொண்டிருந்தது. இதற்கேற்றவகையில் யாப்பில் பேரினவாதத்தன்மைகளை மேலும் வலுப்படுத்துதல், கிழக்கினை சிங்களமயப்படுத்துதல் போராட்டத்தை நசுக்குதல் எனபனவற்றினை வியூகங்களாகக் கொண்டிருந்தது.

மேற்கூறியவற்றை செயற்படுத்தும் விதத்தில் பேரினக் குறியீடுகளை யாப்பில் சேர்த்தல், அதனைத் திருத்துவதைக் கடினமாக்கல் என்பதையும் ஜனாதிபதி அரசாங்கமுறை, மக்கள் தீர்ப்பு, மொழி சம்பந்தமான ஏற்பாடுகள், விகிதாசாரப் பிரதிநிதித்தும், 6வது திருத்தச் சட்டம் என்பவற்றையும் யாப்பில் சேர்த்ததன் மூலம் தனது இலக்குககளை அடைய முயற்சிகள் எடுக்கப்பட்டது.

சென்ற இதழில் பேரினக் குறியீடுகளை யாப்பில் சேர்த்தலும் அதனைத் திருத்துவதைக் கடினமாக்கலும் என்ற விடயம் பார்க்கப்பட்டது இந்த இதழில் ஏனையவற்றைப் பார்ப்போம்.

## ஜனாதிபதி அரசாங்க முறை

ஜனாதிபதி அரசாங்க முறையில் ஜனாதிபதித் தேர்தல் முறையும் ஜனாதிபதியிடம் இருக்கும் வரம்பற்ற அதிகாரங்களுமே பிரதான விடயங்களாக விளங்கின.

ஜனாதிபதித் தேர்தல் ஒரு சிறுபான்மை இனத்தவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட முடியாத வகையிலேயே கட்டமைக்கப்பட்டது. நாடு முழுவதிலும் உள்ள வாக்காளரினாலேயே ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டார். சிங்கள மக்களில் இருந்து செல்வாக்கான பலர் போட்டியிடும் போது வாக்குகள் பிரிந்தால் சிறுபான்மை இனத்தவர் ஒருவர் ஜனாதிபதியாக வந்துவிடுவார் என்பதற்காகவே தேர்ந்தெடுக்கப்படுபவர் 50 வீதத்திற்கு மேலான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என விதிக்கப்பட்டது. எவரும் 50 வீதமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளாவிடின் முதல் இரு நிலையில் உள்ளவர்களைத் தவிர ஏனையவர்கள் வாக்குக் கணிப்பீட்டிலிருந்து விலக்கப்பட்டனர். விலக்கப்பட்டவர்களுக்கு வாக்குகள் அளித்தோரின் 2ஆம், 3ஆம் விருப்பு வாக்குகள் முதல் இருவருக்கும் இருக்குமாயின் அவை அவர்களின் வாக்குகளுடன் சேர்த்து எண்ணப்பட்டன. இதன் பின்னர் யார் அதிகளவிலான வாக்குகளைப் பெறுகின்றாரோ அவர் ஜனாதிபதியாகத தெரிவு செய்யப்படுவார் எனக் கூறப்பட்டது.

பொதுவாகவே 75 வீதத்திற்கு மேல் சிங்கள மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் ஜனாதிபதியாக ஒரு சிறுபான்மை இனத்தவர் வருவது மிகக் கடினமானது. 50 வீதத்திற்கு மேற்பட்ட பெரும்பான்மை என்பது இதனை மேலும் கடினமாக்கியுள்ளது.

எனினும் கடும் போட்டி நிலவுமிடத்து சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் கூட சிறுபான்மை இனங்களின் வாக்குகளில் தங்கியிருக்கக் கூடிய ஒரு நிலை இத் தேர்தல் முறையில் உள்ளது. இதனைப் பயன்படுத்தி சிறுபான்மை இனத்தவர்கள் பேரம் பேசும் கைங்கரியத்தை மேற்கொள்ளலாம். பல்வேறு பாதகமான அம்சங்களிலும் இதனை ஒரு சிறு சாதக்மான அம்சமாகக் கொள்ளலாம். ஆனால் தற்போது பேரினவாதிகள் இதனையும் மாற்றி ஜனாதிபதி, பாராளுமன்றத்தினால் தெரியப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அடுத்த பிரதான விடயம் ஜனாதிபதியிடம் இருக்கும் வரம்பற்ற அதிகாரங்களாகும். இதனை பயன் படுத்தி அவர் தமிழர்களுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளைச் சுயமாகவே எடுக்கலாம். இதுவரை பதவி வகித்த ஜனாதிபதிகள் அவ்வாறு எடுத்தும் உள்ளனர். முன்புள்ள முறையாயின் பிரதமர் பாராளுமன்றத்தில் அதற்கான அங்கீகாரத்தைப் பெற வேண்டும். அங்கீகாரத்தைப் பெறுவது சுலபமாயினும் கூட அங்குள்ள சிறுபான்மை இனத்துப் பிரதிநிதிகள் அதனைப் பெரும் விவாதமாக்கி பிரச்சாரம் செய்யும் போது அது பல வெளி அழுத்தங்களைக் கொண்டுவரப்பார்க்கும்.

தற்போது அப்பிரச்சினைகள் எதுவுமே இல்லை. ஜனாதிபதி மிகச் சுலபமாகவே தன்னுடைய கருமங்களை ஆற்றக்கூடியவராக உள்ளார்.

## மக்கள் தீர்ப்பு

மக்கள் தீர்ப்பு என்னும் விடயம் இவ் அரசியல் யாப்பிலேயே முதன் முதலாகச் சேர்க்கப்பட்டது. இதன் படி ஜனாதிபதி அமைச்சரவை சான்றுரை அளித்துள்ள ஒரு விடயத்தை அல்லது பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட ஒரு விடயம் நாட்டு நலனுக்கு அவசியமானது என தான் கருதும் யாதாயினும் விடயத்தை மக்கள் தீர்ப்பிற்கு விடலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனைக் கொண்டு மக்கள் தீர்ப்பு என்ற பெயரில் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறானதொரு நிகழ்வு இதுவரை நடைபெறவில்லை என்றாலும் எதிர்காலத்தில் நடைபெறமுடியாது என உறுதியாகக் கூறமுடியாது. அரசு தனக்குத் தேவையான விடயங்களை பராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றக் கூடிய பெரும்பான்மை இருந்தாலும் வெளி அழுத்தங்களிலிருந்து நீங்கி பேரினமயமாக்கலுக்கான சட்டங்களை உருவாக்குவதற்கு இது பெரிதும் உதவியாக இருக்கும்.

எல்லாவற்றிலும் மேலாக இதிலுள்ள அபாயகரமான தன்மை ஒரு பல்லினத் தன்மைக்குத் தடையாக யாப்பில் உள்ள ஒற்றையாட்சி அரசு, இறைமை, தேசிய்க் கொடி, தேசிய கீதம், பௌத்த மதம் அரசமதம் என்கின்ற விடயங்களை மாற்றுவதற்கு மக்கள் தீர்ப்பு வேண்டும் என்பதாகும். பேரின சிந்தனையால் ஆதிக்கத்திற்குள்ளான மக்களிடமிருந்து இதற்கு சாதகமான தீர்ப்பு வரும் என கனவிலும் எதிர்பார்க்கமுடியாது.

உண்மையில் இவை எல்லாவற்றிலும் தொக்கி நிற்கின்ற பிரதான விடயம் என்னவென்றால் "அரசியல் யாப்பு வழிமுறைகளினூடாக ஒரு போதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது" என்பதுதான்.

ஒடுக்கும் வழிகள் இலகுவானதாகவும் தீர்க்கும் வழிகள் கஷ்டமானதாகவும் இருப்பதையே இங்கு காண முடிகிறது.

## மொழி சம்பந்தமான ஏற்பாடுகள்

மொழியைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் நாட்டின் அரசகரும மொழியாக சிங்கள மொழி இருக்கும் எனக் கூறப்பட்டது. பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட 16வது திருத்தத்தின் மூலம் சிங்களமும், தமிழும் இந்நாட்டின் அரசகரும மொழிகளாக இருக்கும் எனவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் எனவும் கூறப்பட்டது.

இதன் அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியிலும் ஏனைய இடங்களில் சிங்கள மொழியிலும் நிர்வாகத்தினை நடாத்தலாம் எனக் கூறப்பட்டது. அதே வேளை ஏதேனும் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் ஒரு மொழியைப் பேசுவோர் கூடுதலாக வசிப்பின் அவர்களின் மொழியையும் இரு மொழி பேசுவோரும் கூடுதலாக வசிப்பின் இரு மொழிகளையும் நிர்வாக மொழியாகப் பயன்படுத்துமாறு ஜனாதிபதி பணிக்கலாம் எனவும் கூறப்பட்டது.

இவ் ஏற்பாடு கிழக்கிலும் வவுனியாவிலும் சிங்களக் குடியேற்றங்களை கவனத்தில் கொண்டே உருவாக்கப்பட்டது. சிங்களக் குடியேற்றங்கள் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஏற்கெனவே சிங்களத்தில் கருமங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தன. இவ் ஏற்பாடுகள் செய்த பணி அவற்றிற்கு அரசியல் யாப்பு அந்தஸ்துக்களை பெற்றுக் கொடுத்து எதிர் கேள்விகளை இல்லாமல் செய்தது தான்.

மேலும் இவ் இரு மொழிகளில் ஏதாவது ஒன்றில் நிர்வாகம் நடைபெற்றாலும் தமிழில் அல்லது சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் செய்திகளை தொடர்புகளைப் பெறுவதற்கும், அலுவலர்களுடன் தொடர்பு கொள்வதற்கும்; தனது அலுவல்களை கொண்டு நடாத்துவதற்கும் சகல பிரஜைகளுக்கும் உரிமை உண்டு எனக் கூறப்பட்டது.

ஆனால் நடைமுறையில் இத்தேவை தமிழ் மொழி பேசுவோருக்கே அதிகமானதாக இருந்த போதும் போதியளவு செயற்படுத்தப்படவில்லை. இதனைப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

## விகிதாசாரப் பிரதிநிதித்துவம்

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் இவ்வரசியல் யாப்பிலேயே முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரில் 196 பேர் தேர்தல் மாவட்டங்களில் நடைபெறும் விகிதாசாரத் தேர்தல் முறையின்படி தெரிவு செய்யப்படுவார்கள். என்றும் மீதி 29 பேர் நாடு தழுவிய ரீதியில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கு இணங்க தேசியப்பட்டியலில் இருந்து நியமிக்கப்படுவார்கள் எனவும் கூறப்பட்டிருந்தது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை இரண்டு வழிகளில் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு தீங்கிழைத்தது. ஒன்று பாராளுமன்றத்தில் தனியொரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வளரவிடாது தடுத்தல் ஆகும். இதன் மூலம் மக்கள் தீர்ப்பு கோரப்படாத யாப்பு திருத்தங்களைக் கூட தமிழ் மக்களின் நலன்களிலிருந்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. வெளி நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டாலும் அதனை இலகுவாகத் தட்டிக் கழிக்கும் சூழலையும் அரசுக்கு இது பெற்றுக்கொடுத்தது.

இரண்டாவது, கிழக்கின் சிங்களமயமாக்கலுக்கு இது உதவி புரிந்ததோடு தமிழர்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையை குறைத்தமையும்.

இத்தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் 1977 தேர்தலில் சிங்களவர்களுக்கு கிழக்கில் இரண்டு பிரதிநிதித்துவமே கிடைத்தது. சேருவல தொகுதி அம்பாறைத் தொகுதி என்பவற்றில் இருந்தே அவ்விரண்டு பிரதிநிதித்துவமும்

சென்ற இதழ் தொடர்ச்சி.

கிடைத்தன. அதுவும் 1970 தேர்தலில் அம்பாறை தொகுதியில் இருந்து மாத்திரம் ஒரு பிரதிநிதித்துவம் கிடைத்தது 1960க்கு முன்னர் ஒரு பிரதிநிதித்துவமே இல்லை. ஆனால் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் 1989 தேர்தலில் 4 பிரதிநிதித்துவமும் 1994 தேர்தலில் 6 பிரதிநிதித்துவமும் கிடைத்துள்ளது. அதுவும் வன்னி மாவட்டத்தில் கிடைத்த ஒரு பிரதிநிதித்துவத்தையும் சேர்த்தால் வடக்கு-கிழக்கில் 7 பிரதிநித்துவம் அவர்களுக்குக் கிடைத்துள்ளது. இதனை அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

### கிழக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் குறைந்தவிதம்

| ஆண்டு | 1947 | 1952 | 1956 | 1960 | 1965 | 1970 | 1977 | 1989 | 1994 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த பிரதிநிதித்துவம் | 07 | 07 | 07 | 10 | 10 | 10 | 12 | 15 | 15 |
| சிங்களப் பிரதிநிதித்துவம் | - | - | - | 01 | 01 | 01 | 02 | 04 | 06 |
| தமிழ்ப் பிரதிநிதித்துவம் | 03 | 04 | 3 | 05 | 04 | 05 | 05 | 06 | 04 |

ஆனால் மறு பக்கத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் கிழக்கின் மொத்த பிரதிநிதித்துவ எண்ணிக்கை அதிகரித்தபோது கூட, குறைந்து வருகின்ற நிலையையே அவதானிக்க முடிகின்றது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் 1977 தேர்லில் தமிழர்களுக்கு 5 பிரதிநிதித்துவம் கிடைத்தது. ஆனால் 1994 தேர்தலில் 4 பிரதிநிதித்துவமே கிடைத்தது.. அதுவும் புதிய தேர்தல் அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் கிழக்கின் மொத்த பிரதிநிதித்துவம் 12 ஆக இருந்த போது தமிழர்களுக்கு 5 பிரதிநிதித்துவம் கிடைத்தது. தற்போது மொத்த எண்ணிக்கை 15 ஆக அதிகரிக்கப்பட்ட நிலையில் 4 பிரதிநிதித்துவமே கிடைத்துள்ளது.

இப்பிரதிநிதித்துவ வீழ்ச்சி வடக்கு-கிழக்கு தமிழர்களின் மொத்த பிரதிநிதித்துவத்திலும் பாரிய வீழ்ச்சியினை உருவாக்கியுள்ளது. வீதாசாரப்படி பார்த்தால் கூட தற்போது தமிழர்களுக்கு 28 பிரதிநிதித்துவம்கிடைத்திருத்தல் வேண்டும். ஆனால் அரசின் தேசியப் பட்டியல் உறுப்பினரான லக்ஸ்மன் கதிர்காமரைச் சேர்த்தாலும் கூட 19 பிரதிநிதித்துவமே தற்போது கிடைத்துள்ளது.

கிழக்கில் மேற்கண்டவாறு, சிங்களப்பிரதிநிதித்துவம் வளர்ச்சியடைவதற்கும், தமிழ்ப் பிரதிநிதித்துவம் வீழ்ச்சியடைவதற்கும் சிங்களக் குடியேற்றங்கள் பிரதான காரணங்களாக இருந்தன. எனினும் அதற்கு மேலாக மாவட்ட எல்லைகளை வெட்டி ஒட்டும் நடவடிக்கைகளும் இதில் பிரதான பாத்திரத்தை வகித்திருந்தது. இதன்மூலம் செயற்கையாகவே சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இது பற்றி அரசியல் யாப்பின் பிரயோகத்தின் கீழ் விரிவாகப் பார்ப்போம்.

கிழக்கில் சிங்களப் பிரதிநிதித்துவத்தின் வளர்ச்சி சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு அரசியல் அந்தஸ்தினைப் பெற்றுக்கொடுத்தது. இதனூடு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்ற நிலை மாற்றப்பட்டு ஓர் பல்லினப் பிரதேசம் என்ற எண்ணக்கருவும் திட்டமிட்டுக் கட்டி வளர்க்கப்பட்டது.

## 6வது திருத்தச் சட்டம்

தமிழர்களது விடுதலைப் போராட்டம் உச்ச நிலையில் வளர்ந்து வந்த ஒரு காலப் பகுதியிலேயே 1983ஆம் ஆண்டு ஆவணி மாதம் 8ஆம் திகதி அரசியலமைப்புக்கு 6வது திருத்தச் சட்டப் பயமுறுத்தல் மூலம் தமிழ் மக்களை தனிநாட்டுப் போராட்டத்திலிருந்து விலக்கி வைப்பதாகும். இதன்படி தனி நாட்டுக்கான போராட்டத்தில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படுவதுடன் அவர்களது சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும் எனக் கூறப்பட்டது.

அரசியல் யாப்பின் 157.அ பிரிவு இது பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

(1) இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாக தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு ஆளெவரும் இலங்கைக்கு அல்லது இலங்கைக்குள் வெளியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல், ஆக்கமளித்தல், ஊக்குவித்தல், நிதியுதவுதல், ஊக்கமளித்தல் அல்லது பரிந்துரைத்தல் ஆகாது.

(2) அரசியற் கட்சி அல்லது வேறு கழகம் அல்லது ஒழுங்கமைப்பு எதுவும் இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்றினைத் தாபித்தல் தனது இலக்குகளில் அல்லது குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டிருத்தலாகாது.

(3) மேற்கூறிய ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஆளெவரும் மேற்முறையீட்டு நீதிமன்ற விசாரணையின் மூலம் குற்றவாளியாக காணப்படுமிடத்து

(அ) 7 ஆண்டுகட்கு மேற்படாத காலப்பகுதிக்கு குடியியற் தகுதியீனத்திற்கு உட்பட்டவராதல் வேண்டும்.

(ஆ) சீவனத்திற்கு அவசியமான ஆதனங்கள் தவிர்ந்த அவரது அசையும், அசையா ஆதனங்களை இழத்தல் வேண்டும்.

(இ) 7 ஆண்டுகட்கு மேற்படாத காலப்பகுதிக்கு குடியியல் உரிமைகளுக்கு உரித்துடையவராக முடியாது. இங்கு குடியியல் உரிமைகள் என்பது

1) வெளிநாட்டு கடவுச்சீட்டொன்றை பெறுவதற்கான உரிமை.
2) பகிரங்கப்பரீட்சை எதற்கும் தேர்வதற்கான உரிமை.
3) அசைவற்ற ஆதனம் எதனையும் சொந்தத்தில் வைத்திருப்பதற்கான உரிமை.

—▷19

# பெண்கள் சாசனத்தை அமுல்

# என்ன தடை?

-சுனிலா அபேசேகர

உரையாடல்•என்.சரவணன்

## மார்ச்-8 சர்வதேசப் பெண்கள் தினம்





**சுனிலா அபேசேகர** சோசலிஸ பெண்ணிலை வாதியாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் இவர் ஒரு மனித உரிமையாளரும் கூட. முன்னர் ஜே.வி.பி. இயக்கத்தில் தீவிர செயற்பாட்டாளராக இருந்தவர். தற்போது பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு (Women & Media Collective), இன்போர்ம் (INFORM) என்பவற்றின் இயக்குனர்களில் ஒருவராக இருந்து வருகிறார். நான்கு பிள்ளைகளின் தாயாரான சுனிலா தனியொருவராக பிள்ளைகளை வளர்த்து வருபவர். இலங்கையின் பெண்ணிலைவாதிகளில் மிகவும் தீவிர செயற்பாட்டாளராக இருந்துவரும் இவர் தனது வாழ்க்கையிலும் பெண்ணிலைவாதி யாகவும் மாதிரிப் பெண்ணாகவும் வாழ்ந்து வருபவர். இவரை தவிர்த்து விட்டு செய்யப்படும் இலங்கையின் பெண்ணிய சூழலைப் பற்றிய எந்த ஆய்வும் பூரணமாகாது. சர்வதேசப் பெண்கள் தினத்தை முன்னிட்டு அவரிடமிருந்து பெறப்பட்ட நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.

**இம்முறை பெண்கள் தினத்துக்கு நீங்கள் சார்ந்த அமைப்புகள் என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கின்றன?**

இம்முறை நாடளாவிய ரீதியில் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. கூட்டங்கள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், பட்டறைகள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், நாடகங்கள், திரைப்படக் காட்சிகள், இன்னும் பல கலை இலக்கிய நிகழ்ச்சிகள் என நிறையவே நடத்தப்படப்போகின்றன.

இம்முறை உள்ள முக்கிய மாற்றம் என்னவென்றால், கடந்த பத்து வருட காலமாக பெண்கள் தின நிகழ்ச்சிகள் யாவும் கொழும்பை மையமாக வைத்தே நடத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால் கடந்த இரு வருடங்களாக, நாடளாவிய ரீதியில் பல நிகழ்ச்சிகள் பல்வேறு பெண்கள் அமைப்புகளால் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக அரசு சார்பற்ற பெண்கள் அமைப்புகளில் பெரும்பாலானவை இம்முறை கொழும்புக்கு வெளியிலேயே தமது செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

ஒரு புறத்தில் இது ஆரோக்கியமாக இருந்த போதும் மறுபுறத்தில் அதிகாரத் தரப்புக்கு அழுத்தம் பிரயோகிக்கக் கூடிய நிலையை இழக்கவும் நேரிடுகிறது. கொழும்பை மட்டுமே தொடர்பூடகங்கள் அனைத்தும் கவனம் செலுத்துகின்ற நிலையில் கிராம மட்டத்தில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளை வெளிக்கொணர முடிவதில்லை. தேசிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இத்தினத்தில் நடத்தப்படும் செயற்பாடுகள் அமைய வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்.

**இம்முறை பெண்கள் தினத்துக்கான கோஷமாக பெரும்பாலும் என்னென்ன முன்வைக்கப்பட்டுள்ளன?**

பெரும்பாலும் 'சமாதானமும், ஜனநாயகமும்' பற்றியே கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

**மூன்று வருடங்களுக்கு முன் பெண்கள் தினத்துக்கு சகல பெண்கள் அமைப்புகளும் சமாதானத்துக்கான பெண்கள் அமைப்புடன் (Women for Peace) சேர்ந்து யுத்தத்துக்கு எதிராக 'கறுப்பாடைப் பெண்கள்' ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தன. யுத்தத்தின் கொடுரத்தால் பெண்கள் மேலும் அதிகளவு பாதிப்புக்குள்ளாகியிருக்கும் நிலையில் ஏன் அந்த ஆர்ப்பாட்டத்தைகைவிட்டீர்கள்?**

இஸ்ரேல், பொஸ்னியா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளில் யுத்தத்துக்கு எதிராக பெண்கள் அணி திரண்டு நடத்தி வந்த Women in Black எனும் ஆர்ப்பாட்டத்தை அனுபவமாகக் கொண்டு இலங்கையிலும் அத்தகைய ஆர்ப்பாட்டத்தை பெண்கள் அமைப்புகள் செய்தன. ஆனாலும் யுத்தத்துக்கு எதிரான கோஷம் தற்போது தான் முன் வைக்கப்பட்டது என்றில்லை. 83 க்குப் பின்னர் பல பெண்கள் அமைப்புகளின் முக்கிய கோஷங்களில் ஒன்றாக "யுத்த எதிர்ப்பு" என்பது இடம்பெற்று வருகின்றது. இம்முறை கூட பெண்கள் அமைப்புகள் பலவற்றின் செயற்பாடுகள் யுத்த எதிர்ப்பையே மையமாகக் கொண்டு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் இதில் உள்ள விடயம் என்னவென்றால் யுத்த எதிர்ப்பு உணர்வோ, அல்லது சமாதான அபிலாஷையோ எவ்வளவு தான் இருந்தபோதும், எவருக்கும் நடைமுறையில் எப்படி இந்த சமாதானத்தைப் பெற்றுக் கொள்வது என்பது குறித்து சரியான தெளிவில்லை. மேலும் 80களில் இருந்து பெண்கள் அரசியல் தீர்வை கோரி நிற்கின்றனர். ஆனால் இன்று அரசியல் தீர்வு யோசனையாக அரசாங்கத்தின் தீர்வு யோசனையையே கொள்கின்றனர். வேறு எந்த வித அரசியல் யோசனைகள் குறித்தும் எந்த வித பேச்சுமேயில்லையே. இன்று அரசியல் தீர்வு யோசனையை வேண்டி நிற்கின்றோம் ஆனால் அது அரசாங்கத்தின் யோசனையாகத் தான் இருக்க வேண்டுமென்றில்லை.

**'சீடோ' அறிக்கை குறித்த அறிமுகத்தையும், அதன் இன்றைய நிலையையும் வாசகர்களுக்கு விளக்குவீர்களா?**

சீடோ (CEDAW) என்பது ஐ.நா.வின் பெண்களின் உரிமைகள் தொடர்பாக ஆக்கப்பட்டுள்ள ஒரு சர்வதேச பிரகடனம். அது ஒரு சாசனம். இச்சாசனத்தை இலங்கையும் அங்கீகரித்து கைச்சாத்திட்டுள்ளது. கையெழுத்திட்ட நாடுகளில் இச்சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் குறித்த வளர்ச்சி என்ன? பெண்களால் அதனை அனுபவிக்க முடிந்ததா? முடியாவிட்டால் அதற்கென்ன காரணம்? அதற்காக அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் எவை? போன்றவை குறித்து நான்காண்டுகளுக்கு ஒரு முறை ஒரு அறிக்கையை அளிக்க வேண்டிய பொறுப்பு ஒப்பந்த நாடுகளுக்கு உண்டு.

**இலங்கை அரசாங்கம் அப்படி இது வரை அளித்து வருகிறதா?**

இறுதியாக 1992ஆம் ஆண்டு இலங்கை அரசு அறிக்கையை கையளித்திருந்தது. அது கூட அப்போது மிகவும் பிந்தியிருந்தது. அடுத்த அறிக்கையை 1995இல் கையளித்திருக்க வேண்டும். ஆனால் 1995ஆம் ஆண்டு பீஜிங்கில் நடத்தப்பட்ட நான்காவது சர்வதேசப் பெண்கள் மாநாட்டுக்காக அரசாங்கம் தயாரித்திருந்த அறிக்கையின் பிரதியையே சீடோவுக்கான அறிக்கையாகவும் கையளித்திருந்தது. இவ்வாறு அறிக்கை கையளித்த பின் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அவ்வறிக்கை குறித்து சீடோ கமிட்டி முன் விளக்கமளிக்க வேண்டும். ஆனால் இது வரை அரசாங்கம் இவ்வறிக்கை குறித்து விள்க்கமளிப்பதற்காக சீடோ கமிட்டி முன் செல்லவில்லை. சில வேளை இந்த வருட மத்தியில் அரசாங்கம் சீடோவின் முன் செல்லுமென எதிர்பார்க்கிறோம்.

1992ஆம் ஆண்டு அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஒரு "மாற்று அறிக்கை"யை கையளித்திருந்தன. இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கப் பிரதிநிதிகள் சீடோ கமிட்டியை சந்தித்த வேளையில் பல கேள்விகளை எழுப்பியிருந்தனர். எனவே தான் அரசாங்கம் பல விடயங்கள் குறித்து சீடோவின் முன் உறுதிமொழிகளை அளிக்க நேரிட்டது. குறிப்பாக நாங்கள் குறிப்பிட்டிருந்த விடயங்களில் திருமணத்துக்கான குறைந்தபட்ச வயது 12 என்பதை எதிர்த்திருந்தோம். அதன் பின்னர் 16 வயதாக சட்டத்தை மாற்றியது அரசாங்கம். இம்முறை அரசு சார்பற்ற அமைப்புகள் இம்முறை மாற்று அறிக்கையொன்றுக்கான தயாரிப்புகளில் தீவர கவனமெடுத்து வருகின்றன.

**இம்முறை தயாரிக்கப்பட்டு வரும் அறிக்கையில் முக்கியமாக என்னென்ன விடயங்களை முன்மொழிந்திருக்கிறீர்கள்?**

உதாரணத்திற்கு சுகாதார விடயத்தை எடுத்துக் கொண்டால் சுகாதாரத்துறைக்கு அரசின் நிதியொதுக்கீடு வரவர குறைந்து போதல் மற்றும் உலக வங்கியின் ஆலோசனையின் காரணமாக சுகாதாரத்துறையை தனியார் மயப்படுத்தி வருவதன் விளைவாகவும் பெண்களின் நலன்களுக்கான மருத்துவ நிலையங்கள் உள்ளிட்ட பல மருத்துவ மையங்களிலிருந்து பெண்கள் பெற்றுவந்த வசதிகள் அனைத்தும் குறைக்கப்பட்டு பறிக்கப்பட்டு, வருகின்றன. மருத்துவ வசதிகள் குறைக்கப்படும் போது குறிப்பாக பெண்களே பாதிப்புக்குள்ளாக்கப்படுவது பற்றி சொல்லித் தெரியத் தேவையில்லையே: குழந்தைகளின் சுகாதார நிலைமைகளும் கீழே விழுமல்லவா? இலங்கையில் குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக வேகமாகவே அதிகரித்து வருகிறது. குழ்ந்தைகள் குறைந்த எடையில் பிறப்பதற்கான காரணம் தாயின் மந்தபோசனமும், இரத்தக் குறைவுமே. குழந்தை தாயின் வயிற்றிலிருக்கையில் தாய் மந்தபோசனத்தால் பதிக்கப்படுவது என்பது குழந்தையின் மூளை வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கும் ஒன்றாகும். எடைகுறைவாகப் பிறக்கும் குழந்தைகள் பல சந்தர்ப்பங்களில் இறக்கவும் செய்கின்றன. இலங்கையில் இப்படி சிசுமரண வீதம் அதிகரித்துக் கொண்டு செல்வதற்கு இது ஒரு முக்கிய காரணம். அறிக்கையில் இவ்வ குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அது தவிர இலங்கையில் சட்ட விரோதமான கருக்கலைப்புக்களின் எண்ணிக்கை அதிகளவு அதிகரித்து வருகிறது. கருக்கலைப்பு காரணமாக மரணிக்கும், உடல் அங்கவீனங்களுக்கு உள்ளாகி வரும் பெண்களின் எண்ணிக்கை எமது நாட்டில் அதிகம். அடுத்தது, மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்லும் பெண்கள் சரியான முறையில் ஒப்பந்த அடிப்படையில் செல்ல முடியாததன் விளைவாக அனுபவித்து வரும் கொடுமைகள் தொடர்பானது. இதில் அரசாங்கத்தின் தலையீடும், கண்காணிப்பும், பராமரிப்பும் நிச்சயம் இருக்க வேண்டும். குறிப்பாக அவர்களின் பிள்ளைகள் வளர்க்கப்படுவதற்கு ஒரு மாற்று ஏற்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும். இந்நாட்டுக்கு அதிகளவு செலாவணியைப் பெற்றுத் தரும் இப் பெண்கள் குறித்து கூடிய அக்கறை காட்ட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. மேலும் இன்றும் விவசாயத்துறையில் ஆண்களுக்கு சமமான சம்பளத்தை பெண்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. விவசாயத்துறை பெருமளவு தனி நபர்களிடம் தங்கியிருப்பதால் சமசம்பளம் என்பது சாத்தியப்படாமல் உள்ளது. எனவே அரசாங்கத்தின் கவனமும் ஈடுபாடும் இது குறித்து இருக்க வேண்டும். இது போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

**சீடோவுக்கான அரசாங்கத்தின் அறிக்கையில் காணப்படும் விடயங்கள் என்ன?**

அரசாங்கம் பெண்களின் உண்மை நிலையைக் குறிப்பதை விட, தனது சாதனைகளைக் கூறும் வகையிலேயே அறிக்கை தயாரித்திருக்கும். இலங்கை மட்டுமல்ல உலகின் பல நாடுகள் இப்படித்தான். எனவே தான் எமது அறிக்கை இந்த இடத்தில் முக்கிய பெறுமதியைத் தருகிறது.

**பெண்கள் சாசனம் இன்னமும் சட்ட அங்கீகாரம் பெறப்படாதிருப்பதற்கு என்ன காரணம்?**

உண்மை தான் பெண்கள் சாசனம் ஒரு அரச கொள்கையாக மாத்திரமே உள்ளது. இது 1993இல் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இது மிகவும் நல்லதொரு ஆரம்பம். இது சீடோ பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல சேர்ந்து தயாரித்தது. சாசனத்தைப் பேணுவதற்காக பெண்கள் தேசியக் கமிட்டி எனும் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால் இந்த குழுவுக்கு சாசனத்தை நடைமுறைப்படுத்தவோ அல்லது அந்த சாசனம் மீறப்பட்டது தொடர்பாக எந்த நடவடிக்கை எடுக்கவோ அதற்கு அதிகாரமில்லை. அப்படியொரு அதிகாரமிக்க பெண்கள் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுமென்று சாசனத்தில் கூறப்பட்டாலும். இன்று வரை அப்படியொன்று நியமிக்கப்படவில்லை. சாசனம் என்பது வெற்றுக் கடதாசியாகவும், தேசிய பெண்கள் கமிட்டி என்பது வெறும் பரிந்துரைகளை மட்டும் செய்யும் ஒன்றாகவுமே இருந்து வருகிறது.

**ஆணைக்குழுவை அரசாங்கம் நியமிப்பதில் இருக்கும் தடைகள் எவை?**

எந்தத் தடையும் இருப்பதாகத் தெரியவில்லை. அதில் அக்கறை இருப்பதாகவும் தெரியவில்லை. பெண்கள் அமைப்புகள் கூட இதனை நியமிக்கும்படி கோருகின்ற எதுவித நிர்ப்பந்தங்களையும் அரசுக்கு ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை. சாசனத்தை அமுல்படுத்த ஆணைக்குழு அவசியமென்பது பல பேருக்குப் புரியவில்லை . இது வரைக்கும் பெண்கள் அமைச்சு என தனியான ஒன்று இருக்கவில்லை. ஏதாவது ஒரு அமைச்சுடன் இணைந்தே இருந்து வந்திருக்கிறது. ஆகவே பெண்கள் விடயத்தில் தனியான அக்கறை காட்டுகின்ற அரச யந்திரம் இருக்கவில்லை. ஆனால் இறுதியாக நடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது பெண்கள் அமைச்சு தனியான ஒன்றாக ஆக்கப்பட்டது. இவையெல்லாம் நல்ல விடயங்கள்.

**தற்போதுள்ள பெண்கள் சாசனம் மிகவும் முன்னேறிய ஒன்றாக கூறப்பட்டு வருகின்ற அதே வேளை அதில் இன்னும் பலகுறைகள் இருப்பதாகத் தோன்றுகிறது. குறிப்பாக பெண்களின் பாலியல் தெரிவு (ஒரு பால் உறவு), குடும்ப வன்முறைகள் குறித்த சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியாதது,குடும்ப அமைப்பு முறையைப் பேணுவதற்குரிய அம்சங்கள் என்பன சிக்கலானவையாக இருக்கின்றனவே?**

பல வித குடும்ப மாதிரிகள் இன்று முன்வைக்கப்படுகின்றன. இந்தச் சாசனத்தில்.எந்த வித குடும்ப மாதிரிக்கும் பொருந்தக் கூடிய விதத்தில் இச்சாசனம் அமைக்கப்பட்டுள்ளதாகவே எனக்குப் படுகிறது. மற்றும்படி குடும்ப வன்முறைகள் குறித்த் விடயங்களில் சாசனத்தில் கூறப்பட்ட விடயங்கள் சிக்கல்களைத் தருவனவாகவே இருக்கின்றன.

**இன்றைய அரசாங்கம் கடந்த அரசாங்கத்தை விட முற்போக்கானது, சகல விடயங்களிலும் ஒரு மாற்று அரசாங்கமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு அரசாங்கம். பெண்களின் நலன்களில் கூட அது சிறப்பாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த குறைந்த ஆண்டுகளுக்குள் இந்த அரசாங்கம் பெண்கள் நலன்களை அதிகளவு மீறியிருப்பதாகக் கொள்ளலாமா?**

எந்தவொரு அரசாங்கமும் பெண்கள் தொடர்பான வாக்குறுதிகளை அளிப்பது ஒன்றும் கடினமானதல்ல. காரணம் அதற்கெதிர்ப்பு தெரிவிக்கும் நிலை இல்லை. கடந்த காலங்களில் ஐ.தே.க. அரசாங்கம் தனது ஜனநாயக விரோத போக்குகளால் பறி போன புள்ளிகளை இந்தப் பெண்கள் சாசனம் போன்றவற்றை முன்வைத்ததனூடாக சர்வதேச அளவில் பெற்றுக்கொண்டது. இது அரசியல் ரீதியில் அவர்களுக்கு சாதகமாகப் போனது. அரசாங்கத்தின் கவனம் முழுவதும் நாட்டின் பொருளாதார, அரசியல் பிரச்சினைகளில் மையப்படுத்தப்பட்டு வருவதால் பெண்கள் பிரச்சினையென்பது அவர்களின் அக்கறைக்குரியதாக இல்லை. அதே வேளை பெண்கள் பிரச்சினை குறித்து இந்த அரசாங்கம் எடுத்து வரும் சில நடவடிக்கைகள் நல்லவையாகவும் radicalஆகவும் இருந்த போதும், அவை விவாதத்துக்குரிய ஒன்றாக மாறும் என நம்புகிறது. குறிப்பாக கருக்கலைப்பு உரிமை, விவாகரத்து கோருகையில் காணப்படுகின்ற சிக்கல்கள், குடும்பத்துக்குள் காணப்படும் பாலியல் பலாத்காரங்கள் என்பன இன்றும் சிக்கலுக்குரியவையாகவே உள்ளன. 1995 செப்டம்பரில் தண்டனைக் கோவை சட்ட திருத்த விவாதத்தில் கருக்கலைப்பு பற்றிய விடயம் குறித்து எவ்வளவு எதிர்ப்புகள் காணப்பட்டன என்பது தெரியும் தானே




### அப்படி அக்கறையுள்ள அரசாங்கத்தால் ஏன் பெண்கள் ஆணைக்குழுவை நியமிக்க முடியாமல் போனது?

ஆணைக்குழுவை நியமிப்பதில் வேண்டுமென்றே தள்ளி வருகிறது எனக் கூற மாட்டேன். ஆனால் அசட்டையாகவே இருந்து வருகிறது என கூறலாம். அரசாங்கம் யுத்தத்தில் காட்டி வரும் ஆர்வத்தின் முன்னால் இது போன்ற விடயங்கள் இரண்டாம் பட்சமாக்கப்பட்டு வருகின்றன. முன்னைய அரசாங்கத்தின் மீது பெண்கள் அமைப்புகளுக்கு இருந்த எதிர்ப்புணர்வு காரணமாக பல கோரிக்கைகளுக்காக பெண்கள் வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். எப்படியோ அவ்வரசாங்கத்தோடு ஒருவித தொடர்பு இருந்துகொண்டே வந்தது. ஆனால் இந்த

# அமுல் படுத்த



அரசாங்கத்தின் மீது இருந்த நம்பிக்கையின் காரணமாகவோ என்னவோ அரசுடனான ஒரு கருத்தாடலைக் கூட காண முடியாதுள்ளது. இது ஒரு சிக்கலுக்குரிய விடயம். கருக்கலைப்பு குறித்த பாராளுமன்ற விவாதம் தொடர்பாக கூட அதற்கு வெளியில் எந்தவித நிர்ப்பந்தமும் பெண்கள் அமைப்புகளால் செய்யப்படவில்லை. இது எம்மிடமே உள்ள பெரிய குறைபாடு. இதனை சுயவிமர்சனமாக நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

### பெண்கள் அமைப்புகளின் போராட்டங்கள் ஒரு கட்டத்துக்கு மேல் நகர்வதில்லை. இருக்கின்ற பெண்கள் அமைப்புகள் எல்லாமே அரசு சார்பற்ற நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. அதற்கு வெளியில் சுயாதீனமான பெண்கள் அமைப்புக்கள் எதுவுமே இல்லை. அப்படி தோன்றினால் கூட என்.ஜீ.ஓ.க்கள் அவற்றை உள்வாங்கி ஏப்பமிடுவதற்கூடாக அவற்றின் தீவிரத் தன்மையைக் கூர்மங்கச் செய்வது ஒரு காரணமாக இருக்க முடியாதா?

இது பெண்கள் அமைப்புகளுக்கு மட்டுமல்ல பொதுவாகவே இந்த போக்கு நிலவுகிறது. சிவில் சமூக செயற்பாடுகளில் காணப்பட்டு வரும் மாற்றங்களையும் நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். 90களைப் பார்த்தோமானால் சிவில் சமூக செயற்பாடானது மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. 30களிலிருந்து தீவிரப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும், இடதுசாரி செயற்பாடுகளுக்கும் கூட இந்த நிலைமை தோன்றியுள்ளன எனலாம். சித்தாந்த வீழ்ச்சியும் காணப்படுகிறதல்லவா? சமூக மாற்றத்துக்கான சித்தாந்த சூத்திரங்களை எம்மால் மாற்றத்துக்குள்ளாக்க நேரிட்டதல்லவா? இதன் காரணமாகவே தீவிரமடைதலுக்கும் பீதி நிலவுகிறது. சிவில் சமூகத்தில் செயற்பாட்டுச் சக்திகளாகவும் நிர்ப்பந்தச் சக்திகளாக பத்திரிகையாளர்களும், கருத்துச் சுதந்திரத்திற்காக போராடுபவர்களுமே காணப்படுகின்றனர் என்றே நான் கருதுகிறேன்.

### நீங்கள் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினராக இருந்துள்ளீர்கள். அதில் நீங்கள் கண்ட அனுபவங்கள் மற்றும் பெண்கள் பிரச்சினைகுறித்த அவதானங்களைப் பகிர முடியுமா?

ஜே.வி.பி.யினர் இன்றும் நான் ஒரு உறுப்பினராக ஒருபோதும் இருந்ததில்லை என்றே கூறி வருகின்றனர். நான் ஒரு தீவிர செயற்பாட்டாளராக இருந்து வந்திருக்கிறேன். சோஷலிச கலைச் சங்கத்தின் கீழ் 1977இல் தோற்றுவிக்கப்பட்ட விமுக்தி கீ (விடுதலை கீதம்) குழுவில் பாடல்கள் பாடி வந்தேன்.

### நீங்கள் ஜே.வி.பி.யின் சோஷலிச மகளிர் சங்கத்தில் இருக்கவில்லையா?

இல்லை, நான் அதில் அங்கம் வகிக்கவில்லை. ஆனால் அப்போது அதன் கூட்டங்களில் உரையாற்றியிருக்கிறேன். ஆரம்பத்தில் நான் ஜே.வி.பி. ஆங்கில மொழியில் வெளியிட்டு வந்த Red Power பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வந்தேன். தொகுத்துமிருக்கிறேன். அதற்குப் பொறுப்பாக சில காலம் இருந்திருக்கிறேன். ஆங்கில மொழியிலான விடயங்கள் பலவற்றை நானே செய்ய நேரிட்டது. கொழும்பு கிழக்கின் அமைப்பாளராக செயற்பட்டிருக்கிறேன். நான் விஜேவீர, கெலி சேனநாயக்க உள்ளிட்ட 5 பேர் கொண்ட குழு அப்போது கியுபாவில் நடந்த சர்வதேச மாநாட்டுக்கும் சென்று வந்தோம். அப்போது ஜே.வி.பி.க்கு அங்கு நல்ல வரவேற்பிருந்தது. அதனைத் தவிர அப்போது ஜே.வி.பி.யின் மனித உரிமைகள் பிரிவு தோற்றுவிக்கப்பட்ட போது அதன் தலைமைப் பொறுப்பையும் நானே வகித்து வந்தேன்.

### ஜே.வி.பி.யுடன் இணைவதற்கு உந்துதலாக இருந்த சூழலை விளக்குவீர்களா?

நான் இன்றும் நம்புகிறேன். இலங்கையில் தீவிர இடதுசாரித்துவத்திற்கான தேவை தொடர்ந்துமிருக்கிறது. 1976இல் தான் நான் மார்க்சிய அரசியலில் அக்கறை காட்டினேன். நாட்டில் ஒரு சமூக மாற்றமொன்றை உருவாக்கும் ஆற்றல் ஜே.வி.பி.க்கு இருப்பதாக நம்பினேன். அன்று 71 கிளர்ச்சியில் பங்கு பற்றியவர்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது நானும் சென்று ஆர்வமாக அவதானித்து வந்தேன். இதற்கூடாகவே ஜே.வி.பி.யுடனான தொடர்பு ஏற்பட்டது. ஜே.வி.பி. தோழர்கள் என்னை அடையாளம் கண்டு தொடர்பு கொண்டனர். அவர்களின் வேலைகளில் நானும் பங்கேற்றேன். 78இல் தோழர் விஜேவீர விடுதலையான பின் 71 கிளர்ச்சியில் படுகொலை செய்யப்பட்ட பிரேமவதி மனம்பேரி நினைவாக ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சியின் போது தோழர் விஜேவீர என்னைச் சந்தித்து உரையாடினார் அதன் பின் ஜே.வி.பி.யுடன் இணைந்து செயற்படத் தொடங்கினேன்.

### ஜே.வி.பி.யில் இருந்து ஏன் விலகினீர்கள்?

ஒரு விதத்தில் என் தனிப்பட்ட பிரச்சினைகளும் எனது விலகலுக்குக் காரணமாகியிருந்தன. அதை விட தொடர்ந்தும் பல கருத்துப் பிரச்சினைகள் இருந்து வந்தன. குறிப்பாக் பெண்கள் விடயம் தொடர்பானது. சோஷலிச மகளிர் சங்கம் சுயாதீனமாக இயங்க முடியாதிருந்தது. ஆண் தோழர்களின் வழிநடத்தலிலேயே, அவர்கள் இடும் ஆணைகளே சோ.ம.ச.வை இயக்கின. இது தொடர்பாக கட்சிக்குள் தொடர்ச்சியாக விவாதங்கள் நடந்தன. சோ.ம.ச. வின் தலைவியாக செயற்பட்ட நந்தசீலி சகோதரியின் பிரசவ விடுமுறை கூட அன்று வழங்க மறுக்கப்பட்டது. இது தொடர்பான பிரச்சினைகள் கிளப்பப்பட்டபோது, என் மீது மத்திய தர வர்க்க முத்திரை குத்தப்பட்டது. நான் ஆங்கில மொழிமூல விடயங்கள் பெருமளவு செய்து வந்ததால் இது இம்முத்திரை குத்தலுக்கு சாதகமாகப் போனது. இந்த நிலைமையை சமாளித்து நீடித்திருக்க முடியாது போனது. படிப்படியாக அதிலிருந்து அந்நியப்பட வேண்டி வந்தது. இன்று கூட நான் கெலி சேனநாயக்கவுடன் தொடர்பு வைத்திருந்ததன் காரணமாகவே விலகினேன் என பிரச்சாரப்படுத்தி வருகிறது. கியூபாவுக்கு சென்றிருந்த வேளையில் அங்கு நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் சிலவற்றுக்கு போவதற்கு எம்மோடு வந்த சில தோழர்களை அழைத்திருந்தேன். ஆனால் எல்லோரும் மறுக்கவே என்னோடு கெலி மட்டுமே வரத் தயாராக இருந்தார். அங்கு போனதைத் தொடர்ந்து நாங்கள் இருவரும் கண்டிக்கப்பட்டோம். கெலியையும் என்னையும் சம்பந்தப்படுத்தி அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அது இறுதியில் எங்கள் இருவரையும் உண்மையிலேயே ஒன்று சேர நிர்ப்பந்தித்திருந்தது. அக் குற்றச்சாட்டையே இன்றும் கூறி வருகிறது. இன்று வரை என்னால் எழுப்பப்பட்ட கருத்து ரீதியான பிரச்சினைகளை மூடிமறைத்துக் கொண்டே வருகிறது. பெண்கள் பிரச்சினை போலவே ஜனநாயகம் பற்றிய பிரச்சினையும் கட்சிக்குள் எழுந்தது. குறிப்பாக 1979ஆக இருக்கும், கம்போடியாவில் பொல்பொட் அரசாங்கம் பற்றிய சிக்கல்கள் எழுந்தன. கம்போடியப் போராட்டத்தைஒரு புரட்சிகர எழுச்சியாக கருத முடியுமா என்ற விவாதம் நடைபெற்றது. ஜே.வி.பி.யின் நியமுவா பத்திரிகையில் பொல்பொட் அரசாங்கம் ஒரு புரட்சிகர அரசாங்கம் என்றே வாழ்த்தி வந்தது. ஆனால் பொல்பொட் அரசாங்கம் ஒரு கொலைகார அரசாங்கம் என்ற கருத்து என்னிடம் இருந்தது. சீ.ஐ.ஏ.வின் செய்தி ஸ்தாபனங்கள் பரப்பி வரும் பிரச்சாரங்களைக் கொண்டே நான் வாதிடுவதாகவும் பொல்பொட் அப்படியான கொலைகளைச் செய்யவில்லை என்றும் விஜேவீர தோழரும் எதிர்த்தார். நான் சீ.ஐ.ஏ. ஏஜன்ட் என்றும் பிரச்சாரப்படுத்தினர். ஆனால் இன்று பொல்பொட் யார் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. இப்படியான கருத்து ரீதியான பிரச்சினைகளை சரியான பொறிமுறைக்கூடாக முகம்கொடுக்க ஜே.வி.பி. தயாராக இருக்கவில்லை.

இன்றும் கூட சமூக மாற்றமொன்றுக்காக தொடர்ச்சியாக முயற்சி செய்கின்ற ஜே.வி.பி.யின் மீது எனக்கு அக்கறை உள்ளது. ஆனால் இன்றும் பெண்கள் தொடர்பான விடயம் உள்ளிட்ட பல விடயங்களில் கருத்து ரீதியான வளர்ச்சி காணப்படுவதாகத் தெரியவில்லை. பொருளாதார விடுதலையிலேயே பெண்களின் விடுதலை தங்கியிருக்கிறது என்கின்ற கருத்துடனேயே இன்றும் இருப்பதாகத் தெரிகிறது. நவீன பெண்ணிய சிந்தனை தொடர்பான கருத்தாடல் கட்சிக்குள் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை.

### இன்று லெஸ்பியன் உறவுகள் (ஒருபால் உறவு) பெண்ணியத்தில் மிகவும் சர்ச்சைக்குரியதாகவும், விவாதம் மிக்க ஒன்றாகவும் இருந்து வருகிறது. லெஸ்பியன் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர் என்ற வகையில் உங்கள் கருத்தென்ன?

நடைமுறையில், இலங்கை சமூகத்தில் கூட பெண்கள் பெண்களோடேயே நெருக்கமுற்றுள்ளனர்.

**எப்போதும் பாலுறவின் போது கூட ஆண்களின் அதிகாரத்துவ பாலுறவு நிலவி வருகிறது. ஆண்களுக்கு தேவையான போது, பாலுறவுக்குத் தயாராயிருத்தல், ஆணின் தேவைக் கிணங்க வளைந்து கொடுத்தல் என்பன சாதாரணமாக நிலவுகின்ற விடயம். எனவே தான் இப்படியான போக்குக்கு ஆணாதிக்கம் பயப்படுகிறது. இது 'ஆண்மை'க்கே சவாலான ஒன்றாக பார்க்க வைக்கிறது.**



ஆண்கள் ஆண்களோடேயே நெருக்கமுடையவர்களாக இருக்கின்றனர். சிறு வயதிலிருந்தே விளையாடும் போதும் பழகும் போதும் உறவுகள், தொடர்புகள் என எல்லாமே அந்தந்த பாலாரைச் சார்ந்தவர்களோடேயே வரையறுக்கப்பட்டு விடுகிறது. குறிப்பாக இலங்கைச் சமூகத்தில் இதனை அதிகளவு காணலாம். எமது பாடசாலைகளும் கூட தனித் தனிப்பாலாருக்கென மட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றன. மறு பாலாருடனான உறவுக்குரிய வாய்ப்புகள் எல்லைப்படுத்தப்பட்டே இருக்கின்றன.

பாடசாலை விடுதிகள் மற்றும் வேலை செய்யும் பெண்கள் விடுதிகளில் பெண்களோடேயே வசிக்கின்றனர். ஆண்கள் ஆண்களோடேயே வசிக்கின்றனர். இவற்றை ஒரு போதும் ஒரு பாலுறவு எனக் கொள்வதில்லை. சிலவேளைகளில் அவர்களில் ஒரு பால் உறவு இருப்பவர்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அதனை ஒரு வித்தியாசமாக உணருவதில்லையே. மேற்குலக நாடுகளில் மறு பாலாருடனான உறவுகள் பிரச்சினைக்குரிய ஒன்றாக இல்லை. எனவே தான் சில வேளைகளில் ஒத்தபாலாருடனான உறவுகள் வளர்கின்ற போது அது பிரச்சினைக்குரிய ஒன்றாக தோன்றுவதையும் நாம் கவனிக்கலாம். நமது சமூகத்தில் கூட சமூக உறவு என்பது ஒத்த பாலாருடனேயே உள்ளது. எனவே இதன் தொடர்ச்சியாகவே நாம் ஒத்த பாலுறவையும் பார்க்க வேண்டும். தனிச்சொத்தாகவே பெண்ணைப் பார்த்து வந்த ஆணாதிக்கத்துக்கு பெண்ணை இன்னொரு ஆண் மட்டுமல்ல பெண்ணின் மீது இன்னொரு பெண் அன்பு வைப்பதையும். பாலுறவு கொள்வதையும் ஒரு வேண்டப்படாத போக்காகவே ஐதீகமொன்றை வளர்த்து விட்டுள்ளது என்றே நாம் கொள்ள வேண்டும்.

இலங்கையில் பெரும்பாலான பெண் பிள்ளைகளிடம் உங்கள் நெருங்கிய நண்பர் யார்? யாரோடு ஒளிவுமறைவின்றி பேச முடிகிறது? யாரோடு அழ முடிகிறது? என கேட்டோமானால் அது பெரும்பாலும் இன்னொரு பெண்ணாகத் தான் இருக்கும். இதனை உங்களால் உணர முடிகிறதா? எனது உள்ளத்தைப் பகிர்ந்து கொள்வது இன்னொரு பெண்ணோடு என்றால்? பாலியல் உறவு என்பது மிகவும் சொற்பமான ஒன்றல்லவா? சமூகம், ஒத்த பால் இணைவாக (Homo Social) இருக்கையில் ஒத்தபாலுறவாக (Homo Sexual) ஏன் இருக்க முடியாது? எப்போதாவது ஆண்-ஆணோடும், பெண்-பெண்ணோடும் உள்ள உறவுக்கு சமூக அளவில் அல்லது சட்ட அளவில் இடையூறுகள் வந்தால் அந்த வேளை நாங்கள் அதற்கெதிராக செயற்பட வேண்டி வரும். அப்போது லெஸ்பியன்களது (Lesbian) உரிமைகளுக்காகவும், கே (Gay) உரிமைகளுக்காகவும் பகிரங்கமாகப் போராட வேண்டிவரும்.

### லெஸ்பியன் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பெண்கள் அமைப்புகள் இலங்கையில் எவ்வாறு செயற்படுகிறது?

துரதிருஷ்டவசமாக இலங்கையில் பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பினைத் தவிர லெஸ்பியன் உரிமைகள் குறித்து பேச ஒரு அமைப்பும் இல்லை. அது கூட இதனை வெறும் சஞ்சிகையில் எழுதுவதோடு நிறுத்தி விடுகின்றதே ஒழிய அவ்வுரிமைக்காக தொடர்ச்சியாக குரல்கொடுக்கின்ற அமைப்பாக இல்லை. தான் ஒரு லெஸ்பியன் என கூறிக்கொள்கிற பெண்ணிலைவாதிகளை கூட எம்மால் காணமுடிவதில்லை, அப்படி சொல்வதை ஏற்றுக் கொள்வதற்குரிய சமூகச் சூழல் கூட வழக்கில் இல்லை.

### இன்று வரை ஒருபாலுறவு என்பது ஒரு கிரிமினல் குற்றமாக அல்லவா காணப்படுகிறது?

ஆம் ஒருபாலுறவு என்பது சட்ட ரீதியில் தடை செய்யப்பட்ட ஒன்று. ஆனால் நடைமுறையில் அது தடுக்கக்கூடிய ஒன்றா? பகிரங்கமாக இவை நடப்பதில்லையே? பொலிஸார் என்ன இதனை பிடிப்பதற்கு வீடுவீடாக டோச் அடித்துக் கொண்டா செல்ல முடியும்? பெரும்பாலும் ஆண்களுக்கு ஒருபாலுறவில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். பெரும்பாலும் மலசலகூடங்களில், கடற்கரைகளில்... இப்படியாக. பெரும்பாலும் கைது செய்யப்பட்டுள்ள இடங்களைப் பார்த்தால் இப்படித் தான் இருக்கும். பெண்கள் - பெண்களென்பதாலேயே அந்தளவு சந்தர்ப்பங்கள் இல்லை. எனவே பெண்களை பகிரங்கமாக கண்டிருக்க வாய்ப்புகள் இல்லை. நீங்கள் பாதைகளில் பார்த்தால் கூட பெண்கள் பெண்களுடன் கைகோர்த்துச் செல்வதையும் ஆண்கள் ஆண்களின் தோளில் கைபோட்டுச் செல்வதையும் பார்க்கலாம். ஒரே கோப்பையில் உண்ணுவார்கள். ஒரே படுக்கையில் உறங்குவார்கள். மேலை நாட்டைச் சேர்ந்தவர்கள் இதனைக் காணும் போது உடனேயே Homo Sexual என நினைப்பார்கள். ஆனால் இது Homo Social. சில வேளை எமது சமூகத்தில் நிலவிவரும் Homo Social ஐ விளங்கிக் கொண்டால் எம்மால் அது எப்படி Homo Sexual ஆக மாறுகிறது என்பதையும் விளங்கிக் கொள்ளலாம். வாழ்க்கையில் எல்லா இடங்களிலும் நாங்கள் ஒன்றாக இருக்கிறோமென்றால் பாலியல் விடயத்தில் நெருங்குவது ஒன்றும் பிரச்சினைக்குரிய ஒன்றல்ல. இதிலிருந்து ஒருபாலுறவுக்கு சிறு இடைவெளியொன்றே உள்ளது.

### இதற்கெதிரான கருத்தியல் எங்கிருந்து வருகிறது என நினைக்கிறீர்கள்?

பெரும்பாலும் மதங்களிலும், ஆணாதிக்க தனிச்சொத்தாக பெண்களை நோக்குகின்ற கருத்தியலிலிருந்துமே இது தொடங்குகிறது. மேலும் யோனி மைய வாதம் ஒரு குறிப்பான காரணம். பாலுறுப்புகள் என்பது கருவுறுவாக்கலுக்கு பயன்பட வேண்டியவை. ஆனால் அதுவல்லாத பாலுறவு என்பது சமூக ஐதீகத்துக்குப் புறம்பானது என்ற கருத்தே வேரூன்றியுள்ளது.

மேலும் எப்போதும் பாலுறவின் போது கூட ஆண்களின் அதிகாரத்துவ பாலுறவு நிலவி வருகிறது. ஆண்களுக்கு தேவையான போது, பாலுறவுக்குத் தயாராயிருத்தல், ஆணின் தேவைக்கிணங்க வளைந்து கொடுத்தல் என்பன சாதாரணமாக நிலவுகின்ற விடயம். எனவே தான் இப்படியான போக்குக்கு ஆணாதிக்கம் பயப்படுகிறது. இது "ஆண்மை"க்கே சவாலான ஒன்றாக பார்க்க வைக்கிறது. "Whether you are homo sexual man or you are a lesbian you challenge male image" ஆணதிகாரத்துக்கே சவாலான ஒன்றாக கருதப்படுகிறது. நாங்கள் மாற்று குடும்ப அலகு குறித்துப் பேசுவதாயிருந்தால், மாற்று கலாசார கட்டமைப்பு குறித்து பேசுகிறோம் என்றால் ஏன் மாற்று பாலுறவைப் பற்றிப் பேச பின்நிற்கிறோம்?

# அடிப்பதை நிறுத்துவது என்பது ...



*தமிழில் : அருண்*

**அடிப்பதை நிறுத்துவதால் நாம் எமது சிறுவர்கள் மீதான கட்டுப்பாட்டை இழக்கமாட்டோமா?**

நாம் எமது குழந்தைகளை அடிக்காவிட்டால் அவர்கள் பிரச்சினைகட்குள்ளாகக்கூடும் என்று சிலர் நினைக்கிறார்கள். சரியாகச் சொல்வதானால், இதன் எதிர்மறையே உண்மையாக இருக்கிறது. தண்டிக்கப்பட்ட குழந்தைகளே பெரும்பாலும் சட்டரீதியான சிக்கல்களுக்கு உள்ளாகுகிறார்கள். எவ்வளவுக்கு அடிக்கப்படுகிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் சிக்கலுக்குள்ளாகிறார்கள்.

அடித்தல், குழந்தைகளிடையே அதிகாரமின்மை பற்றிய உணர்வை ஏற்படுத்துகிறது. அடிக்கப்படுகிற குழந்தைகள் பெரும்பாலும் தம்மை சக்திமிக்கவர்களாக உணர்வதற்காக ஆபத்தான செயல்களில் இறங்குகிறார்கள். உடல்ரீதியான தண்டனை கோபத்துக்கும் காரணமாகி விடுகிறது. கோபமுறும், குழந்தைகள் தமது கோபத்தைத் தம்மை விட சிறிய, பலவீனமானவர்கள் மீது காட்ட எத்தனிக்கின்றன.

அடிக்கப்படாத ஒரு குழந்தை கட்டுப்பாட்டொழுங்குடன் இருக்காது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. கட்டுப்பாட்டொழுங்கு என்பது உறுதியான எல்லைகளை வகுப்பதும், குழந்தைகள் எப்போது நல்ல குழந்தைகளாக உள்ளார்கள் என்பதை அவர்களே விளங்கிக்கொள்ள அனுமதிப்பதும், அவர்களது தவறான மதிப்பீடுகளின் விளைவுகள் என்ன என்பதை அவர்களுக்குத் தெளிவாக விளக்குவதுமாகும். இவையெல்லாம் குழந்தைகளை அடிக்காமலே ஆற்றப்படக் கூடியவைதான்.


*அப்படியானால் ஏன் பெற்றோர்கள் அடிக்கிறார்கள்?*

அடிப்பது பயனற்ற ஒரு செயல் என்று தெரிந்திருந்தும் பெற்றோர்கள் குழந்தைகளை அடிப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

*ஏனென்றால் அவர்கள் தம் குழந்தைகள் பாழாகிவிடுமோ என்று பயப்பிடுகிறார்கள்.*

சில பெற்றோர்கள் தாம் தமது குழந்தைகட்கு அடிக்காவிட்டால் அவை பாழாய்ப் போய்விடுவார்கள் என்று நம்புகிறார்கள். உண்மையில் அடிக்காமல் ஆனால் உறுதியான எல்லைப்பாடுகளை விதித்து அவர்களது சொந்த மதிப்பை வளர்க்கும் விதத்தில் அவர்களுக்கு உறுதுணையாக செயற்பட்டு, ஒரு நம்பகரமான உறவை வளர்க்கின்ற பெற்றோர்கள் மிகவும் நன்றாக அனுசரித்துப் போகின்ற, சுயகட்டுப்பாடுள்ள பிள்ளைகளை உருவாக்குகிறார்கள். அடிக்காமல் விடுவது என்பது குழந்தைகள் தாம் விரும்பும் எல்லாவற்றையும் செய்ய அனுமதிப்பது என்று அர்த்தப்படாது. குழந்தைகளைத் தவறான நிலையிலிருந்து சரியான நிலைக்குக் கொண்டு வருவதற்காகக் கற்பிக்க வேறுபல கட்டுப்பாட்டொழுங்கு வடிவங்கள் இருக்கின்றன.

"நான் போனில் பேசிக்கொண்டிருந்தேன். அவள் ஒரு குரங்காக நடித்துக் கொண்டிருந்தாள். அவளை நிறுத்துமாறு சொன்னேன். கடைசியில் அவளுக்கு காலில் ஒரு அடி போட்டேன். அவள் என்னை ஒரு விளையாட்டு வண்டியினால் அடித்தாள். பிறகு நான் அவளுக்கு அடித்த இடத்திலிருந்த என் விரல் அடையாளத்தைக் காட்டினாள். உண்மையில் நான் அவளை இறுக்கித்தான் அடித்துவிட்டேன். இதனால் தான் நான் அவளை இப்போது அடிப்பதில்லை. இது அவளுக்கு, தானும் எனக்கு அடிக்கலாம் என்பதையே காட்டுகிறது.



*ஏனென்றால் அவர்களுக்கு வேறு என்ன செய்வதென்று தெரியாது.*

பல பெற்றோர்கள் அடிப்பதை நிறுத்த வேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய மாற்றுவழிகள் எதுவும் தெரிந்திருப்பதில்லை. உண்மையில் ஒரு சில பெற்றோரே குழந்தை தவறுவிடுகிற போதெல்லாம் அடிக்கிறார்கள். பெரும்பாலான பெற்றோர்கள் சில மாற்றுவழிகளை தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவற்றைத் தொடர்ச்சியாக பயன்படுத்த அவர்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

*ஏனென்றால் அவர்கள் வேறு வழிகளைப்பற்றி யோசிப்பதில் அதிருப்தியும் ஆத்திரமும் அடைகிறார்கள்.*

குழந்தையை ஆத்திரத்தில் அடிப்பது கூடாது என்று பெரும்பாலான பெற்றோருக்குத் தெரிந்த போதும் இப்படித்தான் பெரும்பாலான அடிகள் விழுகின்றன. நாம் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கும்போது எமக்கு தெளிவாகச் சிந்திக்கக் கடினமாக இருக்கும். நாம் எமது எதிர்வேகத்தை வெளிப்படுத்த முனைவோம். உண்மையில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் அடிக்கும் பெற்றோர்கள் பிறகு தாம் எவ்வளவு மோசமாக நடந்துவிட்டோம் என்றும் இந்த விடயத்தை வேறுவிதமாகக் கையாண்டிருக்கலாம் என்றும் எண்ணிக் கவலைப்படுவதுண்டு. தமது குழந்தைக்கு எதிரான தமது கோபத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளைக் கற்றுக்கொள்வது பெற்றோருக்கு அவசியமாகும். திரும்பி நின்று 10வரை எண்ணுதல், ஒரு நண்பனைக் கூப்பிடுதல், அல்லது குழந்தையை அதன் அறைக்குள் உங்கள் கோபம் மாறும்வரை அனுப்பிடல் என்பவை அவற்றுள் சில.

*ஏனென்றால் குழந்தைகளின் வளர்ச்சி மட்ட செயற்பாடுகளை 'தவறான நடத்தை' என்று விளங்கிக் கொள்கின்றனர்.*

குழந்தைகளுடன் பெருமளவு அனுபவமில்லாத பெற்றோர்கள் எல்லாக் குழந்தைகளும் பெற்றோர்களை ஆத்திரப்படுத்தும் வேலைகளையே செய்வார்கள் என்றே கருதுகின்றனர். குழந்தைகள் உண்மையில் தமது பெற்றோரை ஆத்திரப்படுத்த முயல்வது என்பது மிகவும் அரிதான ஒன்றே. பெற்றோர் தவறான நடத்தைகளாக இனங்காணும் பெரும்பாலானவை குழந்தைகளிடம் வளர்ந்து வரும் சுதந்திரத்திற்கான தேவையின் வெளிப்பாடுகள். தமது குழந்தைகள் குறித்து பொருத்தமான எதிர்பார்ப்புக்களை பெற்றோர் கொண்டிருப்பது முக்கியமானதாகும்.

*ஏனென்றால் அவர்கள் குழந்தை காயப்படுவதில் இருந்து அடித்தல் பாதுகாக்கும் என்று நினைக்கிறார்கள்.*

ஆபத்தான வேலைகளில் குழந்தைகள் ஈடுபடும் போது அவர்களுக்கு அடிப்பது அவசியமானதே என்று பொதுவாக குழந்தைகட்கு அடிக்க விரும்பாத பெற்றோர்களே நம்புகிறார்கள். குழந்தைகளும் சிறுவர்களும் காயப்படலின் ஆபத்தைப்பற்றிக் விளங்கிக் கொள்ளக்கூடியவர்கள் அல்ல. அவர்களுக்கு அவர்களை காயப்படுத்தக் கூடியவைகள் பற்றி கல்வியூட்ட வேண்டும். இது குழந்தைகளின் மனதை அலைக்கழிக்காத அவர்களை நோகச் செய்யாத விதத்தில் செய்யப்படமுடியும். ஒரு குழந்தை ஆபத்தில் இருந்தால் அதை தூக்கலாம், இழுத்துவிடலாம், பிடித்துக்கொள்ளலாம். தண்டனை வழங்கும் நோக்குடன் அதை தாக்குவதைவிட இது வித்தியாசமான அணுகுமுறையாகும்.

**(வரும்)**

---

## இழந்த காதலை நினைவு கூறல்...

இன்று பிறை பார்த்தேன் :
யார் முகத்தில் நீ விழித்தாய் ?
பார்த்த விழி மூடித்
திறவாமல்
என்னில் விழிக்கவென்றே காத்திருப்பாயோ
மறந்து - நானும் ஒரு கணம்
அஃதிருந்தேன்.

நீ என்ன செய்கிறாய் ?

இரவிலிங்கு நிலவெழுகிறது -
பதுங்கக் குறை வீடும்
அடர் இருளும், முடுக்கும்
கிணற்றடியே ஆளின் அரவமாயசையும்
அகன்ற கதலி வாழை இலையும்,
கன்றுத் தென்னையும்
அங்கிருந்தும் ஏது பலன்.

நீ என்னடி செய்கிறாய் -
இருளில் வாசலுக்கு வருகிறாயா?
சமிக்ஞைக்காய் நான் இருமச் - சத்தத்தில்
மிக்க களி கூர்ந்து,
கூத்தாடிப் பின் பயத்தில் - நிமிடத்தில்
இதயத்தின் என் துடிப்பை
அறிக நீயெனக் கை பற்றி
இழுத்து
வைத்துச் செல்லமாய்ப்
'போடா' வென விரட்டி, அகல்கையில்
மறித்துச்
சட்டென்று ஒரு முத்தமிடுமந்த
என்னுடைய நீயும் இல்லையடி அங்கும்
இல்லையடி இங்கும்.

உச்சிப் பொழுதில் வெயில் கொளுத்த
என் -
சத்தமிடும் சைக்கிளொடு
புழுதி மிகக் குடித்தபடி அலையவெனத்
திக்கில்லை எனக்கினி.
நாளுக்கு நாள் ஏறும்
சிகரட்டை விட்டொழிக்கப் போயடித்துச்
சத்தியம் பண்ணிக்
கட்டுண்டே நான் கிடக்க -
உன்போல் அடர்ந்த சுருள் முடித் தலையுமில்லை.

அதைவிடு --
சொல்லேன் எப்படி இருக்கிறாய்?

கண்ணிமைக்கும் காலத்தின்
நூற்றிலொரு பங்குக் கணமாச்சும்
எனை நினைத்தல் கூடுமா நீ
உனக்குத்தான் சுற்றமும் சுகமும் சூழவொரு
வாசான வாழ்வல்லோ வந்தே வாய்த்திற்று.

இங்கே யிப்போ --
காற்றில்
ஒரு நூறு பளிங்குக் குவளைகள் விழுந்து
உடைந்து சிதறுகின்றனவே-
அது உன் சிரிப்பொலி
ஓம்...
இம் மங்கிய இரவின் மென்னிருளில்
உன் கண்ணாளன் கையணைவில்
துவண்டு ஒரு கணம்
கூச்செறிந்து நீ
சிரித்திருத்தல் கூடும்.

காதல் -
எவ்வளவு மோசமானதொரு பொய்
நீ சொன்ன.

19980101 இரவு 10.30 மணி

# சூழல் மையக் கல்வியாக அரங்கு

–வடிவேல் இன்பமோகன்

1

ஒவ்வொரு தனி மனிதரின் உருவாக்கத்திலும் பாடசாலைக் கல்விக்கு முக்கியமானதொரு இடமுண்டு. மாணவர்கள் தங்கள் வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க பங்கை பாடசாலைக் கல்வியிலேயே செலவிடுகின்றனர். இக் கல்வியின் மூலம் மாணவர்கள் சமூக இயல் இலக்கியத்தில் இணைந்து வாழ்வதற்கான பல்வேறு திறன்களும் வளர்க்கப்பட வேண்டும்.

கல்வியின் நோக்கம் பற்றிக் கருத்துத் தெரிவித்த மகாத்மா காந்தி பின்வரும் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

**''கல்வி அறிவை வளர்ப்பது, ஆற்றலை வளர்ப்பது, உணர்ச்சிகளைப் பயன் படுத்துவது மக்களை வாழ்வதற்கு ஆயத்தம் செய்வது, மக்களின் சமூக நடத்தையை மாற்றியமைப்பது, மக்களில் உள்ளுறைந்திருக்கும் ஆன்மீகப் பண்புகளை படிப்படியாக முழுமையாக வெளிக் கொணர்வது''**

மகாத்மா ,காந்தியின் இக்கூற்றின் மூலம் கீழைத்தேயக் கல்வி முறையின் நோக்கம், தன்மை என்பன மிகத் தெளிவாகப் புலப்படுகின்றன.

எமது கீழைத்தேயக் கல்விப் பாரம்பரியத்தில் அன்பு, அறம், ஒழுக்கம், குருபக்தி என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆன்மீக நோக்கையே அடையாளம் காணலாம். மேற்கத்தியக் கல்விமுறை உலகியல் நோக்குக்கு முக்கியத்துவம் கொடுத்து, விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சியில் கனிந்து தொழில் நுட்பக்கல்வியாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

இன்றைய எமது கல்விமுறை பிரித்தானிய காலனியாதிக்கவாதிகள் கொண்டு வந்து இங்கு புகுத்திய மேற்கத்திய கல்வி முறையின் பல அம்சங்களையும் இணைத்த புதியதொரு கல்விமுறையாக உள்ளது. இக் கல்வி முறை மேற்கில் இன்று வளர்ச்சியடைந்துள்ள மாணவர் மையக் கல்வியை நோக்கி வளர்ச்சியடைந்துள்ளது. இது மாணவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு கல்வி புகட்டப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றது. இக்கல்வி முறையில் எமது கீழைத்தேய கல்விப் பாரம்பரியத்தில் வந்த ஓதல் - ஓதுவித்தல் மரபு உள்ளதேயொழிய ஆசிரியர் மாணவர் உறவுகள் பேணப்படவில்லை.

இன்று இம்மாணவர் மையக்கல்வி பரீட்சை மையக்கல்வியாக வளர்ச்சியடைந்து இருக்கின்றது. கற்றவர்களின் பெருக்கம் பரீட்சையில் கூடிய பெறுபேறுகளைப் பெறுபவர்களுக்கு அதிக வசதி, வாய்ப்புக்கள் கிடைக்கும் நிலையை உருவாக்குகின்றது. இந்நிலைமை பரீட்சை மையக் கல்வியின் அவசியத்தை வற்புறுத்துகின்றது. இச்சந்தர்ப்பத்தில் சமூக ஓட்டத்துடன் தங்களையும் இணைத்துக் கொண்டு ஓட வேண்டிய தேவை மாணவர்களுக்கு உருவாகின்றது.


பரீட்சை மையக் கல்வியில் பரீட்சையில் சித்தியடைவதே மாணவர்களின் ஆளுமையாகக் கருதப்பட்டது. ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சையில் மாணவர்களை வெற்றியடைய வைக்கும் பயிற்சியாளர்களாக மாறி விடுகின்றனர். மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமாயின், தங்களுடைய விசேட திறன் கொண்ட பயிற்சியாளர்கள் தேவைப்படுகின்றனர். இதனால் விசேடத்திறன் கொண்ட பயிற்சியாளர்களை நோக்கி தனியார் கல்வி நிறுவனங்களை நாடுகின்றனர். தனியார் கல்வி நிறுவனங்களின் பொதுநோக்கு பொருளாதார நலனாக இருப்பதால் மாணவர்களின் தேவை, ரசனை என்பனவற்றை உணர்ந்து அவர்களுக்கு தீனிபோட்டு பணம் சம்பாதித்தல் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

இப்பரீட்சை மையக்கல்வியின் பணி பரீட்சையில் சித்திபெறுவதுடன் முடிவடைகின்றது. மேற்கத்திய 'கல்வியியல் பார்வையின் விளைவாக உருவாகிய கல்வி முறையாக இது அமைந்துள்ளதால் சூழலுக்கும் கல்விக்குமிடையே' எதுவித தொடர்பையும் இங்கு காணமுடியாது. சமூக இயைபாக்கம் சமூக விழிப்புணர்வு என்பவற்றுக்கு இங்கு இடமில்லாது போகின்றது. இக்கட்டத்தில் சமூக உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டிய பாடசாலைகள் சடத்தன்மையுள்ள நிறுவனங்களாக மாறி விடுகின்றன.

இந்நிலைமைகள் எமது இன்றைய கல்விச் சூழலில் காணப்பட்ட போதும் மட்டக்களப்பின் கல்விச் செயற்பாட்டில் இதனைக் குறிப்பாக அடையாளங் காணலாம்.

இன்றைய விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி சமூக இயக்கத்தை இயந்திர மயப்படுத்தி விட்டது. மனிதருள் மனிதப்பண்புகள், மனித உணர்ச்சிகள் அன்பு, காருண்யம் என்பன இவற்றால் புறக்கணிக்கப்படுகின்றன. மட்டக்களப்பின் சமூக இயக்கம் இயந்திர மயப்பட்டதாகக் காணப்படுகின்றதே தவிர விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சியின் மேலாட்சி இங்கு ஒப்பீட்டளவில் உணரப்படவில்லை. இன்றுவரை விவசாய பொருளாதாரக் கட்டமைப்பே சமூக அசைவியக்கத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் இவ்வானதொரு நிலைக்கு எமது கல்விமுறை இயந்திரமயப்பட்டதாக இருப்பதே முக்கிய காரணம் எனலாம். இவ் இயந்திரமயப் படுத்தப்பட்ட வாழ்க்கை முறையுடன் மனித சுற்றுப்புறச்சூழலில் ஏற்பட்ட யுத்தப்பாதிப்புக்கள், தொடர்புச் சாதனங்களின் தாக்கம் என்பன இணைகின்றன. யுத்தம் தான் வாழும் சூழலைப்பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றது. இந்நிலைமைகள் மக்கள் வாழ்வின் மேற்கொண்ட உறுதித்தன்மையைச் சிதைத்து விடுகின்றன. இப்பாதிப்புக்கள் பாடசாலை மாணவர்களுக்கும் ஏற்பட்டு விடுகின்றது.

இவ்வாறனதொரு சூழலில் எமது பாடசாலைக் கல்விச் ''சூழல் மையக் கல்வி''யாக அமைந்து தொழிற்பட்டு இருக்குமாயின் மாணவர்களின் தேவைகள் நலன்களுக்கேற்ப அது ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். இச்சந்தர்ப்பத்தில் பாடசாலைக் கல்விக்கும் சமூக இயக்கத்திற்கும் இடையேயுள்ள இயைபின்மை உணரப்படும் அதே வேளை இக்கல்வி முறை எமது சூழலுக்குப்பொருத்தமற்றது என்பதும் தெளிவாகின்றது. ''கல்வியும் வாழ்க்கையும் வேறுபட்ட செயல்கள் அல்ல. இரண்டும் ஒரு பொருளையே குறிக்கும். பள்ளிக்கூடங்கள் ஒவ்வொரு தனிமனிதரின் நாளாந்தச் சிக்கல்களைத் தீர்க்கும் சமூகமாக விளங்குதல் வேண்டும்'' (ஜோன் டூயி) என்பது இச்சந்தர்ப்பத்தில் புலனாகின்றது.



2

பாடசாலைக் கல்விச் செயற்பாட்டுடன் நாடக அரங்கச் செயற்பாடுகளை இணைத்து மாணவர்களை அவர்கள் எதிர்கொள்ளும் கல்வியியல்/ வாழ்வியல் பிரச்சினைகளில் இருந்து விடுவித்து புதிய ஆளுமை மிக்கதொரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியுமென்னும் மாற்றுச் சிந்தனை இச் சந்தர்ப்பத்தில் வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றது. 70களின் பிற்பகுதியில் இது ஏற்பட்டு 80களில் உத்வேகம் பெற்று இன்று வரை தொடர்வதைக் காண்கின்றோம். இவ் அரங்கச் செயற்பாடுகள் யாழ்ப்பாண அரங்கை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டன. மட்டக்களப்பில் 90களில் இருந்து இதன் ஆரம்பம் உணரப்படுகின்றது.

மட்டக்களப்பின் பாடசாலை அரங்க வளர்ச்சியில் (School Theatre) இரண்டு வேறுபட்ட தன்மையுடைய நாடகக் குழுக்களின் செயற்பாடு முனைப்புப் பெற்று உள்ளது.

ஒரு பிரிவினர் மட்டக்களப்பின் ''முன் நவீன அரங்கின்'' (Pre modern Theatre) தொடர்ச்சியாக வந்தவர்கள் இவர்கள். இசை, நாடக மரபு, கலையரசின் பின்வந்த அரங்க மரபு, சினிமாவின் மூலம் பெற்ற அரங்க நுட்பங்கள் போன்றவற்றை இணைத்து சமூக வரலாற்று விடயங்களை ஜனரஞ்சகப் பாணியில் கூறியவர்களின் தொடர்ச்சியாக வந்தவர்கள். சமூகம் பற்றிய தங்களின் புரிந்துணர்வையும் வரலாற்று விடயங்களையும் தங்களின் நாடகங்களின் மூலம் கூறியபோதும் சமகால அரங்கியல் இயக்கத்துடன் இவர்கள் முழுமையாக இணைந்துகொள்ளவில்லை. இதனால் சமகால பாடசாலை நாடகங்களின் அரங்கியல் நோக்கைப்புரிந்து கொள்ளும் ஆற்றலற்றுக் காணப்பட்டனர். இதனால் இவர்களின் பாடசாலை அரங்கச் செயற்பாடுகள் அழுத்தமற்றனவாக விளங்கின. இருந்தும் இவர்களின் செயற்பாடுகளே பாடசாலையரங்கில் மேலோங்கி நின்றன.

அடுத்த பிரிவினர் அரங்கச் செயற்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள். இவர்களிடம் பாடசாலை அரங்கை சமகாலச் சூழலுக்கேற்ப எவ்விதம் வளர்த்துச் செல்ல வேண்டும் என்பதில் தெளிவான செயற்திறன் இருந்தது. இதனை யாழ்ப்பாண அரங்கினூடாகக் கற்றுக் கொள்கின்றனர். இவர்களின் அரங்க நடவடிக்கைகள் இரு தளங்களிலேயே நிகழ்கின்றன. அவை

1. ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சிறுவர் நாடகச் செயற்பாடுகள்.
2. சிரேஷ்ட மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நாடகச் செயற்பாடுகள் என்பனவாகும்.

இவ்விரு நடவடிக்கைகளும் 90களில் இருந்தே ஆரம்பமாகின்றது.

இக்கால சிறுவர் நாடக முயற்சிகளாக கலாநிதி *சி. மௌனகுரு* சென் மைக்கல் கல்லூரிக்காகத் தயாரித்த ''வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்'' (1991), *வெ. தவராசா* வின்சன் மகளிர் கல்லூரி மாணவர்களைக்கொண்டு நெறிப்படுத்திய *குழந்தை சண்முகலிங்கத்தின்* ''முயலார் முயல்கிறார்'' (1991), (இந்நாடகம் *1992*ல் *மௌனகுருவால்* சென் மைக்கல் கல்லூரியிலும் *1997*இல் *ஜெயசங்கரால்* மகாஜனக் கல்லூரியிலும் தயாரிக்கப்பட்டது.) வந்தாறுமூலை கணேசா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு *ஜெயசங்கர்* தயாரித்த ''பிள்ளை அழுத கண்ணீர்'' (1997), திலகநாதன் சிசிலியா மகளிர் கல்லூரிக்காகத் தயாரித்த *குழந்தை சண்முகலிங்கத்தின்* ''ஒற்றுமையின் சின்னம்'' (1997) என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இந்நாடகத் தயாரிப்பாளர்கள் சிறுவர்களின் கற்பனைக்கு இடமளித்தல், அவர்களிடையே உள்ளுறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக் கொணர்தல், சிறுவர்களின் உளவியல் தேவைகளைப்பூர்த்தி செய்தல், சிறுவர்களிடையே ஊடாட்டத்தை யேற்படுத்தல் என கல்வியியல் சூழலில் அவர்களை ஈடுபடுத்தி அவற்றின் மூலம் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தனர்.

இந்நோக்கை *வெளி ரெங்கராசன்* கூறும் பின்வரும் கூற்றுக்கள் புலப்படுத்தும்.


''இன்றைய கல்வித்திட்டத்திலே குழந்தைகளுக்கு விளையாட்டுத்தன்மையும் குதூகலமும் படைப்புத்திறனும் கொண்ட ஒரு கற்பனையுலகம் மறுக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. எதிர்காலத் தலைமுறையினரின் கற்பனைகளையும் மதிப்பீடுகளையும் ஒரு சமூகம் புறக்கணித்து விட முடியாது. அவர்களை சமூக ஆக்கத்திலும் கலாசாரப் பாணியிலும் ஈடுபடுத்தும் முயற்சியாக நாடகம் அமைய வேண்டும். நம்முடைய உடலே நமக்கு அன்னியமாகிப் போய்க் கொண்டிருக்கின்ற ஒரு இயந்திர மயமான காலகட்டத்தில் உடலையும் மனதையும் ஒருங்கிணைக்கும் ஒரு பயிற்சியை நாம் நாடகத்தில் பெற முடியும். இதை நாம் நம் குழந்தைகளில் இருந்துதான் தொடங்க வேண்டும்''

இதிலிருந்து ஒரு ஆளுமை மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான முன் தயார் படுத்தலை இவர்களின் அரங்கச் செயற்பாடுகள் சுட்டி நிற்பதனை உணரக் கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பின் பாடசாலையரங்கின் தொடக்கமாக சிறுவர் அரங்கு அமைய அதன் அடுத்த கட்ட வளர்ச்சியான சிரேஷ்ட மாணவர்களுக்கான அரங்கு இன்னொரு குழுவினரால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

தவராசா வின்சன் மகளிர் கல்லூரிக்காக தயாரித்த *குழந்தை சண்முகலிங்கத்தின்* ''புழுவாய் மரமாகி'' (1991) மற்றும் தனது ''நித்தமும் அமாவாசை'' (1992) ''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' (1993), ''சகதி'' (1994), ''புதுயுகமொன்று அமைப்போம்'' (1995) என்பனவும், *கவிஞர் வாசுதேவன்* மெதடிஸ் மத்திய கல்லூரிக்காகத் தயாரித்த ''நச்சுமரம்'' (1995), ''சிதைவு'' (1996) என்பனவும் *பாலசுகுமார்* இந்துக்கல்லூரியில் தயாரித்த பாண்டிச் சேரியைச் சேர்ந்த *ஆறுமுகத்தின்* ''கருஞ்சுழி'' (1996) இதே கல்லூரிக்காக *ஜெயசங்கர்* தயாரித்த ''முகில்களின் நடுவே'' (1995) என்பனவும் *எஸ். நேசராசா* களுதாவளை மகாவித்தியாலத்தில் தயாரித்த *குழந்தை சண்முகலிங்கத்தின்* ''தாயுமாய் நாயுமானார்'' (1992) சித்தாண்டி மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் *சிவா* தயாரித்த *மௌனகுருவின்* ''நம்மைப் பிடித்த பிசாசுகள்'' (1993), *பாலசுகுமாரின்* ''சூர்ப்பனகை இடது கை வாங்கிய இராவண தனுசு'' (1997)

→17



—அம்பை

நன்றி : சதங்கை

அந்த புறநகர்ப் பகுதியின் தெருமுனையில் தான் முதலில் வில்லேந்தி; குறிபார்த்தபடி, ராமனின் ஒரு பிரம்மாண்ட அட்டை உருவப்படம் எழுப்பப்பட்டது, 'ராமன் மேல் ஆணை! கோயிலை அங்கேயே கட்டுவோம்' என்ற வாசகங்களுடன். அந்தப் புறநகர்ப்பகுதியில் கடவுள்களின் நடமாட்டம் அதிகம். இரவில் சுத்தமாக இருக்கும் நடைபாதையைப்படுத்து, பார்த்துவிட்டு விடிந்த பிறகு ஜன்னல் வெளியே பார்த்தால், குளியலறையில் இருக்கும் பளிங்கு அல்லது மணி ஓடுகள் போல் ஓடுகள் வேய்ந்த ஒரு சிறு சாயிபாபா கோயில் எழுப்பப்பட்டு இருக்கும். ஒரு ஆரஞ்சு வண்ணக்கொடி பறந்து கொண்டிருக்கும் அதன் உச்சியில். இரண்டு நாட்களில் ஒரு மணியும், ஒரு உண்டியலும் அதில் வந்து விடும். பிறகு ஒரு பூசாரி வருவார். சில சமயம் கோயிலின் கடவுள் செய்யும் அற்புதங்கள் பற்றிய கதைகளும் பரவத்தொடங்கும். கோயில் எழுப்பப்பட்ட உடனேயே காரியாலயத்திற்கு விரைந்து கொண்டிருப்பவர்கள் அரை வினாடி செருப்பைக் கழற்றி விட்டு நின்று, கன்னத்தில் போட்டுக் கொள்ளத் தொடங்கி விடுவார்கள். பேருந்தில் விரைபவர்கள் ஆரஞ்சு வண்ணக்கொடியைக் கண்டதும் கோயில் அருகில் இருக்கும் என்று கன்னத்தில் போட்டுக் கொள்ளத் தொடங்கி விடுவார்கள். ஒரு முறை சன்னல் வெளியே யாரோ ஆரஞ்சு வண்ணப் புடவையை உலர்த்தியிருந்தார்கள். அதற்கும் சிலர் கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள் பழக்கத்தின் காரணமாக. சில கோயில்களின் பக்கத்திலேயே நிரம்பி வழிந்து, தெருவெல்லாம் குப்பை சிதறியபடி அழுகல் நாற்றமும் சில சமயம் ஏதாவது பிராணி ஒன்று செத்த வாடையும் வீசியபடி குப்பைத்தொட்டி இருக்கும். கன்னத்தில் போட்டுக்கொண்ட உடனேயே மூக்கைப் பிடித்துக் கொண்டு விடலாம். கோயிலை ஒப்புக்கொண்ட அதே ஏற்புடன் குப்பைத்தொட்டியையும் ஒப்புக் கொண்டனர். இத்தகைய மனோபாவத்துக்குக் கீதை, புராணங்களிலிருந்தெல்லாம் மேற்கோள்கள் காட்டினர் சிலர். கன்னத்தையும் மூக்கையும் அருகருகே படைத்த கடவுளின் அற்புதச் செயலை வியந்தனர் சிலர்.

தெருமுனையில், நிமிர்ந்து பார்க்கும் படி எழும்பிய ராமனின் உருவம் பற்றி யாருக்கும் ஆட்சேபனை இருக்கவில்லை. ராமனுடன் அவளுக்கு அதிகம் பரிச்சயம் இல்லை. சிறுவயதில் கெட்ட சொப்பனம் வந்து எழுந்தால், 'ராம ராம' என்று சொல்லி விட்டுத் தூங்கச் சொல்வாள் அம்மா. வீட்டில் ரவி வர்மா வரைந்த ராமபட்டாபிஷேகப்படம் பூசை அறையில் இருந்தது. வளர வளர ராமனைச் சில விஷயங்களில் பிடிக்காமல் போயிற்று. மூலமான விஷ்ணு உருவத்தில் ஆதிசேஷன் மேல் படுத்துக்கொண்டு லக்ஷ்மியைப் பாதத்தருகே வைத்திருப்பது கடுகடுப்பை உண்டாக்கியது. சிவனைப் பிடித்தது கஞ்சா பிடித்தபடி, அங்கும் இங்கும் அலைந்து, தாண்டவம் ஆடும் சிவனின் அலட்சியமும், எதிர்ப்புக்குணமும் பிடித்தது. 'சம்பூர்ண ராமாயணம்' படம் பார்த்த பின் என். டி.ராமராவாகி விட்டார் ராமன் அவளைப் பொறுத்தவரை. அதுவும் 'கா சுககரீ ரிகரிரிஸா ரிகரிரிஸாரிஸா நித பதஸா' என்று காம்போதி ராகத்தை விளக்கியபடி ராவணனாக டி.கே. பகவதி பாடிக்கேட்டபின், ராவணன் பக்கம் மனம் சாய ஆரம்பித்தது. சாவித்திரி ராகத்தில் 'இன்று போய் நாளை வா என எனை ஒரு மனிதன் புகழுவதோ?' என்று சோகம் பொங்க டி.கே. பகவதி பாடும்போது அழுதிருக்கிறாள்.

அவள் மனதில் இது பற்றி எல்லாம் இருந்த எண்ணங்களின் பிரதிபலிப்பாகத்தான் அப்போது அவள் கல்லூரிப் பத்திரிகைக்கு அந்தக் கதையை எழுதினாள். 'லக்ஷ்மிக்கும் ஒரு ஆதிசேஷன்' என்று தலைப்பு. கதை இப்படிப் போயிற்று.

பாற்கடல் விரிந்து கிடந்தது. நீலம் சிறிது ஊடுருவியிருந்தது. சிவன் விழுங்கும் முன் ஒரு சிறு துளிகள் கடலில் விழுந்தனவோ என்னவோ தெரியவில்லை. வெள்ளையும் கடும் நீலமும் கலந்த பின் வரும் மென் நீலம். லக்ஷ்மிக்கு அந்த மென் நீலம் மிகவும் பிடிக்கும். அதை விஷ்ணுவிடம் பல முறை கூறியிருக்கிறாள். 'நானும் நீல வண்ணனாக இருந்தவன்தானே?' என்று சிரிப்பான் விஷ்ணு. அது என்னவோ மற்றவர்கள் கூறுவதால் தானும் நீலவண்ணன் என்று சொல்லிக் கொள்கிறான். பார்க்கப்போனால் நல்ல கறுப்பு கண்ணன். அதைக் கவிதை நோக்கில் நீலம் என்று சொற்களோடு விளையாடுபவர்கள் சொன்னால் நம்ப வேண்டுமா என்ன? எவ்வளவு அழகு அந்தக்கறுப்பு! பளபளவென்று கருந்தந்தத்தில் எண்ணையைப் பூசினாற்போல்! கரும் வண்ணன். இந்த நீலம் வேறு. இது கனவின் நீலம். பிடிபடாத நீலம். புதிரான நீலம்.

திரும்பிப் பார்த்த போது வலதுபுறம் திரும்பி விஷ்ணு படுத்தாகிவிட்டது. ஒரு சோர்வு கப்பியது அவளை. சில நினைவுகளை அவளால் துறக்க முடியவில்லை. அவள் மனதின் ஒரு மூலையில் வீணையில் காம்போதி ஒலித்தது. உருகி வரும் காம்போதி, அசோக வனத்தில் அரக்கிகளிடையே தளர்ந்து கிடந்த போது சிறிது உயிரூட்டிய காம்போதி. அத்தனை ஆண்டுகள் வனத்தில் இருந்து விட்டுப் பாதங்கள் வெடித்து, கைகள் சொர சொரத்துப்போய் சருமம் வறண்டு போன பின்னும் அவளுக்காக ஒருவன் வாசித்த காம்போதி.

அரக்கனாம். யமுனை நதிக்கரையில் ஒரு கர்ப்பிணிப் பெண்ணைத்தனியாக நிறுத்தி விட்டவர்கள் மனிதர்களா என்ன ? கண்களில் நீர் பெருகியது.

'லக்ஷ்மி..'

திரும்பிப்பார்த்தாள். ஆதிசேஷன்தான் கூப்பிட்டான்.

'ம்' என்றாள்.

'என்ன ஆயிற்று உனக்கு?'

'இல்லை, இவன் எப்படி இப்படித் தூங்குகிறான்? ஆதி, ஞாபகம் இருக்கிறதா, நான் தனியாக நின்றேன் ஆதி! என் முன்னே நதி மௌனமாக ஓடிக்கொண்டிருந்தது. அதைக் கடக்கப் படகோடு குகன் இல்லை. ஒரு சிறுபாலம் போட அனுமன் இல்லை. ஒரு அணில் கூட இல்லை. ஆதி, எனக்கு ஏன் இந்த தனிமை? நானும் மீனாக நீந்தியிருக்கிறேன். ஆமையாகக் கனத்த ஓட்டோடு நடந்திருக்கிறேன். காட்டுப்பன்றியாக அலைந்திருக்கிறேன். என் அவதாரங்களைப்பற்றி யாருக்குத்தெரியும்? அவை இவனுடையதோடு ஒட்ட வைத்தவை. வால் மாதிரி. வண்ணம் சேர்க்க, பரவசப்படுத்த கிளுகிளுப்பூட்ட.

'நீ பேசுவது ஒரு பெண் தெய்வம் சொல்வது மாதிரி இல்லையே?'

'பெண்ணாவது தெய்வமாவது ஆதி! என் எண்ணப்படி எது நடக்கிறது? பாத்திமாவுடன் பேசியபடி பாலைவனத்தைச் சுற்றி வர ஆசை. மேரி கையிலிருந்து குழந்தையை வாங்கி என் இடுப்பில் வைத்துக்கொண்டு பெதலஹெம் மற்றும் சுற்றுப்பிரதேசங்களைப் பார்த்து வர ஆசை. இப்படி இவன் காலடியில் உட்கார்ந்திருப்பதில் என்ன சுகம்? அக்கடா என்று படுக்க ஒரு பாம்புப் படுக்கை உண்டா எனக்கு?'

ஆதியின் மனம் இதைக்கேட்டு உருகியது. இன்னொரு பாம்புப் படுக்கையை உண்டாக்கினான். விஷ்ணு கண் விழித்தபோது பக்கத்தில் இன்னொரு பாம்புப் படுக்கையில் லக்ஷ்மி. உடலை ஒடுக்காமல், தாராளமாகப்படுத்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள்.

கல்லூரிப் பத்திரிகையின் பொறுப்பாசிரியர் கதையை ஏற்கவில்லை. கதை மற்றக் காகிதங்களோடு புதைபட்டுப்போயிற்று. லக்ஷ்மி பாம்புப் படுக்கையில் படுப்பது போல் எழுதியது போக, இவளே ஏதோ பாம்புப்படுக்கையில் மிதந்தபடி உலகத்தைப்பார்ப்பது போல் ஒரு எண்ணம் இவளுக்கு ஏற்பட்டுப் போயிருந்தது. அதனால் நடைபாதைக் கடவுள்களை அவள் அதிகம் பொருட்படுத்தவில்லை. ஆனால் கடவுள்கள் இவள் நடைமுறை வாழ்க்கையில் குறுக்கிட ஆரம்பித்தபோதுதான் பாம்புப் படுக்கையிலிருந்து இறங்காமல் முடியாது என்று தெரிந்தது. உடற்பயிற்சிக்காகத் தினம் காலை நாற்பது நிமிடங்கள் விறுவிறுவென்று நடக்க வேண்டும் என்று தீர்மானித்தவுடன், அதற்காகத் தேவைப்படுவதெல்லாம் விளையாட்டு வீராங்கனைகள் அணியும் புது மோஸ்தர் காலணிகள் என்று அவள் நினைத்து விட்டாள். தெருவில் இறங்கியபோதுதான், விரையும் வாகனங்களிலிருந்து ஒண்டிக்கொள்ள வேண்டுமானால் தெருவின் இருபக்கமும் இடம் இருந்தது ஆனால், விறுவிறுவென்று நடக்க நடைபாதை என்ற ஒன்று இல்லை என்பது புரிந்தது. அதிவிரைவாக வரும் ஓரடுக்கு, ஈரடுக்குப் பேருந்துகள், பாரம் ஏற்றி வரும் லாரிகள், பணக்கார அப்பாக்களின் குழந்தைகள், விமானமென்று நினைத்து ஓட்டும் மாருதிகள், ஹோண்டாக்கள். இவற்றின் நடுவே தெருவில் நடக்க முடியாது என்று தீர்மானித்து சற்று தள்ளி உள்ள கடற்கரையில் நடப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள் அவள். கடற்கரையின் ஒரு மூலையில் குடிசைப் பகுதி இருந்தது. கடற்கரை அவர்களின் கட்டணமில்லாக்கழிப்பிடம். கடற்கரையை எட்டியதும் சற்றுத் தொலைவில் இடது பக்கமும், வலது பக்கமும் பலர் மலம் கழிக்க அமர்ந்திருப்பது தெரியும். இரண்டு குழுக்களுக்கும் இடையே உள்ள ஒரு மைல் இடைவெளியில் தான் காலை நேரவேக நடை.

உச்சாணியில் நிறுத்தப்பட்ட ராமனின் உருவல் ஈரடுக்குப் பேருந்தின் மேல் பகுதியில் அமர்ந்து போகும்போது கண்ணை வந்து குத்தியது என்பது தவிர வேறு வகையில் அவளைப் பாதிக்கவில்லை. நாடெங்கும் பரவி வரும் 'ராவொறி'க் கடலின் ஒரு அலை இது என்று அதை ஒதுக்கி விட்டாள். காலை வேளை விறுவிறு நடை

தொடர்ந்தது.காலையில், பக்கத்தில் உள்ள மசூதியிலிருந்து காலைத்தொழுகையின் ஓசைகேட்டதும் எழுந்து விடுவாள். கட்டிடத்தை விட்டு வெளியே வந்து நூறடி நடந்து சீக்கிய குருத்வாரத்தைத் தாண்டும் போது பீடத்தில் வைத்த குருக்ரந்த்ஸாகியின் முன் வெண்தாடியுடன் கண்மூடி ஒரு பெரியார் அமர்ந்திருப்பது கண்ணில் படும். இன்னும் பத்தடி நடந்து வலதுபுறம் திரும்பினால் கடற்கரையை நோக்கிச் செல்லும் சாலை.

டிசம்பர் ஆறாம்தேதி பாபர் மசூதி இடிப்புக்குப்பின் இவள் நடையின் இயல்பே மாறிவிட்டது. சமய நல்லிணக்க ஊர்வலத்தில் இனச்சண்டைகளில் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் இருபது கிலோ மீட்டர் நடை, புறநகர்ப் பகுதி அமைதி காக்க பத்து கிலோ மீட்டர் நடை என்று பலவகை நடைகள். புற நகர்ப்பகுதி அமைதி ஊர்வல நடையின் முடிவில் ஒரு பள்ளியின் பெரிய மைதானத்தில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒரு உயர் போலீஸ் அதிகாரியும் வந்திருந்தார். சமய நல்லிணக்கத்துக்காக இந்துக்கள், முஸ்லிம்கள், எல்லோரும் கலந்து உறவாடி, உணவு உண்ணவேண்டும் என்றார். வேறு எதுவும் தேவையில்லை என்றார். இவ்வளவுதானா சமய நல்லிணக்கம் என்று எல்லோரும் வியந்து பூரித்தனர். விருந்து நன்றாக இருந்தது. நன்றாகச் சாப்பிட்டனர். பேசவும், தீர்மானங்கள் நிறைவேற்றவும் ஒரு மைக் கொண்டு வரப்பட்டது. பலர் பேசினர். அந்தப் புறநகர்ப்பகுதியில் மரங்கள் நட அவர் கம்பெனி உதவும் என்றார் ஒருவர். குடிசைப் பகுதிகளில் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டி கடற்கரையைச் சுத்தப்படுத்த வேண்டும் என்றார் ஒருவர். பூசை மலர்களும், தேங்காய்களும் பிரசாதங்களும் பிளாஸ்டிக் பைகளில் கட்டப்பட்டு கடலில் எறியப்படுவது கடலை மாசுபடுத்தும் என்று பேச ஒருவர் முற்பட்டபோது அது பற்றிக்குறிப்பிட வேண்டாம் என்று கூறினார். நட்புடன் பழகிய போலீஸ் அதிகாரியிடம் இவள் திடீர்க் கோயில்கள், ஆரஞ்சுக் கொடிகள், இவை பெருகும் வேகம் பற்றியும், சூளுரைகளோடு எழுப்பப்பட்டுள்ள

→

ராமனின் உருவப் படங்கள் பற்றியும் சற்று ஆவேசத்துடனும் கவலையுடனும் பேசியிருந் தாள். மைக் இவளருகில் வந்ததும், பக்கத்திலிருந்த நண்பர் ஒருவர் 'சுற்றுப்புறச்சூழல் பற்றி மட்டும் பேசினால் போதும்' என்று கிசுகிசுத்தார். செவியருகே, மனதில் ஒருமுகப்படுத்திய எண்ணங்கள் சிதறிப்போக, குப்பைத் தொட்டிகள் சுத்தமாக இருக்க வேண்டும்' என்றாள் சற்றுப் பலகீனமான குரலில். உடனே ஒருவர், 'பெண்கள் இந்த வேலைக்கு முன் வரவேண்டும்' என்றார். குப்பையில் ஆண் குப்பை, பெண் குப்பை என்றில்லாததால் எல்லோரும் சுத்தப்படுத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று இவள் சொன்னாள் சற்றுச் சூடாக. 'ஓ பெண்ணியவாதி நமக்கிடையே ஒரு பெண்ணியவாதி' என்று முழக்கமிட்டு, 'மன்னிக்க வேண்டும், மேடம்' என்று நாடகபாணி வணக்கத்துடன் அவர் கூறியதும் எல்லோரும் சிரித்தனர். அந்தப் பகுதியின் மிக முக்கியத்தேவை ஒரு ஆம்புலன்ஸ்தான் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான பணம் பரபரவென்று வசூலிக்கப் பட்டது. அடுத்த வாரமே காலரா தடுப்பு ஊசி போடும் உடனடி ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்ற ஆக்க பூர்வமான தீர்மானத்துடன் சமய நல்லிணக்கக் கூட்டம் முடிவடைந்திருந்தது.

சில நாட்களுக்குப்பின் காலை நடையை அவள் மீண்டும் துவக்கினாள். பலர் காலை வேளையில் மெல்லவும் வேகமாகவும், நடந்தபடியோ, ஓடியபடியோ இருப்பர். எதிர்ப்படுபவர்களைத் தலையசைத்தோ முறுவலித்தோ, நமஸ்தே, குட்மார்னிங் என்று கூறியோ, வடக்கே பலகாலம் இருந்தவராக இருந்தால் 'ஜெய்ராம்ஜிகி' என்று கூறியோ முகமன் கூறுவது வழக்கம். முகமன் கூறும் விதம் மாறி விட்டது போல் அவளுக்குப் பட்டது. வினயமான 'ஜெய்ராம்ஜிகி' குப்பதிலாக 'ஜெய் ஸ்ரீராம்' என்று முழக்கமிடுவது போல் சிலர் கூறினர். கடற்கரையை எட்டியதும் ஒரு குழு அமர்ந்து, 'ஹரிபோல் ஹரிபோல் முகுந்த மாதவ கோவிந்த போல்' என்று பஜனை செய்து கொண்டிருந்தது. இரண்டொரு நாட்களுக்குப் பின் இன்னொரு குழு சற்றுத்தள்ளி அமர்ந்து கிறிஸ்தவப் பாடல்களைப் பாடியபடி இருந்தது. ஒரு வாரத்துக்குப்பின் ஐந்தாறு முஸ்லிம் இளைஞர்கள் ஏதோ பாடியபடி நடந்து கொண்டிருந்தனர். எல்லோரையும் விட்டு விலகி நடந்தால் மலம் கழிப்பவர்கள் அருகே செல்ல வேண்டி வந்தது.


சற்றுத்தொலைவில் தென்னை மரங்கள் அடர்ந்த, சிறு தெருக்கள் உடைய வசிக்கும் பகுதி இருப்பது அவள் நினைவுக்கு வந்தது. அங்கு வாகனத்தொல்லையும் இருக்காது. இரண்டு நாட்கள் அங்கு போய் நிம்மதியாக நடந்தபின் மூன்றாம் நாள், இன்னும் சரியாக விடியாத அரையிருட்டில் ஒரு நாய் உறுமியபடி வந்ததும் இவள் தடுமாறி விழுந்தாள். 'ஏ, காலூ, காலூ' என்று கூவியபடி ஒருவர் வந்தார். எழ முயன்று கொண்டிருந்த இவளைப்பார்த்து, 'இந்தத் தெருவின் நாய் இது. நீங்கள் இந்தப்பக்கம் புதிதாக நடக்க வருகிறீர்களோ?' என்று கேட்டார்.

'ஆமாம். பாமர் மசூதி இடிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு தான் வருகிறேன்' என்று மெல்லிய குரலில் கூறியபடி எழுந்து நின்றாள்.

'அதுதானே பார்த்தேன். இங்கே வழக்கமாக நடப்பவர்களை இந்த நாய் ஒன்றும் செய்யாது' என்று விட்டு 'காலூ, நோ' என்று நாயை எச்சரித்துவிட்டு மேலே நடக்க ஆரம்பித்தார்.

அரையிருட்டில் பிடிபடாத அவர் முகம் அவர் பேசிவிட்டு நகர்ந்ததும் சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது. சுற்றுப்புறச் சூழலை வலியுறுத்திப்பேசி, காலரா தடுப்பு ஊசி போடும் உடனடி நடவடிக்கை எடுக்கும் தீர்மானத்தை முன்மொழிந்தவர் அவர்.

செல்ல உறுமலா, காட்டு உறுமலா என்று கணிக்க முடியாத படி மெல்ல உறுமியபடி, சற்றுத் தள்ளி நின்று கொண்டு, அந்த நாய் அவளைப் பார்த்தது.



# மருதானை : தேவை அடிப்படைகள் தீர்க்கப் படுவதே !

மருதானையில் கடந்த மார்ச் ஐந்தாம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்பு அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களில் பொதுமக்களுக்கு பெருமளவு சேதங்களை ஏற்படுத்திய ஒன்றாகும். சனநெரிசலும் கடைத்தொகுதிகளும் கொண்ட மருதானை சந்தியில் இடம் பெற்ற இக்குண்டு வெடிப்பில் இரு போக்குவரத்துப் பொலிஸாரும் 40 அப்பாவிப் பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது தவிர 280 பேரளவில் குண்டுவெடிப்பு இடம் பெற்ற உடன் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் இன்று வரை ஆறு பேரின் நிலை கவலைக்கிடமானதாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சுமார் முப்பது வாகனங்கள் பலத்த சேதத்துக்கும் உள்ளாகியிருந்தன.

நண்பகல் 12.30 மணியளவில் இடம் பெற்ற இக்குண்டு வெடிப்பால் மருதானை நகரமே பெரும் அல்லோல கல்லோலப்பட்டிருந்தது. சாஹிராக் கல்லூரிக்குச் சற்று முன்பாக இது வெடித்தமையால் பெற்றோர்கள் பெரும் பயத்திற்கு ஆளாகி தங்கள் பிள்ளைகளைத் தேடி மருதானையில் குவிய ஆரம்பித்து விட்டனர். எனினும் இதனால் சாஹிராக் கல்லூரி மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையாயினும், குண்டு கொண்டு வரப்பட்ட வாகனத்திற்கருகே வந்த பாடசாலை பஸ் மற்றும் வேனிலிருந்த பிள்ளைகள் கடும் காயங்களுக்குள்ளாகினர். இவர்களில் கோதமி பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இரண்டு மாணவிகளை ஏற்றி வந்த வேனும் சேதத்துக்குள்ளாகியிருந்தது. அதனுள் பாதணிகளையும் சிதறிப்போன புத்தகங்களையுமே பார்க்க முடிந்தது. மேம்பாலத்தோடிருந்த 25க்கு மேற்பட்ட கடைகளும் பலத்த சேதங்களுக்குள்ளாகியிருந்தது.



இச்சம்பவம் தொடர்பாக வந்த தினசரிப் பத்திரிகைகளின் செய்திகளின்படி இக் குண்டுத் தாக்குதல் இலக்கு அமைச்சரொருவரை நோக்கி அதாவது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையை கொல்வதற்காகக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இன்னொரு செய்தியின்படி அன்று நடக்கவிருந்த பாராளுமன்றத்திற்குச் செல்லும் அமைச்சர்களின் கார் அணியை குறிவைத்திருக்கலாம் என்றும் அனுமானம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அனுமானங்களுக்கப்பால் மருதானையில் குண்டு வெடித்ததற்காக காரணமாகச் சொல்லபடுவது பஞ்சிகாவத்தையில் குண்டு கொண்டு வந்த பஸ் ஜீப் ஒன்றுடன் மோதியதால் ஏற்பட்ட சச்சரவும் அதைத் தொடர்ந்து போக்குவரத்து பொலிஸார் துரத்தி வத்ததுமாகும் எனச் சொல்லப்படுகிறது.

வாகன நெரிசலும் மருதானை மேம்பாலத்தின் கீழ் நின்ற பொலிஸாரின் இடைஞ்சலும் குண்டுதாரியை ஒன்றும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளியமையும் குண்டு வெடிக்கச் செய்வதற்கான காரணிகளாக அமைந்துள்ளன. இதனை வைத்துத்தான் ஒட்டு மொத்தமாக சகல பத்திரிகைகளும் இதன் இலக்கு வேறு என்று அனுமானித்து எழுதினர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பொலிஸ் சவச்சாலையில் வைக்கப்பட்டிருதன. வைத்தியசாலையிலும் மிகவும் உருக்குலைந்த நிலையில் பல சடலங்கள் இருந்தன. ஆஸ்பத்திரிக்கு வெளியே நூற்றுக்கணக்கானோர் தங்கள் உறவினர்களின் நிலையறியக் கூடியிருந்தனர். எனினும் அமைச்சர்கள் பலர் மாறிமாறி வந்து பார்வையிட்டதனாலும், பாதுகாப்புக் காரணங்களாலும் இவர்கள் தடுக்கப்பட்டிருந்தனர். அத்துடன் இவ்வாறான பாரிய அழிவுகளின் போது சில கும்பல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பது தங்கள் உறவினரெனக் கூறி அவர்களின் பெறுமதியான பொருட்களை சூறையாடி வருவதாகவும் அவசர சிகிச்சைப் பிரிவுப் பொறுப்பதிகாரி டொக்டர் ஹெக்டர் வீரசிங்ஹ தெரிவித்திருந்தார்.

குண்டுத்தாக்குதல் தொடர்பாக உடனடி விசாரணைகளை பாதுகாப்புத் தரப்பு ஆரம்பித்திருந்தது. குண்டு ஏற்றிவரப்பட்ட பஸ்ஸின் பதிவுபெற்ற உரிமையாளர், அவரிடமிருந்து வாங்கியவர், புலிகளுக்கு வழங்கியவர் என பலரை பொலிஸ் புலனாய்வுப் பிரிவனர் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் புலேந்திரன் எனும் பஸ் உரிமையாளரைத் தேடும் முயற்சியிலேயே இப்போது தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதுதவிர, குண்டு வெடிப்பு நடந்தவுடனேயே புறக்கோட்டைப் பகுதிகளில் பஸ்ஸிற்காகக் காத்திருந்த தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். யூனியன் பிளேஸில் வைத்தும் ஒரு தமிழ் மாணவர் ஒரு குடிகாரனின் சந்தேகப்பார்வைக்கு ஆளாகி நையப்புடைக்கப்பட்டிருந்தார்.. அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் தாக்கியவரை விரட்டி விட்டு உரிய முறையில் அவரை விசாரித்து விட்டு அனுப்பி விட்டனர். இவ்வாறான பல சம்பவங்கள் ஆங்காங்கு இடம் பெற்றிருப்பினும் தமிழ் மக்களுக்கெதிரான எந்த ஒரு தாக்குதல் நடவடிக்கைகளிலும் எவரும் ஈடுபடவில்லை.

இவ்வாறான தாக்குதல்களுக்கு அரசியல் காரணங்கள் பல கூறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் குண்டுகள் வெடிக்கும் வரை இங்கும் குண்டுகள் வெடிக்கும் என்பதே பலரது அபிப்பிராயம் ஆகும். இவ்வாறான நிகழ்வுகளுக்கான அடிக்காரணிகள் தீர்க்கப்படுவது தான் இப்போதைய தேவை. யுத்தச் சூழலில் இவ்வாறான நிகழ்வுகள் சகஜமானவை என அநுருத்தவும் கூறியிருப்பது அழிவுகளையே நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறது.

படங்கள்: எம்.கே.எம்.ஷகீப்

கட்டுரை: ஷப்பா

# ஜான் ஆபிரகாம் : பித்தமும் இயக்கமும்

வெங்கட் சாமிநாதன்

ஜான் ஆபிரஹாமின் மரணம் பற்றியும், அவர் மரணம் சம்பவிக்கக் காரணமான நிகழ்ச்சியின் அபத்தம், அர்த்தமின்மை பற்றியுமான செய்திகள் என்னை எட்டிய போது, திடீரென எதிர் பாராத கணத்தில் யாரோ பொட்டில் அறைந்த மாதிரி உணர்ந்தேன்.

ஜான் ஆபிரஹாம் கற்பித்துக் கொண்ட தோரணையில் குறிப்பிடத்தக்கதும், அர்த்தமுள்ளதுமான அவரது திரைப் படம், 'அக்கிரகாரத்தில் கழுதை'க்கு திரைக்கதை எழுத அவர் என்னைத்தான் தேர்ந்தெடுத்திருந்தார். 1973ன் ஆரம்ப மாதங்களில் தான் அவரை முதன் முதலில் சந்தித்தேன் என்று ஞாபகம். அப்பொழுதிலிருந்து கிட்டத்தட்ட இரண்டு மாதகாலம் இருவரும் ஒன்றாக இருந்தோம், டெல்லியிலும், கும்பகோணத்திலும் பின் சென்னையிலும். அது மிகவும் குறுகிய காலமே. அதன் பிறகு அவரை நான் சந்திக்கவில்லை. அனேகமாக அவரை நான் மறந்து விட்டேன் என்று தான் சொல்ல வேண்டும். கடைசியாக அவரை நான் சந்தித்தது, டெல்லியில், 1976லோ - 77லோ, என் வீடு தேடிவந்து, ''அக்கிரகாரத்தில் கழுதை'' பத்திரிகையாளருக்கு திரையிடப்படுகிறது என்று அதற்கான குறிப்பிட்ட அரங்கத்திற்கு என்னை அழைத்த போது தான். பின்னர் ஒரு நீண்ட 12 வருட கால இடைவெளிக்குப் பிறகு அவர் அகோர மரணமடைந்த செய்தி.

படம் பார்த்த போது அது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், வேதனையையும் அளித்தது. திரைககதை எழுத எனக்கு அவர் தந்த கதைக்கரு சுவாரஸ்யமாக இருந்தது. ஒருவிதத்தில் அது எனக்கு ஒரு சவாலாகவும் முன் நின்றது. அதை ஏதோ கொடுக்கப்பட்ட வேலை, அதை முடித்துக்கொடுக்க வேண்டும் என்ற மனோபாவத்தில் அதை நான் எடுத்துக் கொள்ளவில்லை. அக்கதைக் கருவையும் அவர் கொடுத்த சம்பவத்துணுக்குகளையும் வைத்துக் கொண்டு திரைக் கதையையும் பாத்திரங்களையும் அவ்வாழ்க்கை ஓட்டத்தையும் நான் விஸ்தரித்து மனத்திரையில் விரித்துக் கொள்ள முயன்று கொண்டிருந்த வேளைகளில் அது சுவாரஸ்யமும் மகிழ்ச்சியும் தருவதாக இருந்தது. அது என்னுள் நுழைந்து தன் வளர்ச்சி பெற ஆரம்பித்தது. என்னையறியாமலேயே நானும் அதனுள் புகுந்து கொண்டு விட்டேன் என்று தான், திரைக்கதை எழுதும் போதும், பின்னர் அது பற்றி யோசிக்கும் போதும் தோன்றியது. அது இரு வழிப்பாதை. என்னுள் அதுவும் அதனுள் நானுமாக. இதெல்லாம் 1973ம் வருட சமாச்சாரங்கள்.

நான் திரைக்கதை எழுதியவாறு என்னுள் அக்கதைக்கரு வாழ்ந்தவாறு கடைசியில் திரைப்படம் உருவாகவில்லை. அது வேறு விஷயம். அதையே ஒதுக்கி விடலாம். நான், தான் அதைக் கற்பித்துக் கொண்டவாறு, 1973ல் எனக்குச் சொன்னவாறாவது அது அமைந்ததா என்றால் அதுவும் இல்லை. திரைப்படத்தைப் பார்த்து, அதில் ஜான் என்ற மூலக் கதாசிரியரின் இயக்குநரின் கற்பனை என நாம் தேடிச் செல்வோமானால் அவ்வாறாவது திரைப்படம் அமைந்திருந்ததா எனில் அதுவும் இல்லை. திரையில் ஓடியது முடிவு பெற்ற படைப்பு எனப்பட்ட அகநயமும், நேர்த்தியும் அற்ற கரடுமுரடான ஒரு படைப்பாகத் தோன்றியது. அதில் ஓர் தேர்ச்சியை, பக்குவத்தை திறனை நான் காணவில்லை. பூனா பிலிம் இன்ஸ்ட்டிட்யூட்டிரில் மிகவும் பாராட்டப்பட்ட மாணவர்களில் தங்க மெடல் பரிசு பெற்றவர் எனக் கேள்விப் பட்டிருந்தேன். அத்தகைய ஒரு மாணவரிடமிருந்து தொழில் திறனும் நயமும் பக்குவமும் அறவே அற்ற ஒரு படைப்பு வரும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. யார் தான் எதிர்பார்த்திருக்க முடியும். திரும்பவும் சொல்ல வேண்டும். நான் அடைந்த ஏமாற்றமும் வேதனையும் கொஞ்சமல்ல.

அவர் பூனாவில் படித்த காலத்தில் மணிகௌல், , குமார் ஸஹாணி போன்றோரும்அவர் சக மாணவர்களாக இருந்திருககிறார்கள். இவர்கள், இன்ஸ்டிட்டியூட்டின் சிறந்த படைப்புக்களாக குறிப்பிடப்படுபவர்கள். ஆனால் ஜான் ஆபிரஹாமில், மற்ற இருவரின் செய்நேர்த்திக்கு எதிராக புத்திசாலித் தனத்திற்கும் சாமர்த்தியத்திற்கும் எதிராக ஒரு அப்பாவித் தன்த்தைக் கண்டேன். மணிகௌல், குமார் ஸஹாணி இருவரிடமும் ஒரு செயற்கை பாவமும், வார்த்தை ஜாலமும் பகட்டான கலை ஜம்பங்களும் உண்டு. அவர்களது கலைவிகாசம், இயல்பான மலர்ச்சி அல்ல. ஆண்டி வார்ஹோர் என்னும் அமெரிக்க Pop Artistன் படத்தில் ஒரு சிறுவன் ஒரு ஆரெஞ்சுப் பழத்தை உரித்துக் கொண்டே இருப்பான்...உரித்துக் கொண்டே இருப்பான்...உரித்துக் கொண்டே இருப்பான்... இந்த எட்டடிக்கு இவ்விருவரும் பதினாறு அடி தாண்டும் வைராக்கியம் மேற் கொண்டவர்கள். ஓர் அறையின் சுவரோரத்தில் போட்டிருக்கும் நார்க் கட்டிலின் நடுவில் உட்கார்ந்திருக்கும் பெண் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருப்பாளோ தெரியாது. ஒலித்தடத்தில் என்னென்னவோ சப்தங்கள் இரைச்சல்கள், பாட்டுக்கள் போய்க் கொண்டே இருக்கும். இம்மாதிரியான அதிமேதாவித்தனம், பகட்டு ஏதும் ஜானிடம் கிடையாது. கிடைப்பது ஒரு பக்குவமின்மை, அப்பாவித்தனம், நயமின்மை, அவர்கள் தங்கள் பகட்டையும் அதிமேதாவித்தனத்தையும், பெரிய பெரிய மந்திர வார்த்தைகளில் மார்க்ஸிஸ்டு கோஷங்களாக பூசி சந்தையில் வைப்பார்கள் ஜான் ஆபிரஹாமிடமும் ஸ்தாபனங்களுக்கு எதிரான கண்டன மனோபாவங்கள் உண்டு. ஆனால் அவை போலி மார்க்ஸிஸப் பூச்சுக் கொண்டவை அல்ல. ஜானின் இயல்பான அப்பாவித்;னத்தை அவற்றில் காணலாம். இவை பற்றியெல்லாம் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் சில நாட்கள் முன்பு ஒரு கருத்தரங்கம், ஜான் ஆபிரஹாம் பற்றி நிகழ்ந்தது. அச்சமயம் அந் நிகழ்வின் அங்கமாக ஜானின் மற்ற இரண்டு படங்களை திரையிட்டிருந்தார்கள். ''செரியாண்டே க்ரூர க்ரித்யங்கள்'', ''அம்மா அறியான்'' இரண்டும் அக்கிரகாரத்தில் கழுதைக்குப் பிறகு ஜான் இயக்கிய படங்கள். அவற்றையும் பார்த்த பிறகு எனக்குத் தோன்றிற்று. இக்குறைகள் பலஹீனங்கள் எல்லாம் ஜான் என்னும் மனிதரிடம் காணும் குறைகளைச் சார்ந்தவை என்று எனக்குப் பட்டது. அப்படித்தானே இருக்க முடியும்.

1972ன் கடைசி மாதங்களிலோ அல்லது 1973ன் ஆரம்ப மாதங்களிலோ முதன் முதலாக ஜான் என்னைச் சந்தித்து திரைக்கதை வசனம் எழுதக் கேட்டபோது நாங்கள் இருவரும் முன் பின் அறியாத அந்நியர்கள் முதலில் நான் கதை எழுதுபவன் அல்லன். தமிழில் நான் பிரபலமான எழுத்தாளனும் இல்லை. (தமிழில் பிரபலமான பிரசித்தி பெற்ற எழுத்தாளன் என்று பெயர் வாங்குவது அப்படி ஒன்றும் கௌரவமான கர்வப்பட்டுக் கொள்ளத்தக்க விஷயம் அல்ல என்பது வேறு விஷயம்) என்னைத்தேடி வந்தது ஒரு ஆச்சரியம். அத்துடன் அவர் என்ன மாதிரியான கதையை திரைப்படமாக்க விரும்புகிறார் என்று அவர் கதை சொல்ல நான் கேட்டது இன்னும் ஓர் ஆச்சரியம் இப்படிப்பட்ட கதையையா திரைப்படம் எடுக்க விரும்புகிறார்! தமிழிலா! ஆச்சரியம் தான். தமிழர்கள். இவரைப் பைத்தியம் என்று தான் நினைப்பார்கள் நான் கதை எழுதுகிறவன் இல்லையென்பது முதல் விஷயம். அடுத்து இம்மாதிரியான காரியம் ஏதும் நான் செய்ததில்லை என்று அவருக்கு விளக்கினேன். இப்போது செய்யமேற்கொள்வதற்கு எனக்குத் தகுதி ஏதும் கிடையாது. ஏனெனில் சினிமாத்துறையில் எந்தவிதமான அனுபவமும் எனக்குக் கிடையாது. எனக்குத்தெரிந்ததெல்லாம் எனக்குப் பிடித்த படங்களை, நான் பார்க்க விரும்பும் படங்களை பார்ப்பது தான் என்று அவருக்கு எடுத்துச் சொன்னேன். இத் துறையில் முன் அனுபவமுள்ள கதாசிரியர் இருவர் டெல்லியிலேயே இருக்கிறார்கள். அவர்களை எனக்குத் தெரியும். அவர்களிடம் நான் அழைத்துச் செல்கிறேன் என்றும் ஜானிடம் சொன்னேன். ஆனால் ஜான் மிகவும் பிடிவாதமாக இருந்தார். தனக்கு தகுதி, முன்அனுபவம் இவை பற்றியெல்லாம் கவலை இல்லையென்றும், எங்கள் இருவருக்கும் தெரிந்த பொது நண்பரான பால் ஸகரையா என்னும் மலையாள சிறுகதையாசிரியர், தன்னை என்னிடம் அனுப்பினதே தனக்குப் போதும் என்றும், இனி இது பற்றி வாதிக்கத் தேவையில்லை என்றும் அவர் அப்பேச்சுக்கு ஒரு முடிவு கட்டினார்.

உலகம் தெரிந்த, விபரம் புரிந்த, புத்திசாலியான ஓர் மனிதன், இப்படியா நடந்து கொள்வான்? இந்த ஆள் கொஞ்சம் மறை கழன்ற மனிதனாக இருக்க வேண்டும் என்று எனக்குப் பட்டது. நானும் அப்படிப்பட்ட ஒருவன் தான் என்று எனக்கே அடிக்கடி தோன்றுவதால், ஜான் சொல்கிறபடி செய்து பார்த்தால் என்ன என்று நினைத்தேன். சரி என்று ஒப்புக்கொண்டேன். ஆனால், சில நிபந்தனைகளோடு, கதை காட்சி ரூபமாக எவ்வாறு என் கண் முன் விரிகிறதோ, அவ்வாறே தான் நான் எழுதுவேன் என்றும், அந்நிலையில் இயக்குனராக அவர் இயங்கும் வட்டத்துக்குள்ளும் நான் கால் பதிக்கக் கூடும் என்றும், பின்னர் அவர் தன் இஷ்டம் போல் என் கால் பதிவுகளை என்னமும் செய்து கொள்ளலாம் என்றும் சொன்னேன். அவர் மறுப்பேதும் சொல்லவில்லை.

இச்சந்திப்பிற்குச் சில நாள் கழித்து நான் விடுமுறையில் கும்பகோணம் சென்றேன். ஜானும் கும்பகோணத்திற்கு வந்திருந்தார். அவருடைய மூத்த சகோதரர் கும்பகோணம் பஸ் நிலையம் அருகே டயர் பழுது பார்த்து புதுப்பிக்கும் கடை/பட்டறை ஒன்று வைத்திருந்தார். கும்பகோணத்தில் இருந்த நாட்களில் ஒவ்வொரு நாள் மாலையும் மேலக்காவேரியில் நான் தங்கியிருந்த வீட்டிற்கு வருவார். நான் ஏதும் எழுதியிருப்பின் அவருக்குப் படித்துக் காட்டுவேன். என் எழுத்தில் என் எழுத்துப்போக்கில் அவருக்கு மறுப்பு ஏதும் இருந்ததில்லை. அந்நாட்களில் நாங்கள் பொதுவாக சினிமா பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். தொழில் நுணுக்க விவகாரங்களில் அவர் சொன்னவை பல எனக்கு வேடிக்கையாகவே இருக்கும். சினிமாவே, என்ன லென்ஸ் உபயோகப் படுத்துகிறோம் என்பதில் தான் இருக்கிறது என்பார். இன்னொரு தரம் குமார் ஸஹாணியோ அல்லது மணிகௌலோ யார் என்று ஞாபகமில்லை. ஒவ்வொரு ஷாட்டையும் பதிவு செய்து கொள்ளும் சிரத்தை பற்றிச் சொல்வார். அதில் அவர் மிகவும் வியந்து சொன்னது காமிராவுக்கும், பாத்திரத்திற்கும் இடையே உள்ள தூரத்தை டேப் வைத்து அளந்து அங்குலம் வரை திட்டவட்டமாக தீர்மானித்துக் கொள்வார் என்று. இவை எனக்கு வேடிக்கையாக இருந்தாலும் மறுத்து மாறு அபிப்பிராயம் சொல்லும் தகுதி எனக்கு இல்லையென்று விட்டுவிடுவேன். அவர் வியப்பை நான் பகிர்ந்து கொள்ளவில்லையென்பதை மாத்திரம் அவருக்கு உணர்த்தி விடுவேன். என்னவேலை இதெல்லாம்...? உங்கள் திறமையை ஏன் இப்படி வீணாக்குகிறீர்கள்? விட்டு ஒழித்து விட்டு வாருங்கள். நாம் இருவரும் சேர்ந்து ஏதாவது செய்யலாம் என்பார். என்மீது இடக்கும், நான் சுமந்து நிற்கும் பொறுப்புக்களைச் சொல்லி நான் தட்டிக்கழித்து விடுவேன். ஜானின் மூத்த சகோதரருக்கு என்னைப் பற்றிய கவலைகள் இருந்தன என்பதை என்னால் உணரமுடிந்தது. ஜானின் பிழைக்கும் சாமார்த்தியம் பற்றிய நம்பிக்கை இழந்தவராகவும் என்னையும் தந்தாரியாக்கிவிடப் போகிறானே தன் தம்பி என்றும் கவலை வாயப்பட்டவராகவும் என்னால் உணர முடிந்தது. வெளிப்புறப் படப்பிடிப்புக்கு ஒரு நல்ல கிராமம் தேர்ந்தேடுக்கவேண்டும். சுற்றுப்புறங்களைப்பார்க்க வேண்டும் என நாங்கள் கிளம்பியபோது அவர் நானும் வருகிறேன் என்று தன் காரை எடுத்துக் கிளம்பி விட்டார். ஒரு நாள் அருகில் இருந்த பந்த நல்லூர் போய் வந்தோம்.


பின் ஓர் முறை படத்திற்கு யார் பணம் கொடுப்பார்கள் என்று சுற்றிவரலாம் வாருங்கள் என்றார். இந்தப்பயணம் எங்களை முதலில் திருவனந்தபுரத்திற்கும் பின் நாகர்கோயிலுக்கும் இட்டுச் சென்றது. திருவனந்தபுரத்தில் சித்திராஞ்சனி ஸ்டுடியோவுக்குப் போனோம். அது பூட்டிக்கிடந்தது. அடூர் கோபால கிருஷ்ணனைப்பற்றி விசாரித்தார். அவர் ஊரில் இல்லை. வேறு என்ன செய்வது என்பது பற்றி அவருக்குத் திட்டங்கள் இல்லை. இருட்டிக் கொண்டிருந்தது. சரி வாருங்கள் நாகர்கோயில் போகலாம். சுந்தரசாமியைப் பார்க்கலாம் என்று பஸ் ஸ்டான்டிற்குப் போனோம். அன்று பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள் என்று அப்போது தான் தெரிந்தது. பக்கத்தில் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் பஸ் ஸ்டான்டிற்கு வந்தோம். எல்லாச் செலவுகளும் என்னதாகவே இருந்தது. கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து, ஜான் நேரம் கிடைத்த போதெல்லாம் அவ்வப்போது 1/2 மணி நேரம் என்னைத் தனியாக விட்டு விட்டு ''இதோ வருகிறேன்'' என்று சொல்லிப்போவார். திரும்பி வரும்போது கஞ்சா அடித்திருந்தது அவர் நடையிலும் அவர் முகத்திலும் தெரியும். அண்ணனிடமிருந்து வாங்கியிருந்த பணத்தில் கஞ்சா அடிக்கும் செலவு அவரது. மற்றசெலவுகள் எனது. பஸ்டான்டில் வேலை நிறுத்தம் அன்று இரவு 12 மணிவரை தான் என்றும், ஆனால், நாகர்கோயில் செல்லும் முதல் பஸ் காலை 4மணிக்குத்தான் என்றும் தெரிந்தது. எனவே மிகுதி நேரத்தை பஸ் ஸ்டான்டிலேயே கழிப்பது என்று தீர்மானித்தோம்.

**அம்ரித் கங்கார்: கட்டக்கின் மாணவர்கள் அவருடைய பணியை சுவிகரிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார்களே?**

**ஜான்:** சுவீகரிக்க வேண்டுமா? அது அவசிமில்லாத ஒன்று. நான் குரோசவா ஒஸு (OZO) புனுவல், அந்தோனியானி, ஃபெலினி போன்ற எல்லா மகத்தான கலைஞர்களாலும் பாதிக்கப்பட்டுள்ளேன் என்று நினைக்கின்றேன். நிச்சயமாக எல்லோராலும் பாதிப்படைந்திருக்கிறேன். ஆனால் அவர்களால் பாதிப்படைந்து பின்பற்றுவது என்பது ஒரு போதும் கூடாது. நான் நிச்சயம் என்னுடைய சுயமான படைப்பை உருவாக்க வேண்டும். என்னுடைய பாணி என்று ஒன்று நிச்சயம் வேண்டும். நான் எதனாலும் பாதிக்கப்படலாம். ஒருவர் எல்லாவகைப் படங்களாலும் பாதிக்கப் படுவதைப்போல் நான் எந்தப்படத்தினாலும் பாதிக்கப்படலாம். ஒருவன் தனக்கென்று சுயமான வடிவத்தை உருவாக்க வேண்டும். அவருடைய படங்களில் அவனுடைய பாணி இருக்க வேண்டும். நான் உணர்வது இப்படித்தான்.

மேலும் என்னுடைய விஷயத்தை அழுத்தமாகச் செய்வதற்கு குறிப்பிட்ட இடங்களில் நான் மிகை உணர்ச்சியோடு செயல்படுகிறேன். அப்படி மிகை உணர்ச்சியோடு செயல்படுவதில் எவ்வித தவறும் கிடையாது.


*நன்றி: அகவிழி*



அடுத்த இதழில் முடியும்



கைப்பற்றிய காவலரண்களைப் பார்வையிடும் புலிகள்



தாக்குதல் திட்டங்களைப் பார்வையிடும் புலிகள் இயக்கத் தளபதிகள்

# ஜெனிவா பிரகடனத்தை பின்பற்றுங்கள்!

'இன்று நாட்டிலே நிலவுகின்ற யுத்த அழுத்தத்தின் காரணமாக சாதாரண பொது மக்கள் தாக்குதல்களுக்கு உள்ளாவதும் சில வேளைகளில் வேண்டுமென்றே தாக்கப்படுவதும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இனப் பிரச்சினைக்கு நீதியானதொரு அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எமது கோரிக்கையோடு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரும் எப்போதும் பொது மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதில் அக்கறை காட்ட வேண்டுமென்பதை நாம் தொடர்ச்சியாகக் வலியுறுத்தி வந்துள்ளோம். இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் பொது மக்கள் தாக்கப்பட்ட போது நாம் வீதிகளில் இறங்கி அதற்கெதிரான கண்டனங்களைத் தெரிவித்துமுள்ளோம். அது ராஜினி திராணகமவாயினும் சரி அல்லது கிருஷாந்தி குமாரசுவாமியாயினும் சரி, யார் தாக்கப்பட்டாலும் சரி கொலைகளுக்கும், யுத்தத்துக்கும் எதிரான, சமாதானத்தை விரும்புகிற இந்நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் இவற்றைக் கண்டிப்பதற்கான தார்மீகக் கடமை எமக்கிருப்பதாக நாம் கருதுகின்றோம். இந்த அடிப்படையில் தான் நாம் கடந்த ௫ஆம் திகதி நன்பகல் மருதானை சந்தியில் வெடிக்க வைக்கப்பட்ட குண்டினால் மூன்று பாடசாலை பிள்ளைகள் உட்பட ௮ பேர் கொல்லப்பட்டும் ௫௦க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தைகுறித்தும் எமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு குறிப்பாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதே வேளை அரசாங்கத்தையும் ஜெனிவா பிரகடனத்தின் அடிப்படையில் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தாதிருக்கும்படி கோருவதற்கு முன் வந்துள்ளோம். இதற்கான ஓர் அமைதியான மௌன எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றினையும் ஒழுங்கு செய்துள்ளோம்.' இவ்வாறு மேர்ஜ் அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூழல்...

போன்றன சிரேஷ்ட மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்ட நாடகங்களாக விளங்குகின்றன. இந் நாடகத் தயாரிப்பாளர்களிடம் பரந்தடிப்படையில் பின்வரும் நோக்கங்கள் காணப்பட்டன.

1. ஈழத்து நவீன தமிழ் நாடக ஓட்டத்துடன் மட்டக்களப்பின் அரங்கையும் இணைத்து வளர்த்துச்செல்ல வேண்டுமென்னும் நோக்குடையவர்களாகவும் அதனை பாடசாலை நாடகங்களின் மூலமே முன்னெடுத்துச் செல்ல முடியுமென்னும் நம்பிக்கையுடையவர்களாகவும் காணப்பட்டனர்.
2. மட்டக்களப்பின் சமூகப் பிரச்சினைகள் பலவற்றையும் புலப்படுத்தி அதன் மூலம் சமூக மாற்றத்தையேற்படுத்த பாடசாலையரங்கை சிறந்ததெனக் கையாளுதல்.
3. நாடகப் போட்டிகளுக்கு தங்கள் பாடசாலையைத் தயார்படுத்தும் நோக்குடன் நாடகங்களைத் தயாரித்தல்.

இந்நாடகத் தயாரிப்பாளர்கள் தங்களை மட்டக்களப்பின் நவீன நாடகத் தயாரிப்பாளர்களாக இனங்காட்டிக்கொண்டனர். இதனால் நவீன நாடகம் தொடர்பான ஒரு புலமைத்துவச் செருக்கு அவர்களிடம் வேரூன்றியிருந்தது. இவர்களின் நாடகத் தயாரிப்புகளின் ஊடாக நவீன நாடகமென்றால் என்ன? அதனை நாம் ஏன் பயன்படுத்த வேண்டும்? பாடசாலை அரங்கின் எதிர்கால இலக்கு என்ன போன்ற விடயங்களில் இவர்களிடம் கருத்துத்தெளிவின்மை காணப்படுவதை அறியக் கூடியதாக இருந்தது.

சிரேஷ்ட மாணவர்கள் என நாம் கருதுவோர் 12-20 வயதுக்கு உட்பட்ட கட்டிளமைப்பருவத்தினர் என உளவியலாளர் கருதுகின்றனர். இது பிள்ளைப் பருவத்தில் இருந்து வாலிபத்துக்கு மாறும் காலகட்டமாகும். இப்பருவத்தில் சிக்கலான தூண்டல், பிரச்சினை, அசௌகரியங்கள் என்பன இவர்களுக்கு ஏற்படுகின்றன. தங்கள் உடல் உறுப்புக்கள் வளருதல் வளராமை பற்றிய கவலை, பாலியல் அடிப்படையில் உருவாகும் காதல், திருமணத்தில் விருப்பம் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கத் தொடங்குதலும் தங்களின் எதிர்காலத்துக்கு விடுக்கப்பட்டு உள்ள சாவால்களை நினைத்து கவலை கொள்ளுதலும், தங்களை வளர்ந்தவர்களாகக் காட்டிக்கொள்ளுதலும் ஏனையவர்களின் தலையீடின்றி வாழ முற்படலும், தங்களின் ஆளுமை தொடர்பாக கவலை கொள்ளுதலும் போன்ற முக்கியமான பிரச்சினைகளை இப்பருவத்தினர் உணர்ந்து கொள்வர்.

இக்கட்டத்தில் ஆலோசனைக் கூறல், தொழில் வழிகாட்டல், சிறந்த கற்பித்தல் முறையைப் பின்பற்றல் போன்றவற்றின் மூலம் மாணவர்களின் நடத்தையை ஒழுங்கமைக்க முடியும்.

ஆனால், இன்றைய பாடசாலை கற்பித்தலில் கற்றலில் முதன்மையான இடத்தை வகிக்கும் மாணவர்களும், பொருளாதார சௌகரியம் உடைய மாணவர்களும், முக்கியத்துவப் படுத்தப்படுவதும், சமூக அந்தஸ்து அற்ற மாணவர்களும் திறமையற்ற மாணவர்கள் என தாங்கள் கருதும் மாணவர்களும் புறக்கணிக்கப்படும் நிலையும் ஏற்படுகின்றது.

இக்காலகட்டத்தில் சிரேஷ்ட மாணவர்களுக்காகத் தயாரிக்கப்படும் நாடகங்கள் மாணவர்களை மேற்குறித்த பிரச்சினைகளில் இருந்து விடுவித்து அவர்களை வளர்த்துச் செல்ல வேண்டிய தேவைக்குள்ளாக்குகின்றது. நாடகத் தயாரிப்புக்கான வேலைத் திட்டத்தின் பல்வேறு நிலையில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளின் போது இவ்விலக்கினையடையலாம். இக்கண்ணோட்டத்துடன் எமது பாடசாலையரங்கை நோக்கும் போது அதன் அரங்கச் செயற்பாட்டின் போதாமையை உணர்ந்து கொள்ளலாம். இருந்தும் இக்கால பாடசாலை நாடகத் தயாரிப்பாளரான தவராசாவின் செயற்பாட்டில் சூழல் பற்றிய விழிப்புணர்வு இருந்தது. இதை ஜெயசங்கரிலும் உணரத்தக்கதாக விருந்தது. மேற்குறிப்பிட்ட பின்னணியில் தான் நாம் பாடசாலை நாடகங்களின் முழுமையான வளர்ச்சியை எட்ட வேண்டியுள்ளது. இது ஈழத்து தமிழ் அரங்கப் பரப்பில் கூட இன்னும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட வில்லை.

மேற்குறித்த பின்னணி மட்டக்களப்பின் பாடசாலையரங்க வியக்கத்தின் தொடக்க நிலையையே சுட்டி நிற்கின்றது. பாடசாலை அரங்கின் வெற்றி அவ்வரங்கின் நோக்கத்தையுணர்ந்து அவ்வரங்க இயக்கத்தில் இணைந்துள்ளோரால் முன்னெடுக்கப்படும் போதே சாத்தியப்படும். பிரக்ஞைபூர்வமாக பாடசாலை அரங்கைக் கையாள்வோர் தங்களின் நாடக தயாரிப்புக்கான பயிற்சி (Practice for Producing Drama), நாடகப் பட்டறை (Drama work Shop) போன்றவற்றில் பாடசாலை ஆசிரியர்களையும், அரங்கியல் ஆர்வமுள்ளவர்களையும் இணைத்து அவர்களுக்கும் அப்பயிற்சிகளை அளிப்பதன் மூலம் எமது பாடசாலை அரங்கை சூழல் மையக்கல் வியரங்காக வளர்த்தெடுக்கலாம். இது பாடசாலைக் கல்வியியல் செயற்பாட்டின் மூலம் ஆளுமை மிக்கதொரு எதிர் காலத் தலைமுறையினரை உருவாக்க உதவும்.

## மலையக...

ஐ.தே.கவின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு நுவரெலியா பிரதேச சபையின் தலைவராக இருந்து கொண்டு; எனக்கு அரசியலும் கிடையாது, கட்சிசார்பும் கிடையாது, அரசியல் அபிலாசையும் கிடையாது, என்னை இந்நிலைக்கு தள்ளியது நீங்களே எனக் கூறுவதை புரிந்து கொள்வதா. 200 ஆண்டுகள் பல்லிழித்து வாழ்ந்து விட்ட சக்திகளையும் 50 ஆண்டு சுதந்திர நாட்டின் அடிமைத்தனத்தை கட்டிக்காத்த சக்திகளையும் மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஆதரித்துக்கொண்டு ஆதிக்க சக்திகளிடம் பல்லிழித்து வாழ்கின்ற மக்களையும் வாழவைக்கின்ற சக்திகளுக்கு துணைபோவதா?

காத்திரமான கேள்விகளை, சந்தேகங்களை அல்லது விவாதத்துக்கான அம்சங்களை மண்போட்டு மூடிவிட்டு ஆத்திரப்படுகிறார் மலையக பட்டதாரிகள் ஒன்றியத்தலைவர் மா.செ. மூக்கையா அவர்கள்.

''பேராசிரியர் மூக்கையாவின் அழைப்பை ஏற்று பேராசிரியரை பார்ப்பதற்காகவே கண்டிக்கு ஓடோடிச் சென்றேன் என்று கூறும்'', 'பட்டதாரிகள்' வேண்டுமானால் இன்னொரு 200 வருடம் பல்லிழித்து வாழ முனையலாம். ஆனால் நாளைய உலகை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவும் இருத்தலுக்கும், வாழ்தலுக்கும் போராடவும், மக்களை புடம் போடவும் விரும்புகின்ற ஒருவர் சந்தர்ப்பவாத சக்திகளை, அமைப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியுமா என்ன?

மலையக பட்டதாரிகளின் வரலாற்றுப் பாத்திரம் குறித்த விவாதத்துக்கான முன்னுரையாகவும் ஒரு ஆரம்பமாகவுமே இக்குறிப்புக்கள் எழுதப்படுகிறது.

இதை எதிர்வினையாகவன்றி அறிவுபூர்வமாக, அர்த்தபூர்வமாக முன்னெடுக்க மலையக அறிவுத்துறையினர் முன்வருவார்களேயானால் வரவேற்கத்தக்கதே.

## குடும்ப...

இவ் அங்கவீனப் பெண்கள் மட்டுமின்றி, அனைத்துப் பெண்களும் தமக்கு சட்டத்தினால், விபச்சாரம் சட்ட ரீதியாக்கப்பட்ட போதும், தம்மை ஏற்காத, வித்தியாசக் கோணத்தில் தம்மைப் பார்க்கும் சட்டத்தையும் பொலிசாரையும் நோக்கி அவர்கள் கேள்வியெழுப்ப மறக்கவில்லை. பொலிசாரினால் எவ்விதப் பாதுகாப்பும் கிடைக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். ஆண்கள் சட்டத்தினால் பல்வேறு காரணங்களுக்காக மன்னிப்பளிக்கப்பட்டு விடுகின்றனர் என்கின்றனர் இவர்கள். குடிபோதையில் இருத்தல் மிகப்பெரிய மன்னிப்புக்கான ஓர் காரணமாகும் என்கின்றனர். காதுகேளாத ஒரு பெண் ''நான் அவனது கொடுமைகளை சகித்துக் கொள்ள முடியாது. எனது பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு புறப்படுகையில், அவன் தன் கைகளில் உள்ள பைபிளைக் காட்டி என்னை சமாதானப் படுத்தத் துணிந்தான்'' என்றார். சமூகத்தின் கட்டமைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு பலங்களும், பெண்களின் பலவீனங்களாகியதை மறுப்பதிற்கில்லைத் தான்.

இவ்வாறான விவரணப்பட்ங்கள் பரவலான பார்வையாளர்கள் மட்டத்தில் கொண்டு செல்லப்படுவதற்கு இவற்றின் தயாரிப்பாளர்களும்/ இயக்குனர்களும், பெண்கள் அமைப்புக்களும் அதிக கவனம் கொள்ளுதல் அவசியம் என்பது, அன்று சமூகமளித்த பார்வையாளர்களின் எண்ணிக்கையைப் பார்த்த போது சொல்லப்பட வேண்டிய விடயமாகிறது.

ரத்னா




# நந்தவனத்து ஆண்டி ஜி. நாகராஜன்

-ரஞ்சகுமார்




'குறத்தி முடுக்கு' என்னும் நாவலை முதன் முதலில் வாசித்த போது கட்டைக் காற்சட்டை போடுகின்ற பருவம் எனக்கு. தலையணை சைஸ் புத்தகங்களையே நாவல்களாக அறிந்திருந்த எனக்கு, சினிமாப் பாட்டுப் புத்தகம் அளவிலான 'குறத்தி முடுக்கு', 'நல்ல நாவல்' என்னும் சிபாரிசுடன் வாசிக்கக் கிடைத்தது. அது நாவல் தானா என்பதில் எனக்குள்ள சந்தேகம் இப்போதும் தீரவில்லை. ஆனால் அது 'நல்லது' என்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. அதை வாசித்தபோது எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் நல்ல நினைவில் இருக்கிறது. 'இப்படியும் கூட நடக்கிறதா?' என்று பலமுறை எனக்குள் கேள்விகளை எழுப்பிச் சென்றது அந்தக் கதை.

'குறத்தி முடுக்கு' முதன் முதலாக புத்தக உருவில் வெளிவந்த ஜி.நாகராஜனின் படைப்பு. எனினும் அவர் சிறுகதைகளையே முதலில் எழுத ஆரம்பித்தார். 'அணுயுகம்' அவரது முதலாவது சிறுகதை. ஒன்பது சிறுபகுதிகளாக வனையப்பட்ட அந்தச் சிறுகதையின் முதல் பகுதி 'டாக்டர் பியூஜிடா ஒரு சிந்தனையாளன்' என்கின்ற ஒற்றை வரி மட்டுமே. கதையை வாசித்து முடித்த பின்னர் திரும்பவும் அந்த வரியை வாசிக்க நேர்கையிலே தான் ஜி. நாகராஜனின் தரிசனம் எமக்கும் புலப்படும். உலகத்தை கடைத்தேற்ற முயல்பவர்கள் மீது அல்லது அவ்வாறு நடிப்பவர்கள் மீது முழுவீச்சுடன் பாய்கின்ற நையாண்டி அந்தக் கதை. இது தான் ஜீ. நாகராஜனின் படைப்புலகம். அந்த முதல் கதையே இதற்கு தகுந்த நிரூபணம்.

பெரும்பாலான எழுத்தாளர்களின் முதல் கதையாக அவர்களது சுய அனுபவங்களே அமைந்து விடுவது இயல்பு. ஆனால் இங்கு அவ்வாறல்ல. ஜீ. நாகராஜனது அறிவாற்றல் மீதான அவரது எதிர்வினை என்பன ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டவை. ஆனால் அவை அவரது அனுபவங்களை இரண்டாம் இடத்துக்கு பின்தள்ளி விடவில்லை. இரண்டும் ஒன்றாகக் கலந்து விடுகின்றன. அவரது அனுபவங்கள் வித்தியாசமானவை. இவ்வாறான அனுபவ தளங்களுக்குள் புகுந்து பார்ப்பதை பெரும்பாலானோர் கூசி ஒதுக்கி விடுவர். அவர்கள் வாழ்க்கையின் அழகுகள் பற்றியே பேசுவர். வாழ்க்கை ஒரு நந்தவனம் என்றே சித்திரித்துக்காட்ட முற்படுவர். ஆனால், ஜீ. நாகராஜன் அந்த நந்தவனத்தினுள் கோவணத்துடன் எக்காளமாக கேலிச்சிரிப்புச் சிரித்துக் கொண்டு திரிகின்ற ஒரு ஆண்டி. அசிங்கமான விடயங்களையே விடாப்பிடியாகத் துரத்துகின்ற ஒரு ஆண்டி. ஞானி!

எனக்கு ஒரு சந்தேகம். நடுத்தரவர்க்க பிராமண குடும்பத்தில் பிறந்த ஜீ. நாகராஜன், 'கணக்கு வாத்தியார்' என்னும் மடிப்புச்சால்வை தரும் கௌரவத்துடன் காணப்படும் ஜீ. நாகராஜன், இவ்வாறான அனுபவங்களை எங்கே பெற்றார்? போதாக் குறைக்கு எழுத்துக்கும் எழுத்தாளனுக்கும் இடையே காற்றுக்கூட புகக் கூடாது என்று கற்பூரம் அணைத்து சத்தியம் செய்த சில எழுத்தாளர்கள் வாழும் உலகில்தான் நானும் வாழ்கின்றேன். அப்படியானால் ஜீ. நாகராஜனும் அவரது படைப்புலக மாந்தர் வாழும் வாழ்க்கையைத் தான் தானும் வாழ்ந்தவரா?

'ஆமாம்' என்று அடித்துச் சொல்கிற மாதிரி அவரைப்பற்றி ஒரு குறிப்பு வாசித்திருக்கிறேன். ஜீ. நாகராஜன் ஒரு நவீன அருணகிரிநாதர், என்று கூறாமல் கூறியிருந்தார் அந்த கட்டுரையாளர். 'ஐயையோ அப்படியெல்லாம் இல்லை. அப்பாவி மனிதன் ஜீ. நாகராஜன்' என்று இன்னொருவர் பதறியடித்துக் கொண்டு பதிலும் எழுதியிருந்தார். பூரண விபரங்களைத் தருமளவுக்கு யார், எங்கே எழுதினார்கள் என்பனவெல்லாம் இப்பொழுது நினைவில் இல்லை. ஆனால் இது ஜீ. நாகராஜன் சம்பந்தமான இரண்டாவது அனுபவம் எனக்கு!

நானும் ஒரு 'வாசகன்' என்று உணர்வு வந்த பிறகு 'நாளை மற்றுமொரு நாளே' என்னும் கதை வாசிக்கக் கிடைத்தது. அது ஒரு இலட்சணமான நாவல். ஜீ. நாகராஜனுக்கு நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு இடம் ஏற்படுத்திக் கொடுத்தது இந்த நாவல்தான்.

நாவலிலிருந்து ஒரு உரையாடல்:

''தொழிலாளி வர்க்கத்தை யாராலும் அடக்கி ஒடுக்க முடியாது. ஹிட்லர் அடக்கப் பார்த்தான், முடியலே. முசோலினி பார்த்தான், முடியலே. சர்ச்சில் பார்த்தான் முடியலே...

''ஆனா, ஸ்டாலின் பார்த்தான், முடிஞ்சுது....''

நாவலிலிருந்து இன்னொரு பகுதி:

'தரகர். அந்தோனி தனது அமெரிக்க சித்தாந்தத்தை மாற்றிக் கொண்டார்: சமுதாயத்திலுள்ள ஒரு தேவையைப் புரிந்து கொண்டு அதனைப் பூர்த்தி செய்வதன் மூலமே பொருளீட்ட முடியும் என்பது உண்மையே ஆயினும், கண்ணுக்குப் படுகின்ற எந்தத் தேவையையும் பூர்த்தி செய்ய முற்படுவது ஆபத்தில் கொண்டு விடலாம் என்று அவர் புரிந்து கொண்டதே அம்மாற்றம்.'

இவ்விடத்தில் சில தகவல்களைத் தருவது பொருத்தமானது;

ஜீ. நாகராஜன் ஆரம்பத்தில் தீவிரமான கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர். கட்சிப் பணி காரணமாக ஒருதரம் அவரை வேலையை விட்டு நீக்கியிருக்கிறார்கள். போராட்டங்களில் கலந்து கொண்டு ஒரு தடவை சிறை சென்றிருக்கிறார். ஆனால் அறுபதுகளின் ஆரம்பத்திலேயே கட்சியிலிருந்து அதிருப்தி காரணமாக விலகிவிட்டார். பின்பு மார்க்சிய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தார். காந்தியத்தின் பாலும் அவர் கவனம் திரும்புகிறது.

ஆனால் ராமராஜ்ஜியம் பற்றிய கனவுகள் அவருக்கு இருக்கவில்லை. உதாரணமாக, காந்தியைப் பற்றி அவர் எழுதியதாக கருதப்படும் 'கிழவனின் வருகை' என்னும் சிறுகதை பின்வருமாறு முடிவடைகிறது.

'அவ்வுருவம் கூறியபடியே வாளால் கிழவனின் தலையை வெட்டியெறிந்து விட்டு, ஈட்டியை நேர் செங்குத்தாகப் பிடித்து நின்றது. அப்போது தான் ஆயிரமாயிரம் பேர்கள் பலவகை மாமிசங்களையும் தங்களது முட்கரண்டிகளைக் கொண்டு குத்தியெடுத்து வாயிலிட்டு மென்று கொண்டிருந்தனர். அப்போது தான் சில வைத்தியர்கள் ஒரு பிணத்தினுள் பிராணவாயுவைச் செலுத்தி அதனை மீண்டும் நினைவு பெற்றெழச் செய்ய முடியுமா என முயன்று கொண்டிருந்தனர். அப்போதுதான் சில விஞ்ஞானிகள் மனிதத் திட்டத்தையும் மீறித்தோன்றிவிடும் கருவைச் சிதைக்க இலட்சிய முறையை ஆராய்ந்து கொண்டிருந்தனர். அப்போது தான் தகப்பனைக் கொன்றுவிட்ட இளைஞன் ஒருவன், தான் கொன்றது உண்மையில் தன் தகப்பன் இல்லையென்று நிரூபிப்பதற்காக, தன் தாய் ஒழுக்கம் கெட்டவள் என்று கோர்ட்டில் நிரூபித்து முடித்திருந்தான். அப்போது தான்.... அப்போது தான்..... அப்போது தான்....'

நவீன தமிழிலக்கியப் பரப்பில் சிறுகதை இலக்கியம் வளமானது. இதற்கு தனது துணிச்சலான அவதானங்களைக் கொண்டு எழுதிய கதைகள் மூலம் மேலும் ஒரு

→19

# சிறுகதைகளும் கதைஞரின் அரசியலும்

-நட்சத்திரன் செவ்விந்தியன்




*மலையக சிறுகதைகள்*

*(33 மலையக எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு)*

*தொகுப்பு:- தெளிவத்தை ஜோசப்*

*வெளியீடு:- துரைவி, 85, இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை, கொழும்பு -13. விலை:- இந்தியரூபாய் 95.00*
*முதற்பதிப்பு:- மாசி -1997*
*பக்கம்:- 322*

கோ. நடேசய்யரிலிருந்து இன்றைய இளைய மலையக எழுத்தாளர் வரையான 33 மலையக எழுத்தாளர்களின் 33 சிறுகதைகளை உள்ளடக்கி இத்தொகுப்பு வந்துள்ளது.

இன்று உயிரோடு இருப்பவர்களில் தெளிவத்தை ஜோசப்பே இதனை தொகுப்பதற்கு பொருத்தமும் தகுதியும் உடையவர் என்பதில் சந்தேகமில்லை. கோ. நடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை, என்.எஸ்.எம். ராமையா முதலியவர்களின் மரபில் வந்த ஜோசப் தனது எழுத்தில் எந்த சமரசமும் செய்துகொள்ளாதவர்.

தொகுப்பின் அடிப்படையாக, மலையக எழுத்தாளர்களால் எழுதப்பட்டதாக இருக்கவேண்டுமென்பதோடு களம் ஏதோவகையில் மலையகம் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கவேண்டுமென்பதையும் தொகுப்பாளர் கவனத்தில் கொண்டிருக்கிறார் போலும். இதனால் சிறுகதையின் தரத்தைவிட உள்ளடக்கத்தை மட்டும் அதிக முக்கியத்துக்குள்ளாக்கிய அபத்தம் நடைபெற்றுள்ளது.

சிறுகதை என்ற வடிவத்தை ஒருவர் புரிந்து அதனை வெற்றிகரமாகக் கையாண்டுள்ளாரா என்கிற தல்ல, மலையகத்தைச்சேர்ந்த ஒருவர் 'சிறுகதை' என்ற பெயரில் என்ன எழுதியிருந்தாலும் அதனைப்போட வேண்டிய நெருக்கடி இதனைத் தொகுத்தவருக்கு இருந்திருக்கிறது. இதனால் தான் சிறுகதைக்குரிய அடிப்படைத்தகுதிகள் கூட இல்லாததும் கதைப்பின்னல், திடீர்த்திருப்பங்கள் , மிகை நடிப்புத்தனம் முதலியன நிரம்பியதுமான தமிழ்ச்சினிமா பாணியில் அல்லது பிரச்சாரப் பாணியில் எழுதப்பட்ட கதைகளும் இடம் பெற்றுள்ளன.

உ+ம், மு. நித்தியானந்தனின் 'ரத்தங்கள் மண்ணில் கலப்பதில்லை', அந்தனி ஜீவாவின் 'புருட்சலட்', பொ. கிருஷ்ணசாமியின் 'மன்னிப்பா உனக்கா' என்பன.

இத்தொகுப்பிலுள்ள சிறந்த சிறுகதைகளாக கோ. நடேசய்யரின் 'திரு இராமசாமி சேர்வையின் சரிதம்', கே. கணேசின் 'சத்தியபோதிமரம்', என். எஸ்.எம். ராமையாவின் 'தீக்குளிப்பு' ஆகிய மூத்த எழுத்தாளர்களினது கதைகளையும், தெளிவத்தை ஜோசப்பின் 'பழம் விழுந்தது' பரிபூரணனின் 'பிரசவக்காசு' ஏ.பி.வி. கோமசின் 'அவலம் ஆகிய இடைப்பட்டகால எழுத்தாளர்களினது கதைகளையும்' அல் அஸூமத்தின் 'வெள்ளை மரம்', ஆனந்தராகவனின் 'நண்பனே! என்றும் உன் நினைவாக...', கேகாலை கைலைநாதனின் ('ஜோதிக்குமார் - நந்தலாலா ஆசிரியர்) 'தண்ணீர் வற்றிடும் குளங்கள்' ஆகிய இளைய எழுத்தாளர்களின் கதைகளையும் கூறலாம்.

பெரும்பாலான மலையக எழுத்தாளர்களைப் பாழாக்கிய, பாழாக்கி வருகின்ற பெருமை வீரகேசரி, தினகரன், தினபதி போன்ற வணிகரீதியாக பிற்போக்குப் பத்திரிகைகளையே சாரும். பேராசிரியர் கைலாசபதி தினகரனின் ஆசிரியராக இருந்தது போன்று ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர பெரும்பாலும் இப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகவும், இலக்கியப் பகுதி ஆசிரியராகவும் வருகிறவர்கள் அதற்குரிய தகுதியோ, திறமையோ அற்றவர்கள். மிக மோசமான வளர்ச்சியடையாத ஒரு சிறுகதை-மரபையே இப்பத்திரிகைகள் உருவாக்கின; உருவாக்கி வருகின்றன. மலையக எழுத்தாளர்களது பிரசுர களமாகவும் இப்பத்திரிகைகளே இருக்கின்றன. சிறந்த சிறுகதையாளர்களாக, எழுத்தாளர்களாக தாங்கள் வருவது எவ்வளவு திறமையர்க வீரகேசரி, தினகரன் முதலிய பத்திரிகை ஆசிரியர் பீடங்களுடன் கொடுக்கல் வாங்கல்களைச் (Dealings) செய்வது என்பதிலேயே தங்கியுள்ளது என்ற மாயை பலரிடம் உள்ளது.


பெரும்பாலான மல்யகக் கலைஞர்களின் அரசியலும் கேள்விக்குரியது. ஏழை மலையக மக்களின் அறியாமையை பயன்படுத்தி இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இன்று வரை தொண்டமான் தலைமையிலான இ.தொ.காவை கேள்விக்குட்படுத்தி மக்கள் முன் அம்பலப்படுத்துவதற்குப்பதிலாக இ.தொ.காவுடன் சமரசம் செய்யும் போக்கையே பெரும்பாலான சமகால மலையகக் கலைஞர்கள் கொண்டுள்ளனர். இதன்மூலம் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை மட்டும் முன்னேற்றிக் கொண்டார்கள். தெளிவத்தை ஜோசப் போன்றவர்கள் தொண்டமான் வழங்குகிற எல்லா விருதுகளையும், கௌரவிப்புக்களையும் மறுக்காது ஏற்றுக்கொண்டனர். இன்று 50 ஆண்டுகளுக்குப்பிறகு மலையக மக்களே தொண்டமானின் சுயரூபம் தெரிந்து அவரை நிராகரித்த பின்னரே அந்தனி ஜீவா போன்றவர்கள் தொண்டமானை விமர்சிக்கத் துணிகிறார்கள். மக்கள் நிராகரித்த பின்னர் தான் கலைஞர்கள் நிராகரிக்கிற மறுதலை அவலம் மலையகத்தில் மட்டுமே நிகழமுடியும்.

முன்னுரையிலும் தெளிவத்தை ஜோசப் ''இன்றைய வரையிலான இம்மக்களின் (மலையக - க-ர்) பரிதாப நிலைக்கு இலங்கை - இந்திய அரசாங்கங்கள்நேரிடையாக ஈடுபடாமலும், ஏனோ தானோவென்று காலத்தைக் கழித்துக் கொண்டிருந்ததுமே முக்கியகாரணியாகும்'' என்று குறிப்பிடுகிறார். ஆனால் மலையக மக்களைப் பிரதிநித்துவப் படுத்துகிறவரும் எல்லாக்கட்சி ஆட்சியின் போதும் மூத்த அமைச்சராக இருக்கிறவரும் மலையக மக்களின் முன்னேற்றத்திற்காக பேரம் பேசக் கூடிய வல்லமையும், வசதியும் உடையவருமான தொண்டமான் இவ்வல்லமையையும், வசதியையும் பயன்படுத்தி தனது குடும்பத்தையே முன்னேற்றினார் என்பது பற்றி ஜோசப் ஒரு வரிதானும் எழுதத் துணியவில்லை.

மானுட விடுதலைக்காக அதிகாரத்தோடு அறைகூவல் விடுத்து எந்த சமரசமும் செய்துகொள்ளாது இறுதி வரையும் போர்க்குணத்தோடு வாழ்ந்து மடிந்த ஒரு உன்னத கலை மரபு ஒன்று கோ. நடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை, என்.எஸ்.எம். ராமையா என மலையகத்தில் இருந்திருக்கிறது. இந்த மரபு இன்று ஜோசப் என்று வருகிறபோது சமரசத்துடன் முடிந்து போனதுதான் சோகம். இதனால் ஆற்றலும், திறமையும் மிக்க எத்தனையோ மலையகக் கலைஞர்கள் பாழாகுகின்றார்கள். நல்ல உதாரணம் மாத்தளை சோமு.

இடையில் இவ்விதம் வந்தாலும் அந்த நம்பிக்கை தருகிற ஒரு இளைய தலைமுறையினரும், இல்லாமலில்லை. ஜோதிக்குமார் முதலியவர்கள் சம்பந்தப்பட்ட நந்தலாலா வட்டம்தான் அது. இப்போதைக்கு சி.வி.வேலுப்பிள்ளை மரபை தொடர்கிறவர்கள் இவர்கள் மட்டுமே.

குறைபாடுகளுக்கு மத்தியிலும் தெளிவத்தை ஜோசப் எல்லா மரபினரையும் உள்ளடக்கி தொகுத்தது என்பதால் இந்நூல் முக்கியமானதும் தவிர்க்க இயலாததும் ஆகும். ○



# நிறம் மாறும் மனிதர்!

அண்மையில் நடைபெற்ற கம்பன் விழா மிகவும் கோலாகலமாக கொழும்பில் நடந்து பலரை மகிழ்வித்தது. இதுபற்றி சில கேள்விகள். கம்பனின் இலக்கியத்தை இடதுசாரிகள் எனக் கூறிக்கொள்ளும் முற்போக்கு எழுத்தாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்களா? உலகில் இரண்டு வர்க்கம் தான் இருக்க முடியும். ஒன்று உறிஞ்சும் வர்க்கம் (முதலாளி) மற்றையது உழைக்கும் வர்க்கம் (தொழிலாளர்)

கம்பனின் இராமயணம் யாரைப் பற்றியது? யாருக்குச் சேவை செய்தது? சாதாரண மக்களால் படித்து விளங்கிக் கொள்ள முடியுமா? இது கம்பனின் காவியமா? அல்லது வால்மீகியினதா என்பது மறுபுறம் சிந்திக்க வேண்டியது.

பிரேம்ஜியும் காலம் காலமாக உழைக்கும் மக்களுக்காக சேவை செய்த மல்லிகையின் ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களும் இதை எப்படி ஏற்றுக்கொண்டார்கள்? மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

இவ் இலக்கியம் பெரியார் அண்ணா காலத்தில் அக்கு வேறாக ஆணி வேறாக விமர்சிக்கப்பட்டதை இவர்கள் அறியரோ? கம்பன் எந்த வர்க்கத்திற்கு விசுவாசமாக சேவை செய்தாரோ அவ்வர்க்கத்தின் கபட சூழ்ச்சியாலே அவருடைய மகன் அம்பிகாபதியை இழந்தார். இது கூட இவர்களுக்கு ஞாபகம் வரவில்லையா? ஏன் கம்பனால் மக்களுக்குக் காவியம் எழுத முடியவில்லை. எழுதியிருந்தால் அவர் யாருக்குச் சேவை செய்தாரோ அவர்களாலேயே இரையாக்கப்பட்டிருப்பார். இது நான் கூறி தெரிய வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. பாவங்கள் புகழ் பெருமைக்கு அடிமையாகி விட்டனர் போலும்.

வடக்கைத் திரும்பிப்பாருங்கள் எவ்வளவு தமிழ் மக்கள் சீரழிந்து வீடிழந்து தெருத்தெருவாக அலைந்து திரிகிறார்கள் என்று. மருந்துவ வசதியின்றி எத்தனை பேர் இறந்துள்ளனர் என்று. எத்தனை மக்கள் சிறைச்சாலையில் கொல்லப்பட்டும் சித்திரவதைப்பட்டும் அல்லல்படுகிறார்கள். எத்தனைபெண்கள் அந்நியப்படையினராலும் இலங்கைப் படையினராலும் வாழ்விழந்து, உயிரிழந்து போனார்கள். இது ஒன்றும் இவர்கள் கண்ணுக்குத்தெரியவில்லையா? இந்த மேமன் கவி கூட இவர்களின் மாயைக்குள் மாண்டு போனாரே என்று நினைக்கவே கவலையாக உள்ளது. மேமன் கவியவர்களே, சரிநிகர் பத்திரிகையில் வந்த கோணேஸ்வரியின் கவிதை பற்றி எவ்வளவு விமர்சனம் நடைபெற்றது. இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. இது பற்றி ஒரு வரிகூட கவிஞராக இருந்தும் உங்களால் எழுத முடியவில்லை. அந்தக் கோலத்தில் சிவப்பு, பச்சை மஞ்சள், நீலம் என்ற நிறங்களாக கவிபாடியுள்ளீர்கள். இதுதானா இன்றுள்ள பிரச்சினை சற்றுச்சிந்தியுங்கள். யாருக்கு நீங்கள் சேவை செய்தீர்கள் என்று?

உங்களுக்கு அணியப்பட்ட பொன்னாடைப்போர்வையின் விலை என்ன? இவ்விழாவுக்கு செலவு செய்த செலவில் சிவப்பு சிலுவை இயக்கத்தினர் ஊடாக எவ்வளவு உதவி செய்திருக்கலாம். எவ்வளவு துயருற்ற மக்களின் கண்ணீரைத் துடைத்திருக்கலாம். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இவ்விழா இந்நிலையில் வாழும் தமிழ் மக்களுக்கு அவசியம் தானா?

**ஞானம், பத்தரமுல்ல**

# முஸ்லிம் அலகை எதிர்ப்பவர் யார்?

சரிநிகரில் ஸிராஜ் மஹ்ஹூர் அவர்கள் எழுதிய கட்டுரையை நன்கு கருத்தூன்றிப்படித்தேன். இலங்கைக்குச் சுதந்திரம் பெற்றுத்தந்த முஸ்லிம் தமிழ் பரம்பரையினரை முதலில் நினைவுகூரவேண்டும். வாபிச்சி மரைக்கார், குஞ்சலிமரைக்கார், சித்தி லெப்பை, ஒறாபிபாஷ்ஷா, ஜாயா, தென்னிலங்கையர் பரம்பரையில் வந்தவர் அமைச்சர் பௌசி அவர்கள். அனுஸ் லெப்பை, காரியப்பர் வழி தென்கிழக்குப் பரம்பரையில் வந்தவரே அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள். தமிழ் பேசும் மக்களுக்கு 50களில் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் தமிழ்க்காங்கிரசும், எஸ்.ஜே.வி செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக்கட்சியும் ஏட்டிக்குப்போட்டியாகச் செயல்பட்டன. தமிழரசுக்கட்சி மாத்திரமே வடக்கு கிழக்கு முஸ்லிம்களைப் பெரும்பாலும் கவர்ந்தது.

காரியப்பர், முஸ்தப்பா, மேர்சா- மஜீத் அகமது, மன்சூர், லத்தீப் சின்ன லெப்பை, முஹம்மதலி போன்றவர்களும் தமிழரசுக்கட்சி சார்புகளில் வென்று ஐ.தே.கட்சியிலும், ஸ்ரீ.ல.சு. கட்சியிலும் மாறிமாறி வட-கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் இறைமையையும் உரிமையையும் விற்பதற்கு தொட்டிலாட்டி மிட்டாசிமாலை போட்டு அரை மந்திரிகளாக்கியவர்களில் இன்று பௌசியும் ஒருவர்தான்.

பட்டிப்பளை- படுவான்கரை- மட்டக்களப்பு - திருகோணமலை, அல்லை, கந்தளாய், எனக்கிழங்கிலங்கை தமிழ் பேசும் மக்களின் குறிப்பாக முஸ்லிம்களின் பரம்பரை முதுசொம்களான காணிகள், தோட்டங்கள், பல்லாயிரம் சொத்துச்சுகங்களைப் பறித்து சிங்கள மக்களை வலுக்கட்டாயப்படுத்திக் குடியேறச் செய்தவர்கள் தென்னிலங்கை முஸ்லிம் தலைவர்களே தான்.

மேல் முஸ்லிம் ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எம்.எஸ்.காரியப்பர். அக்காலங்களில் தமிழரசுக் கட்சியினரை விரட்டி தேர்தலில் வென்றபின் சுதந்திரக்கட்சிப் பிரதமர் பண்டாரநாயக்கவுடன் தரகுவேலைபார்த்தவர்களுள் பதியுதீன் மஹ்முத் குறிப்பிடத்தக்கவர். 66இல் இஸ்லாமிய சோஷலிசமுன்னணி அமைத்தும் எம்.எச்.முஹம்மது மார்க்சிய எதிர்ப்பு முன்னணி அமைத்தும், முஸ்லிம்களின் உரிமைகளைச் சிங்களப் பேரினவாதிகளுக்கு விற்றுப்பிழைத்து மந்திரிகள்ரான துரோகிகள் என இவர்கள் தூற்றப்பட்டார்கள்.

52லிருந்து மசூர்மௌலானா, முஹம்மதலி, லத்தீப் சின்னலெப்பை போன்றவர்கள் தமிழரசுக்கட்சியில் சேர்ந்து முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவும் 50களிலிருந்து எங்களின் பட்டிப்பளை படுவான்கரை காணிகளை மீட்டெடுக்கப் போராடினோம்.

தொடர்ந்து டட்லி -செல்வா, பண்டா - செல்வா ஒப்பந்தங்களாலும் மஹமுது, முஹம்மது, ஹமீத், ராசீக், கலில் ஜாயா, பௌசி போன்றோர்களாலும் தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளைப்பெறமுடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தனர்.

ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் 80களில் வேகந்தைப் பள்ளிவாசலில் முஸ்லிம்களைச் சுட்டுத்தள்ளினர். அஷ்ரஃப் தலைமையிலே முஸ்லிம் இளைஞர்கள் நீதி கோரி ஊர்வலம் போக அவர்களைக் கைது செய்து நாலாம்மாடியில் விசாரித்தது அரசு. அப்போதைய பிரதமர் ஜெயவர்தன அஷ்ரஃப்பை நீதியானவர் என விடுதலை செய்தபின் அப்போது கொழும்பு மேயராக இருந்த ஏ.எச்.எம்.பௌசி அவர்களுக்கு (சுதந்திரக் கட்சி) இருந்த முஸ்லிம்களின் மதிப்பும் மரியாதையும் தவிடுபொடியாகி அஷ்ரஃப்பின் பக்கமே சாய்ந்தது. அப்போது முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பில் ஒரு கலை இலக்கிய மன்றமாகத்தானிருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பா, கல்முனையா, என்று 80களில் பத்திரிகைகள் விமர்சித்த செய்திகளில் நாங்கள் வலுப்பெற்றோம். அஷ்ரஃப் முகைதீன், மஹார்றூப் கரீம், அகமது லெப்பை, சேகுஇஸ்ஸதீன், மருதூர்கனி, வாணர் போன்றவர்கள் கல்முனை உவெஸ்லிக் கல்லூரியில் ஆரம்பித்தோம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை.

87ல் பொதுத்தேர்தலில் மாபெரும் சிங்கள ஆட்சியின் அமைச்சர்களான மன்சூர், முஸ்தப்பா, மஜீத் போன்ற தரகர்களுக்கெதிராக முஸ்லிம் காங்கிரஸ் இளந்தளிர் அஷ்ரஃப் தலைமையில் பலகளம் பந்தாடி வென்றெடுத்தோம். மதம் கொண்ட யானைகளைத் துரத்தியடித்தோம். இன்று அந்தத் தரகர்களுடன் இந்தத்தரர்களும் சேர்ந்து முஸ்லிம் காங்கிரசின் ஜீவநாதக்குரலான முஸ்லிம் அலகை எதிர்க்கின்றனர்.

தென்கிழக்கு முஸ்லிம்கள் மட்டு ா முழு இலங்கையிலுமுள்ள புத்திஜீவிகளும், அதிகாரப்பரவலாக்களில் முஸ்லிம் அலகு கேட்பதை ஆதரிக்கின்றனர். எதிர்ப்பவர்கள் பௌசி முஹம்மது -மன்சூர், அஸ்வர், ஹமீத் போன்றவர்களே.

*மருதூர்வாணர்*

# துன்பம் சூழ்ந்த வேளையில் எங்கு சென்றாயோ?

துன்பமும் துயரமும் சூழ்ந்த நிலையில் கடந்த பத்தாண்டு காலம் மக்கள் இருந்தவேளையில் தமிழக அரசின் விருந்தாளிகளாக இருந்த ஆனந்த சங்கரி ஆகிய நீங்கள் இன்று வந்து யாம்,தமிழர்களின் காவலர்கள் என இனியும் கூற வெட்கமில்லையா? கூட்டணியில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட ஆட்கள் வருகிறார்கள் இல்லையென அறிக்கை விட்ட தாங்களே அரச பாதுகாப்புடன் வந்து மக்கள் விரும்பாத தேர்தலில், பங்குகொண்டீர்கள்? தமிழ் மக்கள் பாதுகாப்பு படையினரால் கைத்ாகி சிறையில் வாடியபோது சட்டதரணிகள் பல்ர் நீதிமன்றங்களில் வாதாடினார்கள். கொல்லப்பட்ட கைதடி கிருஷாந்தியும், தாயும் சகோதரன் கூட்டுறவு ஊழியர் ஆகியோர் நலனைக்கவனிக்க குமார் பொன்னம்பலம் விநாயகமூர்த்தி, பூபாலன் திருக்குமாரன் ஆகியோர் முன்வந்தனர் நீங்கள் சட்டத்தரணியாக இருந்தும் என்ன செய்தீர்கள்?

உள்ளூராட்சித்தேர்தலில் வாக்களிக்காத மக்கள் தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் தங்கட்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

**கே. செந்தில்நாதன், மிருசுவில்**

# நந்தவனத்து...

பரிமாணத்தை ஏற்படுத்தியிருக்கிறார் ஜீ. நாகராஜன். அவரது சிறுகதைகளை ஒன்றாகச் சேர்த்து வாசிக்கும்போது, தமிழ்ச் சிறுகதைகளின் மூலங்களான புதுமைப்பித்தனின் மௌனி, கு.ப.ரா. ஆகியோர்பலமாக இட்டுச் சென்றுள்ள அத்திவாரங்களின் மீது தானும் சில செங்கற்களை அழகாக அடுக்கிச் சென்றிருக்கிறார் என்பது புலப்படும். அப்படி ஒரு காலம்! அப்படி ஒரு பிறவி!, மிஸ் பாக்கியம், பச்சக்குதிரை, அங்கும் இங்கும், பூர்வாசிரமம், நான் புரிந்த நற்செயல்கள், எங்கள் ஊர், யாரோ முட்டாள் சொன்ன கதை, இளிந்த சாதி, டெர்லின் ஷர்ட்டும் எட்டு முழ வேட்டியும் அணிந்த மனிதர், மனிதன், இலட்சியம், ஆகிய கதைகள் சிலாகித்துச் சொல்லக்கூடிய கதைகள்.

பெரும்பாலும் ஆண், பெண் உறவுகள் பற்றியும், அவ்வுறவுகளின் பிறழ்வுகள் பற்றியுமே எழுதிச் சென்றுள்ள ஜீ. நாகராஜனின் பாத்திரங்களை நினைவிலிருந்து துரத்துவது கடினம்; தமது அவலங்கள் மூலம் எப்போதும் எம்மனதைப் பிராண்டுபவை அவை. அதிலும் அவரது பெண் பாத்திரங்களைப் பற்றி தனியாக ஒரு ஆய்வே செய்யலாம்.

அவரது முழுப்படைப்புக்களும் அடங்கிய தொகுதியிலுள்ள, சிறுகதைகளை வாசிக்கத் தொடங்கும் போது இவ்வரிகளை தொடக்கத்தில் வாசிக்க நேரும்.

''ஒரு காட்டுலே ஒரு சிங்கமாம்; அதுக்கு மேலே சொன்னா அசிங்கமாம்' என்கிறான் கண்ணன்.

''ஒரு ஊரிலே ஒரு நரி; அதோட சரி'' என்கிறாள் ஆனந்தி.

ஆனந்தியும் கண்ணனும் ஜீ. நாகராஜனது குழந்தைகள்.

ஆனால் மேற்காட்டிய வரிகள் குழந்தைத் தனமானவையல்ல.

ஜீ. நாகராஜனின் படைப்புலகம் முழுவதும், மேற்கூறிய சில வரிகளில் இறுகப்பொத்திப் பிடிக்கப்பட்டது போலத்தோன்றுகிறது எனக்கு.

**ரஞ்சகுமார்.**

# 6வது...

4) உயர் தொழில் அல்லது வியாபாரத்தில் ஈடுபடுவதை பதிவு செய்வதற்கான உரிமை.

ஈ) பாராளுமன்ற உறுப்பினராக இருப்பின் அப் பதவியினின்றும் நீங்குதல் வேண்டும்.

**சத்தியப்பிரமாணம் எடுத்தல்**

மேலும் 6வது திருத்தத்தில் உள்ள இன்னோர் முக்கியமான அம்சம் சத்தியப்பிரமாணம் எடுத்தல் ஆகும். இதன்படி அரச அலுவலர், கூட்டுத்தாபன அலுவலர் சட்டத்தரணிகள், பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி சபை என்பனவற்றின் உறுப்பினர்கள் பிரிவினைக்கு ஆதரவாக இருக்க மாட்டேன் என சத்தியப்பிரமாணம் எடுத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் நான்காவது அட்டவணையிலுள்ள சத்தியப்பிரமாண வாசகம் பின்வருமாறு அமைந்திருந்தது.

"..................ஆகிய நான் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும், இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலேயோ ஆதரவு அளிக்கவோ, நிதி உதவவோ, ஊக்குவிக்கவோ, பரிந்துரைக்கவோ மாட்டேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன், சத்தியம் செய்கிறேன்."

இச் சத்தியப்பிரமாணத்தை பதவியில் இருப்பவர்கள் இத்திருத்தம் அமுலுக்கு வந்த ஒரு மாதகாலப்பகுதிக்குள்ளும் புதிதாக பதவி ஏற்பவர் பதவியினை ஏற்கும் போதும் செய்து கொள்ளல் வேண்டும் இல்லாவிடில் பதவியை இழந்தவர்களாக அவர்கள் கருதப்படுவார்கள் எனவும் கூறப்பட்டது.

தமிழர்களது அடிப்படை உரிமைகளையே மறுதலித்த இந்த 6வது திருத்தச் சட்டம் தமிழர்களது பகிரங்க அரசியலை இல்லாமல் செய்தது. அரச உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் என்போர் பகிரங்கமாக தனிநாட்டுப் பிரச்சாரம் செய்வதிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். தமிழ்த் தொடர்பு சாதனங்கள் தனி நாட்டுக்கு ஆதரவாக எழுதுவதை நிறுத்திக் கொண்டன. பல்கலைக்கழக தமிழ் அறிவுஜீவிகளும் மெல்ல ஒதுங்கிக் கொண்டனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் அமைப்புகளை தலைமறைவாகப் போகும்படி இவை நிர்ப்பந்தித்தன. இதில் மிகப் பெரிய நட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே ஏற்பட்டது. அவர்கள் தனி நாட்டுக்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்ய முடியாது தமிழ் நாட்டிற்கு பயணமாகினர்.

பின்னர் அவர்கள் திரும்பி வந்து இவ் ஏற்பாடுகளின் கீழ் தற்போது சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர் என்பது அவர்களது பிந்திய வரலாறு.

ஆனாலும் அரச எதிர்பார்த்தது போல இத் திருத்தம் அரசுக்கு பெரிய வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவில்லை, மாறாக போராட்டம் மேலும், மேலும் உக்கிரமடையத் தொடங்கியது. தமிழ் மக்களின் மேல் தட்டு அணி சற்று பின் வாங்கினாலும் ஏனைய அணிகள் திரளாக போராட்டத்தில் இணைந்து கொண்டன. போராட்டம் தனது பாதையில் அடுத்த கட்டத்தினை தாண்டத் தொடங்கியது.

Registered as a newspaper in Sri Lanka.

## வவுனியா:
# ரயரில் எரிந்த சடலங்கள்!

மர்மக் கொலைகள் வவுனியாவில் மீண்டும் தலை காட்டத் தொடங்கி உள்ளன. கடந்த வாரம் இராசேந்திரன்குளம் என்னும் இடத்தில் இரண்டு மனித உடல்கள் எரிக்கப்பட்டுக் கிடந்ததை ஊர் மக்கள் கண்டு தகவல் தெரிவித்துள்ளார்கள்.

அடையாளம் காணமுடியாத அளவிற்கு முழுமையாக எரிந்து கிடந்த இச் சடலங்கள் எப்போது, யாரால் எரிக்கப்பட்டது என்பது மர்மமாகவே உள்ளது. கடந்த பெப்ரவரி 2 திங்கள் இரவு இந்த எரிப்புச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வவுனியா- செட்டிகுளம் வீதியில், நெளுக்குளத்திற்கு அப்பால் இராசேந்திரன் குளம் என்னும் ஊர் உள்ளது. இது இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமாகும். இப்பகுதியில் இராணுவம் அடிக்கடி இரவு நேரங்களில் வீதி ஓரப் பற்றைகளில் பதுங்கி இருந்து புலிகளின் நடமாட்டங்களை அவதானிப்பது வழக்கமான செயல் . இதனை இராணுவத்திற்கு உதவியாக இருந்து, புலிகளின் செயற்பாடுகளைக் கண்டு பிடிக்கவும், கட்டுப்படுத்தவும் உதவுகின்ற தமிழ்க் குழுக்களும் ஊர்ஜிதம் செய்துள்ளன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், ஆயுதம் தாங்கிச் செயற்படுகின்ற தமிழ் குழுக்களுக்கோ அல்லது இராணுவத்திற்கோ தெரியாமல் எப்படி இந்த இரட்டைக் கொலைகள் இடம் பெற்றன என்பது பலருக்கும் புரியாத புதிராகவே உள்ளது.

எரிந்த சடலங்களின் எச்சங்களை பொலிசார் வவுனியா வைத்தியசாலையில் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளார்கள். இச்சடலங்களுக்கு உரியவர்கள் தொடர்பாக எதுவிதமான தகவல்களும் இன்னும் வெளியாகவில்லை. இராசேந்திரன்குளம் பகுதியிலும் சரி, ஏனைய பகுதியிலும் சரி, எவரும் காணாமற் போனதாகக்கூட தகவல்கள் வெளியாகியதாகவும் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையில், வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சடலங்களின் எச்சங்களைக் கொண்டு, எப்படி மரணம் நேர்ந்தது என்றோ அல்லது எப்போது கொல்லப்பட்டர்கள் என்பதையோ வைத்தியர்களினால் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த அளவிற்கு அந்தச் சடலங்கள் எரிந்து போயிருந்தன. எனினும் சடலங்களில் மிஞ்சியிருந்த பகுதிகளை இரசாயன பகுப்பாய்வாளரின் பரிசோதனைக்காக அனுப்பி வைப்பது தொடர்பாக வவுனியா நீதி மன்றத்தினால் உத்தரவிடப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகவில்லை.

மனித உயிர்கள், அதுவும், தமிழர்களின் உயிர்களுக்கு எந்தவிதமான பெறுமதியும் கிடையாது என்பதை இந்தச் சம்பவம் மீண்டும் ஒரு முறை நிருபித்துள்ளது.

வவுனியாவில் தமிழ் மக்களுக்காகப் போராடுகின்றதாகச் சொல்லுகின்ற, தமிழ் குழுக்கள்- தமிழ் அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். இவர்கள் தமிழ் மக்களுக்காகவே அரசியல் நடத்தி தேர்தல்களில் போட்டியிடுவதாகச் சொல்கின்றார்கள். உள்ளூராட்சி சபைகளிலும் சரி, பாராளுமன்றத்திலும் சரி அவர்களுக்காகவே ஆசனங்களை இக்கட்சிகளின் பிரதிநிதிகள் அலங்கரிப்பதாகச் சொல்கின்றார்கள். ஆனால், அந்த இரட்டைக் கொலைகள் குறித்து எந்த ஒரு அரசியல்வாதியும் கூட பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகளை எந்த ஒரு கேள்வியும் கேட்பதற்கு மறந்து போனர்கள். அது ஏன் என்பதும் எவருக்கும் தெரியாது.

கடந்த 1994 ஆம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், பாராளுமன்ற தேர்தல் என்பவற்றோடு ஆரம்பமாகிய வவுனியாவின் இனந்தெரியாத கொலைகள் இப்போது, 40ஐ நெருங்கி விட்டது. ஆனால், இதுவரைக்கும் எந்த ஒரு கொலையும் உரிமை கோரப்படாதது மட்டுமல்ல, பாதுகாப்பு படையினராலோ அல்லது பொலிசாரினாலோ துப்புத்துலக்கப்படவும் இல்லை. இது ஏன் என்று கேட்பதற்கும் மக்களின் நலன்களில் அக்கறை உள்ளவர்கள் என கூறப்படுபவர்கள் முயற்சி செய்ததாகவும் இல்லை.

இது இப்படி இருக்க, கடந்த ஜனவரி மாதம் 23ம் திகதி வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள அகதி முகாம் ஒன்றில் இருந்து விசாரணைக்கென கூட்டிச் செல்லப்பட்ட இரண்டு இளைஞர்களுக்கு என்ன நடந்தது, எங்கே இருக்கின்றார்கள் என தெரியாமல் அவர்களது குடும்பத்தினர் தவிக்கின்றார்கள். மனித உரிமைகள் அமைப்பு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றிக்கும் அவர்கள் முறையிட்டுள்ளார்கள். இருப்பினும், ஆக்கபூர்வமான தகவல்கள் எதுவும் இன்னும் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப்பகுதியில் இருந்து விட்டு வவுனியா அகதி முகாமில் வந்து தங்கி இருந்த போது ஒருவரும், நெடுங்கேணியில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வந்திருந்தபோது மற்றவரும் கைது செய்யப்பட்டதாக அவர்களது குடும்பத்தினர் தெரிவித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான கதிர்காமத்தம்பி செந்தில்குமார் (23), நெடுங்கேணியைச் சேர்ந்தவரான சுப்பிரமணியம் தர்மபாலசிங்கம் (22) ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு காணாமற் போயுள்ளார்கள்.

அன்றிரவு 11 மணியளவில், இந்த அகதி முகாமின் வெளி மதிலை ஏறிக் கடந்து வந்த சிவில் உடையினரே இவர்களைக் கைது செய்து விசாரணைக்காகக் கொண்டு சென்றதாகவும் உறவினர்கள் முறையிட்டுள்ளார்கள்.

மனித உரிமைகள் பற்றி வாய்கிழிய பேசுபவர்கள், போரினால் பாதிக்கப்பட்டு, துன்ப நிலைமைகளுக்கு மத்தியில் இடம் பெயர்ந்து வந்தவர்களைக் கைது செய்து கொண்டு சென்றதைக் கூட ஒப்புக் கொண்டு தகவல் தெரிவிக்க முடியாதவர்களாக உள்ளார்கள் இவர்களை நம்பி எவ்வாறு தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தைக் கழிக்க முடியும்?

-வீனோ

## ஏறாவூர்:
# ராசிக் ஜனநாயகம்!

மார்ச் 7 அதிகாலை 2.30மணியளவில் ஏறாவூர் தளவாயில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் செபஸ்தியன் புஸ்பராணி (38), செபஸ்தியன் சுபாஜினி (8). சுட்டுக் கொன்றவர் ராசிக் குழுவைச் சேர்ந்த கண்ணன் அல்லது நிதி என்றழைக்கப்படுபவர். இவருடன் ராசிக்குழுவைச் சேர்ந்த இன்னும் இருவரும் கூடவே சென்றிருக்கிறார்கள்.

'வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் கதவில் தட்டும் சத்தம் கேட்டது. எனது தாயார் எனது தங்கையைக் கூட்டிக்கொண்டு போய் கதவைத்திறந்தார். வெளியே எனது கணவரும் (சிங்கராஜா கண்ணன்) வேறு இருவரும் துப்பாக்கியோடு நிற்பதைக் கண்டேன். அவர்கள் அம்மாவைத் துப்பாக்கியால் சுட்டனர். அவர் ஓடி வந்து எங்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டார். தொடர்ந்து எங்களை நோக்கித் துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டது. எங்களைச் சுடவேண்டாம் என நாங்கள் அலறினோம். சிறிது நேரத்தின் பின் எனது குழந்தை மாத்திரம் அழுது கொண்டிருந்ததால் 'பிள்ளை மாத்திரம் தப்பி விட்டது' எனக்கூறிக் கொண்டு மூவரும் சென்றனர். போகும் போது எனது அக்காவின் வீட்டின் மீதும் சுட்டுக் கொண்டு சென்றனர்' என்கிறார் செபஸ்தியன் சுமதி (17).

சிங்கராஜா கண்ணன் ஆறுமுகத்தான் குடியிருப்பு சவுக்கடியைச் சேர்ந்தவர். 19.03.96இல் சுமதியைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 7மாதக் கைக்குழந்தை ஒன்று உள்ளது.

திருமணம் முடித்து சிறிது காலத்திலேயே குடும்பத்துள் தகராறுகள் தோன்றின. சுமதி 3மாதக் கர்ப்பிணியாக இருக்கையில் கண்ணன் சுமதியைக் கத்தியால் தலையில் வெட்டியதால், சுமதி ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறார்.

கண்ணன் மூன்று மாதங்களுக்கு முன்பே ராசிக்குழுவில் சேர்ந்திருக்கிறார். சம்பவ தினத்துக்கு சில நாட்களுக்கு முன் வந்து 'உங்களை குடும்பத்துடன் அழிப்பேன்' என்று மிரட்டியிருக்கிறார்.

சுமதியின் தகப்பனார் ஜோசப் செபஸ்தியனும் குடும்பத்தகராறு காரணமாக 1987ல் ஈ.பி.ஆர்.எல். எப்பினால் சுட்டுக் கொல்லப்பட்டார். செபஸ்தியனுக்கும் அவரது அண்ணன் பிள்ளைகளுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறினால் ஈ.பி.ஆர்.எல். எப்பிலிருந்த அண்ணன் பிள்ளைகள் அவரை தளவாய் மாரியம்மன் கோயிலடியில் வைத்து சுட்டுக் மின்கம்பத்தில் கட்டித் தூக்கினர். செபஸ்தியன் தேசத்துரோகி ஆக்கப்பட்டு கதை முடிக்கப்பட்டது.

புஸ்பராணியையும், சுபாஜினியையும் கொலை செய்த கண்ணனையும் மற்றும் இருவரையும் கைது செய்யச் சென்றவர்களிடம் மூவரும் ஆயுதங்களுடன் தப்பி ஓடிவிட்டதாகச் சொல்லியிருக்கிறார் ராசிக்.

97 ஒகஸ்ட் 11இல் ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலத்தில் ஆண்டு 11 இல் கல்வி கற்கும் மகிழவெட்டுவானைச் சேர்ந்த மாணவன் எஸ். நடேசானந்தம் இதே ராசிக்குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டு புலி என்று முத்திரையும் குத்தப்பட்டார். இச்சம்பவத்தில் மனைவியும், சகோதரரும் உயிர் தப்பியிருக்காவிட்டால் புலிகள் தான் சுட்டுக் கொன்றார்கள் என்றிருக்கக் கூடும்.

சரிநிகர் 125வது இதழில் 'யார் இந்த ராசிக்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரைக்கு பதிலளித்து 130வது இதழில் 'நான் ஒன்றும் கொலை வெறிபிடித்த மனநோயாளி அல்ல' என்றும், 'நான் ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுப்பவன்' என்றும் முழங்கியிருந்தார்.

அவருடையதும், அவருடைய குழுவினரதும் ஜனநாயகத்தை என்ன பெயரிட்டு அழைக்கலாம்?

ஈ.பி.ஆர்.எல்.எப்பிடம் கேட்டால் சமாதானத்துக்கான ஜனநாயகம் என்பார்களோ?

# தம்பலகாமம்:
# சார்ஜன்ட் எங்கே?

கடந்த ஜனவரி 31ம் திகதி திருகோணமலை தம்பலகாமத்தில் தமிழ் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகச் சந்தேகிக்கப்படும் சாஜன்ட் மஞ்சுள என்பவர் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல மாதங்களுக்கு முன்பு அவர் ஊர்காவற்படையினராகச் செயற்பட்டபோது மறைந்திருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஐவரைக் கொன்றதற்காக இந்நபருக்கு ருபா 1,25,000மும், பொலிஸ் சேவைக்குப் பதவி உயர்வும் கிடைத்ததாகத் தெரிய வருகிறது.

அதன்பின்பு ஹய் மொறால் யூனிட் என்ற பெயரில் ஊர்காவற் படையினர் 40பேரைக்கொண்ட பிரிவொன்று அமைக்கப்பட்டு சாஜன்ட் மஞ்சுள அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி 31, படுகொலைக்கு முன் பொலிசாருக்கும் - பொலிசாருக்கும் இடையேயான போலியான துப்பாக்கிப்பிரயோக நாடகம் மேற்கொள்ளப்பட்டதும், அதன் பின்பு அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதும் மென்மேலும் பதவி உயர்வுகளையும், சன்மானத்தையும் எதிர்பார்த்து திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒன்றே என இப்போது தெரியவந்துள்ளது. முன்னைய சம்பவமும் அதுபோன்ற பதவியுயர்வு, சன்மானம் ஆகியவற்றைப் பெறுவதற்காகச் செய்யப்பட்ட படுகொலையே எனவும் தெரிய வந்துள்ளது.

இதற்குப் புறம்பாக பயங்கரவாதிகளின் தாக்குதலொன்றாக இதனைக் காட்டுவதற்காகத் திட்டமிடப்பட்ட பொலிஸ் - பொலிஸ் தாக்குதலுக்குச் செலவானதாகக் கூறிப்பெருந்தொகை துப்பாக்கிக்குண்டுகள், மற்றும் மோட்டார், குண்டுகள் விற்பனை செய்யத் தயார் செய்யப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது. இவ் வியாபாரத்தில் பொலிசாரின் உயர் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டுள்ளதாக இப்போது தெரிய வந்துள்ளது.

இதே சமயம் கடந்த சில தினங்களுக்கு முன் தம்பலகாமத்திலுள்ள பிரதேச செயலாளர் காரியாலயத்துக்கு வந்த ஆயிரக்கணக்கான ஊர்மக்கள் ''சாஜன்ட் மஞ்சுள எங்கே?'' எனக் கோஷமிட்டதாகத் தெரியவருகிறது.

# ரவியின் நகைச்சுவை!

பிரபாகரன், பால்ராஜ், பொட்டு அம்மான் மட்டுமன்றி தற்கொலை செய்த, செய்யவுள்ள அனைத்துப் புலிகளையும் அடக்கும் சிறந்த யோசனையொன்று லலித் முன்னணிப் பா.உ. ரவி கருணாநாயக்கவினால் முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட அனைவரது சொத்துக்களையும் அரசுடமையாக்க வேண்டும் என்ற இவ்யோசனையை அவர் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் குழுவிடம் முன்வைத்து அது நிறைவேற்றப்பட்டுள்ளது.

# ஜனசவியவிலும் வெட்டு!

ஜனசவிய பெறுநர்களுக்கு முன்னைய அரசு வழங்கிய ரூ. 2,500/= பணத்திலிருந்து சேமிக்கப்பட்ட ரூ.25,000/= பணத்துக்காக இதுவரை அவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த 250/= வட்டிப்பணத்தைச் செலுத்தாது வெட்டி நீக்கிவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

# யார் அந்த இனம்தெரியாதவர்கள்?

கேகாலை, அறநாயக்கா லேக்ஹவுஸ் பத்திரிகையாளரான பிரதீப் தர்மரத்ன மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் திணைக்களம் செயற்பட்ட விதம் சந்தேகத்துக்கு இடமானதாக உள்ளதாக கேகாலையைச் சேர்ந்த சட்டத்துறையைச் சேர்ந்த ஒருவர் கூறியுள்ளார்.

சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்பொன்றை நீதிவான் நீதிபதியொருவரின் முன்னிலையில் வைக்காது அதனைப் பொலிஸ் நிலையத்திலேயே நடத்தியமை அதற்கான காரணமாகுமென அவர் தெரிவித்தார்.

பிரதீப் தர்மரத்ன மீதான பொலிஸ் தாக்குதலைக் கண்டித்து சுதந்திர இயக்கத்தினரால் மக்களது பங்கு பற்றுதலுடன் கேகாலை நகரில் அண்மையில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடத்தப்பட்டது.

அவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட அதே தினத்தன்று இரவு பிரதீப் தர்மரத்னவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இதனைச் செய்தவர்கள் ''இனந்தெரியாத நபர்களாம்'' யார் இந்த இனந்தெரியாத நபர்கள்?

# திரும்பி வராத படையினர்!

இராணுவப் படையை கைவிட்டுச் சென்ற படையினருக்கு ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்புக் காலத்தில் (28.02.1998வரை) 4200 பேர் மட்டுமே மீள வந்து படையில் சேர்ந்துள்ளதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்ஹ தெரிவித்துள்ளார்.

சரியான எண்ணிக்கை இல்லாவிடினும் இராணுவத்தை விட்டுச் சென்ற படையினர் 6,000 -7,000 இற்கும் இடைப்பட்ட தொகையினர் இன்னும் படையில் வந்து சேரவில்லையெனவும் பிரிகேடியர் முனசிங்ஹ தெரிவித்தார்.

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன். இல. 07. கெகடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 10.03.98.